44608

புகழ் பூத்த தமிழர்

8914

Y73(P31)wx.
N50.2
101580

# கழ் பூத்த தமிழர்

286

## வ.ரா. சுந்தரராமன்

தொகுதி 2

ஸர் ஸி. வி. ராமன்

ஸர் ஸி. பி. ராமசுவாமி ஐயர்

டாக்டர் தி. விஜயராகவன்

திரு. வி. கல்யாணசுந்தர
...லியார்

44608.
Vol. 2
1950

...ராஜமையர்

...பரமஹம்ஸ
பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

ஸர் டி. விஜயராகவாசாரியார்

வ. ரா.

... தேசிகவிநாயகம் பிள்ளை

...சிவஷண்முகம் பிள்ளை

Y73(831) ...
N50.2
01580

...கள் வெளியீடு

# புகழ் பூத்த தமிழர்

(இரண்டாம் பாகம்)

வே. ரா. சுந்தரராமன்

OFFICE OF THE RE...
24 JUL 1950

உரிமை பதிவு]
கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை
[விலை ரூ. 1/-

முதற் பதிப்பு: பெப்ருவரி, 1950.

M. I. P. PROJECT
Microfilmed
TAMIL NADU ARCHIVES LIBRARY
101580
EGMORE, MADRAS

## சமர்ப்பணம்

என்னை ஈன்றபொழுது பெரிதுவந்த என் அருமைத் தாய் தந்தையர் காலஞ் சென்ற அம்பாள் அம்மாளுக்கும் ராம கிருஷ்ண ஐயருக்கும் இது அர்ப்பணம்.

PRINTED AT
THE MADRAS LAW JOURNAL PRESS,
MYLAPORE, MADRAS

M. I. P. PROJECT
Microfilmed.

# முகவுரை

செயற்கரிய செய்த பெரியார் பதின்மரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களை இச் சிறு புத்தகத்தில் கொடுக்கிறேன்.

"பெரியவர் சரிதை நம்மைப்
பெரியவ ராக்கி நாமே
அரியவாழ் நாளாம் பாலை
வனத்திடை யலைவோ ருக்குத்
துரிசற வழியைக் காட்டுஞ்
சுவடுறச் செய்யும் வன்மை
மருவலா மென்னு மெண்ணை
மனங் கொளச் செய்யு மன்னே"

என்னும் மொழிபெயர்ப்புச் செய்யுளில் சொல்லியிருப்பதுபோல் பெரியாரின் வாழ்க்கை பிறருக்குச் சுவடுபோல் அமைந்து உதவுகிறது. இவர்கள் கொண்ட முறைகளைப் பின்பற்றினல் நாமும் நம் வாழ்க்கையை, "தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலில் தோன்றுமை நன்று" என்னும் பொய்யாமொழிக் கேற்ப அமைக்கலாம்.

இப்பத்து வரலாறுகளுள் மூன்று (அதாவது 1, 3, 8) 'கலைமகளிலும்", நான்கு (அதாவது 2, 5, 6, 7,) 'பாரதமணி' யிலும் ஏற்கனவே வெளிவந்தவை. அவைகளைத் தத்தம் பத்திரிகைகளில் வெளியிட்டதற்கும், இப்போது புத்தக வடிவில் வெளிவரச் சம்மதித்ததற்கும் அவ்வப்பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு என் நன்றி. எஞ்சியிருக்கும் மூன்றும் (அதாவது 4, 9, 10,) முதல் முதலாக இப்புத்தகத்தில்தான் வெளிவருகின்றன.

இவைகளை நான் எழுதுவதற்குத் தக்க ஊக்கம் அளித்தவர்கள் 'கலைமகள்' ஆசிரியரான ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களும், 'பாரதமணி' ஆசிரியரான ஸ்ரீ கா. சி. வேங்கடரமணி அவர்களும், பிரபலத் தமிழ்நாட்டு எழுத்தாளர் ஸ்ரீ வ. ரா. அவர்களுமே. இம்மூவருக்கும் நான் கைம்மாறு செய்வது எவ்வாறு என்று தெரியாது மனம் ஏங்குகிறேன்.

சென்னை,
26-1-1950.

வே. ரா. சுந்தரராமன்

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பூமகளைக் கைவிட்ட பௌதிக சாஸ்திரி | 1 |
| சுதேச மன்னர்களின் சூத்திரதாரி . | 14 |
| அமெரிக்கர் அழைத்த இந்தியக் கணித ஆராய்ச்சிக்காரர் . . . . . | 21 |
| சாது முதலியார் . . . . . . . . | 34 |
| தமிழ் நவீனத்தின் தாய் . . . . | 42 |
| ஆராய்ச்சி மனப்பண்பு வாய்ந்த ஆதீனகர்த்தர் . . . . . . . | 52 |
| தேசாந்தரியான டெபுடி கலெக்டர் . | 63 |
| தமிழின் முதல் மறுமலர்ச்சி எழுத்தாளர் | 71 |
| கவிமணி . . . . . . . . . . | 81 |
| சபா நாயகர் . . . . . . . . . | 93 |

# புகழ் பூத்த தமிழர்

## இரண்டாம் பாகம்

## 1

## பூமகளைக் கைவிட்ட பெளதிக சாஸ்திரி

நம் நாட்டில் படிப்பில் துடியாயிருக்கும் சிறுவர்கள் ஒவ்வொருவரின் நோக்கமும் ஐ. ஸி. எஸ். முதலிய பெரும் பதவிகளை ஏற்கும் போட்டிப் பரீக்ஷைகளில் தேறி அப்பதவிகளை அடைவதுதான். ஐ. ஸி. எஸ். என்பதற்கு ஏறக்குறையச் சம அந்தஸ்துள்ளது இந்திய அரசாங்கத்தாரின் நிதி இலாகாவின் மேற் பதவிகள் அடங்கிய ஐ. ஏ. ஏ. எஸ். என்பது. ஒவ்வொரு வருஷமும் உயர்தரப் பரீக்ஷைகளில் புகழோடு தேறுபவர்களுள் பலர் இத்தகைய பதவிகளை அடைவது சகஜம். ஆனால் இப்பதவிகளுள் ஒன்று கிட்டியபின் அதை உதறித் தள்ளுவதென்பது மிகச் சிலரே செய்யக்கூடிய காரியம். தேச சேவைக்காக ஐ. ஸி. எஸ். பதவிகளிலிருந்து விலகியவர்கள் சிலர் ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சியிலுள்ள ஆர்வத்தினால் தூண்டப்பட்டு இத்தகைய பதவி ஒன்றைக் கைவிட்ட பெருமை உலகம் அறிந்த பெளதிக ஆராய்ச்சியாளரான ஸர் ஸி. வி. ராமன் என்பவருக்கே உரியது!

இவருடைய முழுப்பெயர் ஸர் சந்திரசேகர வேங்கட ராமன் என்பது. அதில் முற்பகுதியாகிய சந்திரசேகரன் என்பது இவருடைய தந்தையாரின் பெயர்.

இவர் ஸ்மார்த்தப் பிராம்மண மரபில் மழநாட்டுப் பிருகசரணம் என்னும் பிரிவில் தோன்றியவர். இவர் 1888-ஆம் ஆண்டு நவம்பர்மீ 7௨ திருச்சிராப்பள்ளியில் பிறந்தார். இவருடைய மூதாதையர் தஞ்சாவூர் ஜில்லா

வில் ஐயப்பேட்டைக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரைச் சேர்ந்தவர்கள். பரம்பரையாக விவசாயத்தையே தொழிலாகக் கொண்டவர்கள். இவருடைய தந்தையாராகிய ஆர். சந்திரசேகரையர் என்பவரே அக் குடும்பத்தில் முதல் முதலாக ஆங்கில மொழியைக் கற்றுத் தம்முடைய முன்னோரின் தொழிலான கிருஷியைக் கைவிட்டு உத்தியோகத்தைத் தேடியவர். வேங்கடராமன் அவருடைய இரண்டாம் மகனாகப் பிறந்தவர். இவர் பிறந்த போது அவர் உள்ளூரில் ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயராக இருந்துகொண்டே உயர்தரப் படிப்பும் படித்துக்கொண் டிருந்தார். இவருடைய தாய் பார்வதியம்மாள் திருச்சியில் வடமொழி நூற்பயிற்சியுள்ள ஒரு பிரபல குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுடைய தகப்பனார் பாதசாரியாகவே வடக்கே வங்க தேசத்தில் உள்ள நவத்வீபத்துக்குப் போய் நியாய சாஸ்திரம் பயின்று மறுபடியும் தம்முடைய ஊருக்கு நடந்தே வந்தாராம். எனவே தாய் வழி தந்தை வழி இரு வழியிலும் ஓர் அரிய மனோதிடமும் அறிவுப் பசியும் இவருக்குப் பிதுரார்ஜிதமாகக் கிடைத்தன.

ராமன் பிறந்த சில நாட்களுக்கெல்லாம் இவர் தகப்பனார் தாம படித்துக்கொண் டிருந்த உயர்தரப் பரீக்ஷையில் தேறிப் பி. ஏ. பட்டம் பெற்று உள்ளூரில் ஒரு கல்லூரியில் பௌதிக சாஸ்திர ஆசிரியரானார். இதோடு இசையில் ஆவல் இருந்தபடியால் பிடிலில் இசை பழகிக்கொண் டிருந்தார். ராமனுடைய கவனம் இசைக்கருவியிலும் பௌதிக சாஸ்திரத்திலும் சென்றதற்கு இதுவே முதல் காரணம் போலும்.

தம்முடைய வருவாய் குடும்பச் செலவுக்குப் போதாதபடியால் 1892-ஆம் வருஷத்தில் இவருடைய தந்தையார் தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்து வடக்கே ஆந்திரப் பிரதேசத்தில் வால்டேர் என்னும் ஊரில் தம்முடைய நண்பர் ஸ்ரீ பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார் தலைவராயிருந்த ஒரு கலாசாலையில் பௌதிக சாஸ்திரமும் கணித சாஸ்திரமும் போதிக்கும் ஆசிரியராக அமர்ந்தார். அது முதல் ராமனுடைய கல்வியும் இளமையும் தெலுங்கு தேசத்திலேயேதான் வளர்ந்துவந்தன.

சிறுவயதிலேயே ராமனுக்கு ஆங்கில மொழியில் வல்லமையும் பௌதிக சாஸ்திரத்தில் விருப்பமும் ஏற்பட்டுவிட்டன. பரீக்ஷைக்குத் திட்டமிட்டிருந்த அளவுக்கு மீறியே பௌதிக சாஸ்திரத்தை இவர் படித்துவந்ததனால் அதிக தேக சிரமம் ஏற்பட்டு இவர் நோயுற்றார். கடைசியில் மிக்க இளம் வயதாகிய 12-ஆம் வயதில் இவர் கல்லூரிப் பிரவேச பரீக்ஷையில் (Matriculation) தேறினர். அதற்கு இரண்டு வருஷங்களுக்கப்புறம் கல்லூரி முதல் பரீக்ஷையில் (F. A.) நிரம்ப மார்க்குகளை வாங்கித் தேறினர். இவர் சென்னை ராஜதானிக் கலாசாலையில் சேர்ந்து படிக்கையில் இவருடைய அறிவின் பரப்பைக் கண்டு மெச்சிக் கலாசாலை ஆசிரியர்கள் மற்றப் பிள்ளைகளுக்குத் திட்டம் போட்டதுபோலன்றி இவருக்கு மட்டும் சில தனி வழிகளைச் செய்துகொடுத்தனர். 1904-ல் இவர் பி. ஏ.-இல் முதல்வராகத் தேறிப் பௌதிக சாஸ்திரத்திலும் ஆங்கில மொழியிலும் பதக்கமும் பரிசும் பெற்றார். அடுத்த இரண்டு வருஷங்களில் எம். ஏ.க்குப் படிக்கையில் பிறர் போதிப்பதைக் கேட்க வேண்டியதென்னும் நிபந்தனை ஒன்றும் இல்லாதிருந்தது இவருக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்தது. பௌதிக சாஸ்திரத்தைப்பற்றிய பல சிறந்த நூல்களை இவர் அப்போது ஆராய முடிந்தது. அச் சமயத்தில்தான் (1906 நவம்பரில்) இவர் பௌதிக சாஸ்திரத்தைப்பற்றிய தம்முடைய முதல் ஆராய்ச்சிக் கட்டுரையை லண்டன் தத்துவ ஆராய்ச்சிப் பத்திரிகையில் வெளியிட்டார். அக் கட்டுரையைத் தம் ஆசிரியர் மூலம் அந்தப் பத்திரிகைக்கு அனுப்ப இவர் முயலுகையில் அவ்வாசிரியர் அதைக் கண்டு பயந்து தயங்கவே, தாமே நேராக அதை அனுப்பினர் என்று சொல்லுவர். அப்போதுதான் இவருடைய பௌதிக சாஸ்திர ஆராய்ச்சி யென்னும் பூண்டு தளிர்விட்டது.

எம். ஏ., பரீக்ஷைக்குப் படிக்கையிலேயே முற்கூறிய ஐ. ஏ. ஏ. எஸ். என்னும் பெரும் பதவிப் போட்டிப் பரீக்ஷைக்கும் படித்தார். 1907 ஜனவரியில் எம். ஏ. இல் முதல் வகுப்பில், அதுவரையில் எவருக்கும் கிடைக்காத

மார்க்குகளுடன் தேறியதுடன் அதே வருஷத்தில் பிப்ரவரியில் அந்தப் பதவிப் போட்டிப் பரீக்ஷையிலும் முதல்வராகத் தேறினூர். இதன் பயனுக இவர் மத்திய அரசாங்கத்தாரின் நிதி இலாகாவில் ஓர் உயர்தரப் பதவியில் அமர்ந்தார். 1907 முதல் 1917 வரையில் பத்து வருஷங்கள இப் பதவியில் திறமையுடன் வேலை செய்துவந்தார்.

இளம் வயதிலேயே உத்தியோகத்தில் அமர்ந்ததனூல் சாஸ்திர ஆராய்ச்சியிலுள்ள இவரது ஆர்வம் சிறிதும் குன்றவில்லை. கலகத்தாவில் இவர் முதல் முதலில் வேலையில் சேர்ந்ததும் அங்குள்ள இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தில் அச் சங்க நிர்வாகஸ்தரின் அநுமதியுடன் ஓய்வு நேரங்களில் தம் ஆராய்ச்சிகளை நடத்தி வந்தார். பின்பு ரங்கூன், நாகபுரி முதலிய ஊர்களுக்கு மாற்றப்பட்ட போதிலும் ஆங்காங்கே தம்முடைய இல்லத்தையே ஓர் ஆராய்ச்சி சாலையாக மாற்றித் தம் ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தி வந்தார். 1911-இல் இவர் மீண்டும் கலகத்தாவுக்கே மாற்றப்பட்டது இவருடைய ஆராய்ச்சிகளுக்கு அதிக வசதியளித்தது. விஞ்ஞான ஆராய்ச்சியில் இவருக்கிருந்த ஊக்கத்தைக் கண்ட காலஞ்சென்ற ஸர் அசுதோஷ் முக்கர்ஜி என்பவர் இவரைக் கல்கத்தா ஸர்வகலாசாலையில் பௌதிக சாஸ்திரப் பகுதியில் 'பாலித்' போதகாசிரியர் என்னும் பதவியை ஏற்றுக்கொள்ளச் சம்மதமா என்று கேட்டவுடன் இவர் அதற்கு இணங்கி 1917 ஜூலையில் தமக்கு அதிக வருவாயைக் கொடுக்கக்கூடிய நிதி இலாகாப் பதவியைத் துறந்தார். அதைச் சாஸ்திர ஆராய்ச்சிக்காக இவர் செய்த ஒரு பெருந்தியாகமென்றே சொல்ல வேண்டும். அதோடு 1919 நவம்பரில் தாம் முன்பு ஆராய்ச்சி நடத்திவந்த இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தின் காரியதரிசி என்னும் கௌரவப் பதவியையும் ஏற்றுக்கொண்டார். இவ்விரு பதவிகளும் இவருடைய ஆராய்ச்சிகளுக்குப் போதிய வசதிகளை அளித்தன. இவைகளின் பயன்தான் 1917-க்கும் 1932-க்கும் இடையிலுள்ள 15 வருஷங்களில் இவர் செய்து வெளியிட்ட அரிய ஆராய்ச்சி உண்மைகள்.

பௌதிக சாஸ்திரப்பகுதிகள் பலவற்றில் இவர் ஆராய்ச்சி செய்திருக்கிறார். ஒலி ஒளி, காந்தம், மின் சாரம் முதலிய எல்லாப் பிரிவுகளிலும் இவர் கவனம் சென்றிருக்கிறது. இவருடைய முக்கிய ஆராய்ச்சிகள் ஒளி என்னும் பகுதியில்தான் என்றாலும் ஒலி என்னும் விஷயமாகவும் இவர் ரஸமான சில ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிறார். இசைக் கருவிகளாகிய பிடில், மிரு தங்கம் முதலியவைகள் உண்டுபண்ணும் ஒலியின் தன்மையையும் இவர் சாஸ்திர ரீதியில் ஆராய்ந்திருக் கிறார். இவருடைய ஆராய்ச்சிகளைக் குறித்து இவர் வெளியிட்டிருக்கும் கட்டுரைகளின் எண்ணிக்கை 600-க்கு மேற்பட்டதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

சிறுவர்களின் உள்ளத்தை மகிழ்விக்கும் ஸோப்புக் கொப்புளங்கள் இன்ன தன்மையன என்பதையும் இயற் கையிலுள்ள ஜந்துக்களின் நிறங்களின் தன்மை இத்த கையதென்பதையுங்கூட இவர் ஆராய்ந்திருக்கிறார். இவற்றிலிருந்து இவருடைய ஆராய்ச்சிகள் எவ்வளவு பரந்த நிலையை உடையன என்பது எளிதில் விளங்கும்.

இவருடைய ஆராய்ச்சிகளுள் முக்கியமானது பௌதிக சாஸ்திர உலகில் 'ராமன் விளைவு' என்று இவர் பெயரால் அழைக்கப்படும் ஓர் உண்மை. இது ஒளி என்னும் பகுதியைச் சேர்ந்தது. சில சந்தர்ப்பங் களில் பரிசோதிக்கப்படும் ஒளிக்கிரணத்தில் இல்லாத சில புதிய ஒளிக்கிரணங்கள் தோன்றுகின்றன என்பது தான் இதன் சாராம்சம். இதைப்பற்றிச் சிறிது தெரிந்துகொள்ளுமுன் பௌதிக சாஸ்திரத்தில் பொருள் களின் தன்மையைப்பற்றிய சில அடிப்படையான உண்மை களையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இயற்கையில் தோன்றும் ஒவ்வொரு பொருளும் (Matter) எண்ணில் அடங்காத பல மிகச் சிறிய அணுக்க ளால் (Atoms) ஆனது. இவ்வணுக்கள் தனித்தி ராமல் கூட்டங்கூட்டமாக இருக்கின்றன. இக் கூட்டங் களுக்கு 'அணுக் கூட்டங்கள்' அல்லது 'மூலங்கள்' (Molecules) என்று பெயர். ஒவ்வொரு பொருளின்

அணுவின் அணுக்கூட்டமும் மற்ற எந்தப் பொருளின் அணுவையோ அணுக் கூட்டத்தையோபோல் இராமல் சில தனித்த தன்மைகளை உடையனவாயிருக்கின்றன. ஒவ்வோர் அணுக் கூட்டத்திலும் உள்ள அணுக்கள், இருந்தவிடத்திலேயே அசைவற்று இராமல் எப்போதும் இடம் பெயர்ந்து சுற்றிக்கொண்டே இருக்கின்றன.

ஒளி என்பது ஒரு சக்தி. அது அலைரூபமாக ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் பரவுகிறது. ஒளியில் பல ரகங்கள் உண்டு. நாம் சாதாரணமாகக் காணும் வர்ணம் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான ஒளியினால் உண்டானதே. நிறத்தைக்கொண்டு ஒளியின் வேறுபாட்டை நிர்ணயிக்கலாமென்று சாதாரண ஜனங்களுக்குத் தோன்றியபோதிலும் பௌதிக சாஸ்திரத்தில் அவ்வாறு செய்வதில்லை. ஒளியின் தன்மையை ஸ்தாபிக்க அவர்கள் ஒளிகளின் அலைநீளம் (Wave-length) என்னும் ஒரு தன்மையை அளவுகோலாக உபயோகிக்கின்றனர். உதாரணபாக அவர்கள், செந்நிறமுள்ள ஒளியின் அலைநீளம் நீலநிறமுள்ள ஒளியின் அலைநீளத்தைவிடக் குறைந்தது என்பார்கள்.

சூரியனிடத்திலிருந்து நம்மை வந்து அடையும் ஒளியானது வெளித்தோற்றத்துக்த வெண்மை நிறமுள்ளதேயாயினும் உண்மையில் அது ஊதா, நீலி, நீலம், பசுமை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு என்னும் ஏழுவித ஒளிக்கிரணங்கள் சேர்ந்த ஒரு கூட்டம் என்று பரிசோதனை மூலம் எளிதில் காட்டலாம். அவ்வுண்மையைத்தான் நமக்கு வெயிலுடன் கலந்து மழை பெய்கையில் சில சமயங்களில் வானத்தில் தோன்றும் வானவில்லின் மூலம் இயற்கை அன்னையே நிரூபிக்கிறாள்.

குறிப்பிட்ட அலை நீளமுள்ள ஓர் ஒளிக்கிரணத்தை ஒளிக்கிரணங்கள் எளிதில் புகுந்து ஊடுருவிச் செல்லக்கூடிய பொருள் ஒன்றில் புகச் செய்தால் அப்பொருளிலிருந்து வெளிவருகையில் அவ்வொளியின் சில பாகங்கள் வேறு அலைநீளத்தை அடைகின்றன. அதாவது ஒரு புதிய ஒளி உண்டாகிறது. இதுதான் ராமன் கண்டு பிடித்த

உண்மை. இந் நிகழ்ச்சிக்கு இவருடைய பெயரை ஒட்டியே ராமன் விளைவு (Raman Effect) என்னும் பொருத்தமான பெயர் இடப்பட்டிருக்கிறது. புதிதாகத் தோன்றும் ஒளிக்கு (அதாவது அலை நீளத்துக்கு) 'ராமன் ஒளி' (Raman Band) என்று பெயரிட்டிருக்கின்றனர். இம்மாதிரிப் புதுக்கிரணங்கள் உண்டாவதைத் தான், ஒளிக்கிரணங்களைப் பொருள்களின் அணுக் கூட்டங்கள் சிதற அடிக்கின்றன (Scattering) என்று சொல்லுவார்கள்.

இப்புதிய ஒளி இன்னவாறு உண்டாகிறதென்பதையும் ராமன் ஊகித்துக் கண்டு பிடித்தார். பொருள்களின் அணுக்கூட்டத்திலுள்ள அணுக்கள் ஓயாமல் அசைந்துகொண்டே இருக்கின்றன என்று சொன்னேமல்லவா? அந்த அசைவு என்பது ஒரு காரியம். உலகத்தில் ஒவ்வொரு காரியம் நிகழ்வதற்கும் ஒவ்வொரு விதமான சக்தி வேண்டியது அவசியம் என்னும் உண்மை எல்லோரும் அறிந்ததே. உதாரணமாக, நாம் சிறிது தூரம் நடக்க வேண்டுமானுல் அதற்குத் தகுந்த சக்தி நம் உடலில் இருக்க நாம் போதிய உணவு உட்கொள்ள வேண்டியிருக்கிறது. அம்மாதிரியே அவ்வணுக்களின் அசைவுக்கும் சக்தி வேண்டியிருக்கிறது. இந்தச் சக்தியை அவ்வணுக்கூட்டங்கள், அவைகளின் வழியே ஊடுருவிச் செல்லும் ஒளிக்கிரணங்கள் சிலவற்றிலிருந்து எடுத்துக்கொள்ளுகின்றன. தங்கள் சக்தி குறைவுபடவே அக்கிரணங்களின் அலைநீளமும் வேறுபட்டு அக்கிரணங்கள் புதிய ஒளிக்கிரணங்களாக மாறிவிடுகின்றன. இவ்வாறுதான் புதிய கிரணங்கள் உண்டாகின்றன என்று ராமன் நிர்ணயித்தார். அதாவது குறிப்பிட்ட அலைநீளத்தையுடைய ஓர் ஒளிக்கிரணமானது, தன் சக்தியில் ஒரு பாகத்தை இழந்துவிட்டால் அதன் அலை நீளமும் அதற்கேற்பக் குறைந்துவிடுகிறது. அலைநீளம் மாறவே புதிய ஒளி தோன்றுகிறது. இதுவே 'ராமன் விளைவு' என்னும் நிகழ்ச்சியும், அதன் பயனுக 'ராமன் ஒளிகள்' என்னும் புதிய ஒளிக்கிரணங்கள் உண்டாவதன் காரணமும் ஆகும்.

வானத்து நீலநிறத்தின் அழகில் மனித உள்ளம் அடிக்கடி ஈடுபகிறது. ஆனல் வெகு நாட்கள்வரையில் வானம் ஏன் நீலநிறமாக இருக்கிறதென்பது ஒருவருக்கும் புலப்படாமல் இருந்தது. இப்புதிரை விடுவித்தவர் ராலே பிரபு என்னும் ஆங்கில ஆராய்ச்சியாளர். சூரிய வெளிச்சத்திலுள்ள அணுக்கூட்டங்களை மற்ற நிறங்களையுடைய கிரணங்களைவிட அதிகமாகச் சிதற அடித்தால் நீலநிறக் கிரணமே அங்கே அதிகமாகக் காணப்படும். அதுதான் வானத்தின் நீல நிறத்துக்குக் காரணம் என்று அவர் கண்டுபிடித்தார்.

கடல்நீர் நீலநிறத்துடன் இருப்பதும் இயற்கையின் எழில்களில் ஒன்றே. கடற்கரையிலுள்ள பட்டினமாகிய வால்டேரில் தங்கியிருந்த இளமைக்காலத்திலிருந்தே ராமனின் கவனத்தைக் கவர்ந்தது இக்கடலின் நீலநிறம். வானத்தின் நீலநிறந்தான், கண்ணாடியில் பொருள்கள் தோன்றுவதுபோல் கடல்நீரில் பிரதிபிம்பித்துக் கடல் நீரையும் நீலமாக்கிவிடுகிறது என்று நெடுநாட்கள் வரையில் பௌதிக சாஸ்திரிகள் எண்ணிவந்தனர். இக்கொள்கை பொருத்தமுடையதாக ராமனுக்குப் படவில்லை. 1921-இல் முதல்முதலாக இவர் மேல்நாட்டுக்குச் செல்லுகையில் கப்பலின் வெளித்தட்டில் நின்றுகொண்டு மத்தியதரைக்கடலின் நீலநிறத்தை உற்றுநோக்குகையில் இவருடைய சந்தேகம் ஊர்ஜிதப்பட்டது. அதுமுதல் இவ்விஷயத்தை விடாது ஆராய்ச்சிசெய்து கடைசியில் ஒளிக்கிரணத்தைக் கடல்நீரின் 'அணுக்கூட்டங்கள்' சிதறவடிப்பதனல் உண்டாவதுதான் கடலின் நீலநிறத் தோற்றம் எனத் தெளிந்தார். இந்த ஆராய்ச்சியிலிருந்து எழுந்ததுதான் 'ராமன் விளைவு' என்னும் உண்மை.

இவ்வுண்மையை இவர் முதல் முதலாக 1928-ஆம் வருஷம் மார்ச்சு 16-ஆம் தேதியன்று பங்களூரில் தென்னிந்தியச் சாஸ்திர சங்கத்தின் ஒரு கூட்டத்து முன்னிலையில் வெளியிட்டார். உடனே உலகெங்கும் இது பரவி அமெரிக்காவில் பிரபல ஆராய்ச்சியாளரான ஆர். டபிள்யூ. உட் என்பவரால் சரியென்று நிரூபிக்கப்பட்டது.

கல்கத்தாவில் இவர் 'பாலித்' போதகாசிரியர் பதவியில் அமர்ந்த ஆறு வருஷங்களுக்குள்ளேயே அதாவது 1924-ஆம் வருஷத்திலேயே - இவருக்கு எப். ஆர். எஸ்., (F. R. S.) என்னும் உயர்ந்த அங்கத்தினர் பதவி கிடைத்தது. 1929-இல் இந்திய சர்க்கார் இவருக்கு 'ஸர்' பட்டம் அளித்தனர். 1958-இல் இவருக்கு இத்தாலிய சாஸ்திர சங்கத்தின் சார்பில் ஒரு பதக்கமும் (Matteucci Medal) 1930-இல் இங்கிலாந்தில் மன்னர் பிரான் சங்கத்தின் 'ஹ்யூஜஸ்' பதக்கமும் கிடைத்தன. 1930-இல் உலகப் பிரசித்தமானதும் இந்தியாவிலேயே அதுவரையில் சாஸ்திரப் பயிற்சிக்காக ஒருவருக்கும் கிடைக்காததுமான 'நோபெல்' பரிசு அளிக்கப்பட்டது. இவைகளைத் தவிர இவருக்குப் பாரிஸ், கிளாஸ்கோ, ப்ரைபர்க் முதலிய மேனாட்டுச் சர்வகலாசாலைகளிலிருந்தும், கல்கத்தா, பம்பாய், சென்னை, காசி, டாக்கா முதலிய இந்தியச் சர்வகலாசாலைகளிருந்தும் கௌரவப் பட்டங்கள் அளிக்கப்பட்டன. மற்றும் கிளாஸ்கோ, ஜூரிக் அயர்லாந்து, ம்யூனிக். ஹங்கேரி முதலிய இடங்களிலுள்ள அயல்நாட்டு விஞ்ஞான ஆராய்ச்சிச் சங்கங்களிலும், இந்திய விஞ்ஞான சங்கம், இந்தியக் கணித சங்கம், இந்திய ரஸாயன சங்கம் என்னும் நம் நாட்டுச் சங்கங்களிலும் கௌரவ அங்கத்தினர் ஆக்கப்பட்டார்.

இவர் முதல் முதலாக ஐரோப்பாக் கண்டத்துக்கு 1914-இல் சென்றார். அப்போது இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டில் நடந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சர்வகலாசாலைக் கூட்டத்துக்குச் சென்றார். 1924-இல் கானடாவில் டொரொன்டோ என்னும் இடத்தில் 'ஒளிச்சிதறல்' என்னும் விஷயத்தைக் குறித்து ஒரு விவாதத்தை ஆரம்பித்துவைப்பதற்காக அழைக்கப்பட்டார். அப்போது அமெரிக்காவில் பிலடெல்பியா என்னும் ஊரில் ஓர் ஆராய்ச்சி விழாவில் கலந்துகொண்டார். பல மாதங்கள் அங்கே தங்கி அநேக இடங்களுக்குச் சென்றுவிட்டு 1925-இல் ஊர் திரும்பினார். மீண்டும் அதே வருஷத்தில் ஒரு முறையும் 1929-இல் ஒரு முறையும் அழைக்கப்பட்டு இங்கிலாந்துக்குச் சென்றார். 1930-இல் ஸ்வீடனின்

தலைநகரான ஸ்டாக்ஹோமில் நோபெல் பரிசைப் பெற்றார். இது ஒரு லக்ஷரூபாய்க்கு மேற்பட்ட ரொக்கப் பரிசு. 1931-இல் ஒரு முறையும் 1937-இல் ஒரு முறையும் பாரிஸுக்கு மறுபடியும் சென்றார். இவரைப்போல் அடிக்கடி அயல்நாடுகளுக்குச் சென்று வந்த வேறு ஓர் இந்தியரும் இல்லை என்று சொல்லலாம்.

இவருடைய ஆராய்ச்சிகள் மனித வாழ்க்கைக்கு அதிகப் பயனளிக்கமுடியாதவையாக அமைந்திருக்கின்றன என்று சிலர் சொல்லுகின்றனர். இதற்குச் சமாதானமாகப் பாரடே என்னும் பிரபல பௌதிக சாஸ்திரியைக் குறித்து வழங்கும் ஒரு கதையைத்தான் எடுத்துச் சொல்ல வேண்டும்.

நம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக இருக்கும் மின்சாரம் என்னும் சக்தியைக் கண்டுபிடித்தவர் இந்தப் பாரடே என்பவர். தாம் புதிதாகக் கண்டுபிடித்ததை அவர் ஒரு கூட்டத்தின்முன் விளக்கிக் காட்டிக்கொண்டிருக்கையில் கூட்டத்தில் இருந்த ஒரு கிழவி, "இதனால் உலகுக்கு என்ன பயன்!" என்று கேட்டாள். மின்சாரத்தினால் மானிடர் அடைய இருக்கும் மகத்தான நன்மைகளை அப்போது எவரும் அறியவில்லை. ஆகையால் அவர் அக்கேள்விக்குப் பதிலாக அவளிடமிருந்த ஒரு சிறு குழந்தையைச் சுட்டிக்காட்டி, "இச்சிசுவினால் உலகத்துக்கு என்ன பயன்?" என்று சொன்னார்.

பொருள்களின் தன்மைகளை நன்கு அறிந்து கொள்ளுவதற்கு ராமன் ஒளிகள் மிகவும் பயன்படுகின்றன என்று உலகத்திலுள்ள எல்லா ஆராய்ச்சியாளர்களும் ஒப்பி ராமன் விளைவைக் குதூகலத்துடன் ஏற்றுக்கொண்டு பாராட்டுகின்றனர். இதை அடிப்படையாகக் கொண்டு உலகெங்கும் பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதால் ராமன் விளைவு என்பதே பௌதிக சாஸ்திரத்தில் ஒரு தனிப்பகுதிபோல் ஆகிவிட்டது என்றாலும் மிகையாகாது.

தம்முடைய தாய்நாட்டின் மதிப்பை உலகத்தார்முன் உயர்த்தவேண்டுமென்பது ராமனுடைய வெகு நாளைய

லக்ஷ்யம். இது இவர் நோபெல் பரிசு பெற்றதனுலேயே கைகூடிவிட்டது. இன்னும் ஒரு விதத்திலும் இவர் இதைச் சாதித்து வருகிருர். அதுதான் இவர் தம்முடைய மாணவர்களுக்குக் கொடுத்துவரும் பயிற்சியும் ஆதரவுமாகும். இவரிடம் ஆராய்ச்சிசெய்த டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் என்பவர் ஏற்கனவே உலகமறிந்த ஒரு சிறந்த அறிஞர் ஆகிவிட்டார். பின்னும் இவரிடம் ஆராய்ச்சி பயின்றவர்கள் பல வேறு இடங்களில் சோபித்துவருகின்றனர்.

நல்ல உயரம், அதற்குத் தக்க பருமன், பரந்து நீண்ட முகம். பெரிய மூக்கு. விசாலமான நெற்றி. கூர்மையான பார்வையுடன் விளங்கும் ஒரு ஜொலிப்புக் கலந்த கண்கள். இதுவே ராமனுடைய தோற்றம்.

இவருடைய பேச்சில் ஒரு தனி உத்ஸாகம் தோன்றுகிறது தம்முடைய ஆராய்ச்சிகளை விளக்கிக் காட்டுகையில் அவைகளைத் தாமே குதூகலத்துடன் அநுபவித்து அவ்வானந்தத்தில் அமிழ்ந்து மூழ்கிவிடுகிருர். கேட்போரையும் அப்படியே செய்துவிடுகிருர்.

நுட்பமான சாஸ்திர விஷயங்களை இவர் எளிதில் விளங்க வைத்துவிடுவார். ராமன் விளைவை இவர் இவருடைய அத்தைக்கு எடுத்து உரைக்கையில் தாம் அதை அதிகமாக ரஸித்ததாக இவருடை மாணவர்களில் ஒருவர் சொல்லுவதுண்டு.

சிறு வயதிலேயே இவருக்குப் பௌதிக சாஸ்திரப் பித்து இருந்தது என்பதற்கு ஒரு கதை சொல்வதுண்டு. இவருக்கு ஏழு வயதில் ஒரு சமயம் அதிக நோயினுல் ஜன்னி பிறந்திருக்கையில் பௌதிக சாஸ்திர பரிசோதனை ஒன்றைக் காட்டிய பிறகு நோய் நீங்கிவிட்டதாம்.

இவருடைய முக்கியமான குணதிசயம், தாம் கொண்டுள்ள கொள்கையை நாசூக்கென்பது கொஞ்சமுமின்றி வெட்டவெளிச்சமாகச் சொல்லிவிடுவதுதான். இது இவரைப் பலவிதத் தொல்லைகளுக்கு ஆளாக்கியிருக்கிறது. முதல் முதலில் இவர் நிதியிலாகாவில் பதவி வகித்திருக்கையிலேயே இதன் கொடுமையை அநுபவித்திருக்கி

ருரென்று ஊகிக்க இடம் இருக்கிறது. இவருடைய பட்டவர்த்தன முறைகளைப் பார்த்து ரங்கூனில் இவருடைய மேலதிகாரி இவரை நோக்கி, "நான் கறுப்பு மையைச் சிவப்பென்றால் நீர் உடனே, 'இல்லை' என்று இடை மறுத்துத் திருத்த முயலக்கூடாது. உத்தியோக ஒழுங்கிற்கேற்ப, 'ஐயா, என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயத்தில் அந்த மை சிவப்பாயிருக்குமோவென்று தோன்றுகிறது என்பதை உங்களிடம் விநயமாக நான் விண்ணப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்' என்றுதான் சொல்லவேண்டும்" என்று புத்தி கூறியது இவரை நகைக்கச் செய்தது.

இவருக்கு நோபெல் பரிசு கிடைத்தபோது, "இனிமேல் எனக்குத் தபால் தலைகள்போல் பட்டங்கள் வந்து குவியும்" என்று சொன்னதும், விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர் ஒருவர் காலமானவுடன் அவரைக் குறித்துச் சற்றுக் குறைவாகச் சந்தர்ப்பப் பொருத்தமின்றி இவர் கூறியதும் எல்லோருக்கும் தெரிந்தனவே. விஷயங்களை எடுத்து வெளியிடுவதில் இவருக்கு அவ்வளவு கண்டிப்பு. ஆனால் ரோஜாச்செடியில் முட்கள் உண்டென்றால் ரோஜாப்பூவின் அழகும் மணமும் குறைந்துவிடுமா?

சில சமயங்களில் இவருடைய ஞாபகமறதி பிறரை வியக்கச் செய்யும். ஒரு முறை ஹவுரா ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தம்முடைய மாமியாரை அழைக்கச் சென்றவர், போன காரியத்தை முற்றும் மறந்துவிட்டு வழியில் சந்தித்த ஒரு நண்பரிடம் வெகு நேரம் பேசிவிட்டு அவருடனேயே வீடு திரும்பினாராம்! ஆனால் சில விஷயங்களைப்பற்றிமட்டும் இவருக்கு இருக்கும் ஞாபகசக்தி அபாரமாயிருக்கிறது.

இவருடைய நெஞ்சழுத்தமும் தைரியமும் மெச்சத்தக்கன. இல்லாவிட்டால் சமூக சீர்திருத்தக் கொள்கைகள் அதிகமாகப் பரவாதிருந்த அந்த நாளிலேயே அந்நியப் பிரிவிலுள்ள ஒரு (வடம ஜாதிப்) பெண்ணைக் காதல் விவாகமாக மணப்பாரா? தவிர, நோபெல் பரிசு கிடைப்பதற்கு ஐந்து வருஷங்களுக்கு முன் ஒரு நாள் ஸர் அசுதோஷ் முகர்ஜியினிடம் இவர், "தக்க வசதிகளை

மட்டும் கொடுங்கள். இன்னும் ஐந்து வருஷங்களில் நோபெல் பரிசையே பெற்றுவிடுகிறேன், பாருங்கள்'' என்று சொன்னார்.

பூகோள சாஸ்திரத்திலும் துப்பறியும் நவீனங்களி லும் இவருக்கு அதிகப் பிடித்தமாம். ஆனால் கடிதம் எழுதுவதில்மட்டும் இவருக்கு வெறுப்பு அதிகம். அதை விடத் தந்தி அடித்துவிடுவது உசிதம் என்று இவர் சொல்வதுண்டு.

இவர் இப்போது பெங்களூரில் விஞ்ஞான ஆராய்ச் சிச் சாலையில் தம் வேலையை நடத்தி வருகிறார். ஓர் அகில இந்திய விஞ்ஞான சங்கத்தை ஸ்தாபனஞ் செய்து அதன் சார்பில் ஒரு பத்திரிகையையும் வெளியிட்டு வருகிறார். அப்பத்திரிகைமூலம் பலர் தங்களுடைய ஆராய்ச்சிகளைப் பிரசுரிக்கின்றனர். இந்நாட்டில் இவருடைய அரிய ஆராய்ச்சிகள் அத்துறையில் உழைக்கும் பல இளைஞர் களுக்கு ஒரு கலங்கரை விளக்கம்போல் ஊக்கமும் ஆதரவும் அளித்துவருகின்றன.

2

# சுதேச மன்னர்களின் சூத்திரதாரி

சுமார் பதினுன்கு வருஷங்களுக்கு முன் சென்னை ராஜதானிக் கலாசாலையின் மாணவ சங்கம் ஒன்றின் சார்பில் ஸம்ஸ்கிருதபாஷையில் காளிதாசனுடைய சாகுந்தலம் என்னும் நாடகம் நடிக்கப்பட்டது. அன்று உள்ளூர்ப் பிரமுகர் ஒருவர் அக்கிராசனம் வகிப்பதாக ஏற்பாடாயிருந்தது. நாடகம் முடியச் சிறிது நேரம் இருக்கையில் அந்தச் சங்கத் தலைவரின் வேண்டுகோளின் பேரில் அந்தப் பிரமுகர் மேடையின்மேல் ஏறி நடிகர்களைப் பற்றிச் சில ஆசிமொழிகள் கூற முன் வந்தார். "நான் இன்று இந்த நாடகத்தைப் பார்க்கையில் பல வருஷங்களுக்கு முன் நான் இந்தக் கலாசாலையில் மாணவனாக இருக்கையில் இதே மேடையில் இதே நாடகத்தில் நானும் நடித்தது என் நினைவுக்கு வந்தது" என்று சொல்லி ஆரம்பித்தார். கூட்டத்தில் ஓர் குறும்பன் (மாணவர் கூட்டங்களில் இத்தகையோர்களுக்குக் கேட்கவேண்டுமா!) "நீர் அப்போது என்ன வேஷம் பூண்டீர்கள்!" என்றான். எதிர்பாராத அக் கேள்விக்குச் சடக்கென்று அவர், "நான் ஓர் இளநங்கையாகத் தோன்றவில்லையென்று மட்டும் சொன்னாலே என்னை இக்கேள்வி கேட்டவர் திருப்தியடைவாரென்று நம்புகிறேன்" என்று சமத்காரமாக விடையளித்தார். சபையோர் எல்லோரும் கொல்லென்று நகைத்தனர். குறும்புக் கேள்விக்கேற்ற குறும்பு விடையை அளிக்கப் போதுமான சமயோசித புத்தி அவருக்கு உண்டென்று அன்று அவர் அச் சம்பவத்தின் மூலம் காட்டிவிட்டார்.

அப் பிரமுகர்தான் ஸர். ஸி. பி. ராமசுவாமி ஐயர் என்பவர். அப்போது அவர் சென்னை அரசாங்கத்தின்

சட்ட இலாகா மெம்பராக இருந்தார். அது ஓர் மந்திரி பதவியே. இரட்டையாட்சியின் கீழ் இருந்த படியால் அதற்கு 'மெம்பர்' என்ற பெயர் வாய்ந்திருந்தது. வேண்டாத கேள்விகளைக் கேட்டுத் திணரவைக்க விரும்பு வோர்களைச் சரியான விடைகளைக் கொடுத்து மடக்கும் சமயோசித புத்தி இவரிடம் அபாரமாக இருந்தது.

இவர் சென்னையில் சட்ட இலாகாவை நிர்வகித்த இச் சமயத்தில்தான் இந்தச் சாமார்த்தியம் இவருக்கு அதி கமாகப் பயன்பட்டது. அப்போது மாகாண சட்ட சபையில் இவருக்கு எதிரிகளாக அமைந்து இவரைக் கேள்விகள் மூலம் தாக்கியவர்கள் காங்கிரஸ் மகாசபை யின் சார்பாக ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அவர்களும் 'ஜஸ்டிஸ்' கக்ஷியின் சார்பாக ஸ்ரீமான் (அப்போது ஸர் பட்டம் இல்லை) ஆர்க்காடு ராமசுவாமி முதலியார் என்பவரும். இவர்கள் இருவரும் சாமானிய எதிரிகள் அல்ல. இவர்கள் கொடுத்த சவால்களுக்குத் தக்க, ஆணித் தரமான பதில்களை அளிக்க ஸர்க்கார் தரப்பில் இவர் மிகவும் பயன்பட்டார். எனவே, "உங்கள் வாழ்க்கையின் எந்தப் பகுதியை நீர் விருப்பிக் கொண்டாடுகிறீர்கள்?" என்று பின்பு ஒருவர் இவரைக் கேட்டபோது இவர், "நான் சென்னையில் சட்ட மெம்பராக இருந்த காலத்தைத் தான்" என்று சொன்னதில் ஒருவித ஆச்சரியமும் இல்லை. எதிரிகள் கைதேர்ந்தவராக இருந்தபடியால் இவருடைய நிர்வாகத் திறமையும் பதின்மடங்கு சோபித்து நின்றது.

இவருடைய முழுப்பெயர் சேத்துப்பட்டுப் பட்டாபி ராம ஐயர் ராமசுவாமி ஐயர் என்பது. சேத்துப்பட்டு இவர் ஊர். வடஆர்க்காடு ஜில்லாவில் உள்ளது. பட்டாபி ராம ஐயர் என்பது இவருடைய தந்தையாரின் பெயர். இவர்கள் ஸ்மார்த்த பிராம்மண மரபில் வடமர் என்னும் பிரிவைச் சேர்ந்தவர். உயர்ந்த வம்சம் பரம்பரையாகச் சொத்துள்ளவர்கள். எனவே ராமசுவாமி ஐயர் செல் வத்தில பிறந்து செல்வத்தில் வளர்ந்தவர்.

இவர் பிறந்தது 1879-ஆம் ஆண்டு நவம்பர் மீ 11-ஆம் தேதி. இவர் வெஸ்லியன் ஹைஸ்கூல் என்னும் பள்ளிக் கூடத்தில் தம் ஆரம்பப்படிப்பை முடித்துக்கொண்ட பின்

தம்முடைய உயர்தரப் படிப்பைச் சென்னை ராஜதானிக் கலாசாலையில் நடத்திக்கொண்டார். பின்பு சட்டப் பரீக்ஷைக்குப் படித்துத் தம்முடைய தந்தையாரின் தொழிலாகிய வகீல் தொழிலையே மேற்கொண்டார்.

இவருடைய தந்தையார் சென்னையில் உயர் நீதி மன்றத்தில் வக்கீலாக இருந்து கடைசியில் சென்னை நகர நீதி மன்றத்தில் ஓர் நீதிபதியாக இருந்தார். ராமசுவாமி ஐயருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்த சீதம்மாள் என்பவரும் ஒரு பிரபல வக்கீல் குடும்பத்தைச் சேர்ந்தவரே. அந்த அம்மாளுடைய பாட்டனார்தான் சென்னையில் முதல் இந்திய நீதிபதியாக இருந்த களம்பூர் வீரவல்லி ரங்கநாத சாஸ்திரியாரவர்கள இத்தகைய தொடர்பைப் பெற்றிருந்த இவரும் வக்கீல் தொழிலையே கைக்கொண்டதும் சற்று இயற்கையானதே.

வாயை விற்று வயிறு வளர்த்தலாகிய இந்தத் தொழில் சிறிது தைரியம் உள்ளவர்களே கையாளக் கூடியது. ஏனெனில் இந்தத் தொழிலில் எடுத்தவுடன் வருவாய் கிட்டிவிடாது. பல வருஷங்கள் போதுமான வரும்படியின்றிச் சிரமப்படத் தயாராக இருக்க வேண்டும். அபாரமான சக்தி வாய்ந்தவர்களாக இருந்தால்தான் சீக்கிரத்தில் நல்ல வரும்படி கிடைக்கும். மாதச் சம்பளம் பெறுவோரின் கவலையற்ற வாழ்வு இவர்களுக்கு இல்லை. இத்தகைய நிர்ப்பந்தங்கள் அடங்கிய தொழிலில் புகுந்த இவருக்கு முதல் வருஷம் முழுவதிலும் கிடைத்தது ரூ 208-தானும். அதாவது மாதம் ஒன்றுக்குச் சராசரி ரூ 18-கூட இல்லை. ஆனால் தொழில் ஆரம்பித்த நான்காம் வருஷம் ரூ. 25,000 (மாதம் ரூ. 2,000-க்குமேல்) சம்பாதித்தாராம்! இதுவே இவருடைய அபார சக்திக்கு அத்தாட்சி.

இவர் நீதிமன்றத்தில் பேசுவது பார்ப்பதற்கு ஓர் ரம்மியமான காட்சியாக இருக்குமாம். நாடகமேடை மீது ஏறிய ஒரு நடிகன் நடிப்பதுபோல் இருக்குமென்று அதைக் கண்ணுற்றவர்கள் சொல்லுகின்றனர். இவருடைய அழகிய மேனி, சற்றுப் பிதுங்கிய, ஆனால் கம்பீரமுள்ள விழிகள், நீண்ட முகம், எழில் வாய்ந்த பார்வை, அமைப்பில் சற்று உயர்ந்த, தூய்மையான, வெண்ணிறமுடைய

தலைப்பாகை, இவைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து இவருடைய நீதிவாதத்துக்கு ஒரு தனிச் சோபையை அளிக்கும். அப்போது நீதிபதிகளிடம் இவர் நடந்துகொண்ட முறையும் இதற்கு ஏற்பவே இருக்கும். வெகு மரியாதையாக நடந்துகொள்வார். இடையில் ஏதாவது ஒரு தடங்கல் நேர்ந்தால் அப்போது இவர் காட்டும் சீலம் இந்த நடத்தைக்கு உச்ச நிலையாக விளங்கும். இதற்கு உதாரணமாக அடியில் கண்ட நிகழ்ச்சியைக் கூறலாம்: இவர் ஒரு வழக்கை வாதித்துக்கொண்டிருக்கையில் இவருடைய சிப்பந்திகளில் ஒருவன் ஏதாவது கடிதத்தை இவரிடம் நீட்டுவான். உடனே இவர் நீதிபதியை நோக்கி, "சற்று மன்னிக்க வேண்டும்" என்று விநயத்துடன் கூறி விடை பெற்றுக்கொண்டு பின்னரே அந்தக் கடிதத்தைப் பார்ப்பார். அதைப் படித்துவிட்டு அதைக் கொணர்ந்தவனிடம் தக்க உத்தரவு அளித்துவிட்டுப் பின்பு தம் வாதத்தைத் தொடங்குவார். இவ்வளவும் ஒரு நொடியில் செய்து முடிக்கப்படுவது அங்குள்ளோரை வியக்கச் செய்யும்.

எதிர்க் கட்சி வக்கீலிடம் இவர் நடந்துகொள்ளுவதும் இவ்வண்ணமேதானும். இவர் பேசுகையில் அவர் இடை மறித்து ஏதாவது சொல்ல எழுந்தால் உடனே இவர் தம்முடைய ஆசனத்தில் அமர்ந்துவிடுவார். எதிர்க் கட்சிக்காரருக்கு ஒருவித இடையூறும் இருக்கக் கூடாது என்பது இவர் எண்ணம்.

இவரை ஒரு சகல கலாவல்லவர் என்று சொல்லலாம். சர்க்கார் தரப்பில் பெரும் பதவிகளை வகிக்கையில் பற்பல விஷயங்களில் இவர் தம் நோக்கத்தைச் செலுத்த நேர்ந்திருக்கிறது. அவைகள் ஒவ்வொன்றையும் இவர் சளைக்காமல் நிர்வகிப்பார்.

இவர் வெகு தாராளமான மனதுடையவர். இவர் வக்கீல் தொழிலை நடத்துகையில் இவரிடம் உதவி வக்கீல்களாக இருந்தவர்களுக்குத் தம் வருவாயில் பெரும் பகுதியைக் கொடுப்பார். இவர் வீட்டிலும் இதே தரும சிந்தை. அங்கே சதா எளிய பிள்ளைகள் வாரச் சாப்பாடு சாப்பிட்ட வண்ணமாகவே இருப்பர். இம்மாதிரி இவர்

தர்மத்தில் படித்தவர்கள் பின்னர் ஐ. ஸி. எஸ். பதவிக்கும் வந்தது உண்டு.

சென்னை உயர் நீதிமன்றத்தில் 'ஒரிஜனல்' என்று சொல்லப்படும் பகுதியில் இவர் தொழில் ஆரம்பித்த சிறிது காலத்துக்கெல்லாம் ஒரு பிரபல நியாயவாதியாகி விட்டார். 1910-முதல் சென்னை நியாயஸ்தலத்தில் நடந்த முக்கிய வழக்குகளில் இவர் கலந்துகொள்ளாதது ஒன்றும் இல்லையென்று சொல்லப்படுகிறது.

அரசியல் துறையில் இவர் முன்னுக்கு வந்ததற்கும் இவருடைய வக்கீல் தொழில் ஓரளவு பயன்பட்டிருக்கிறதென்றே சொல்ல வேண்டும். ஒரு முக்கியமான வழக்கில் இவர் டாக்டர் அனிபெஸண்டு அம்மையாரை எதிர்த்து வெற்றிபெற்றார். நாளடைவில் அவ்வம்மையாருடன் அரசியலில் ஒத்துழைக்க ஆரம்பித்தார். ஹோம் ரூல் என்று அழைக்கப்பட்ட இயக்கத்தில் ஈடுபட்டதால் தமக்கு நேரிட்டிருந்த பாதுகாப்பிலிருந்து இவ்வம்மையார் விடுவிக்கப்பட்டவுடன், அவரைச் சென்னையில் இவர் ஒரு வெள்ளிக்குடத்துடன் வரவேற்றது எல்லோரும் அறிந்த விஷயம்.

இவர் நிர்வகித்த பொறுப்புள்ள பதவிகளுக்கு ஓர் எல்லையிடுவது அசாத்தியம். அவைகளை அடுக்கிக்கொண்டு போனாலே நீண்ட ஒரு ஜாபிதாவாகிவிடும். 1911-இல் சென்னைச் சட்டசபையில் அங்கத்தினர் பதவி; 1911-முதல் 1919 வரையில் சென்னைப பச்சையப்பன் கலாசாலையின் டிரஸ்ட் போர்டில் நிர்வாக அங்கத்தினர் பதவி, 1919-இல் சென்னைச் சட்டசபையின் அங்கத்தினராகச் சென்னைச் சர்வகலாசாலையாரால் தேர்ந்தெடுக்கப்பட்டது; 1920-இல் மீண்டும் பொதுத்தேர்தலின் மூலம் சென்னைச் சட்ட சபை மெம்பரானார்; 1920-இல் சென்னையின் தலைமை நியாயவாதி (அட்வகேட் ஜெனரல்) ஆனார்; 1923-லிருந்து 1928 வரையில் சென்னை சர்க்காரின் சட்டமெம்பர் பதவி; (அதாவது இரட்டையாட்சியின் கீழ் ஒதுங்கிய இலாகா ஒன்றின் மந்திரி), இந்திய சர்க்காரில் 1937-இல் சட்ட மெம்பராதல்; 1932-இல் அதே சர்க்காரில் மீண்

டும் ஒரு மந்திரி பதவி பெறல் - இம்முறை வர்த்தக இலாகாவின் மெம்பர் - இம்மாதிரி இன்னும் ஜாப்தாவை வளர்த்துக்கொண்டே போகலாம்.

இத்துடன் இவர் பல கமிட்டிகளிலும் கூட்டங்களிலும் அங்கத்தினராக நியமிக்கப்பட்டு உழைத்திருக்கிறார். அவைகளுள் முக்கியமானதாக 1931-இல் இவர் சீமைக்கு வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்றதைக் குறிப்பிடலாம். மைசூர் (1928-இல்), டெல்லி (1931-இல்), கல்கத்தா (1932-இல்), கலாசாலைகளால் வேண்டப்பட்டு அவைகளின் சார்பில் பிரசங்கங்கள் நிகழ்த்தியிருக்கிறார்.

இந்திய சமஸ்தானங்களை ஆண்டுவரும் சுதேசி மன்னர்களிடம் இவருக்கு அபரிமிதமான செல்வாக்கு உண்டு. ஒரு சமயம் அவர்கள் இவர் சொன்னபடி ஆடினார்கள் என்றுகூடச் சொல்லப்பட்டது. சமஸ்தானாதிபதிகளின் தொடர்பு இவருக்கு முதல் முதலாக 1918-இல் ஏற்பட்டது. அவ்வருஷத்தல் இவர் கொச்சி சமஸ்தானத்தின் சார்பாக, பட்லர் கமிட்டியின் முன் தோன்றினார். அதன்பின்பு இந்திய சமஷ்டிக்காகப் பல சமஸ்தானாதிபதிகளின் பிரதிநிதியென்னும் ஹோதாவில் வெகுவாக உழைத்திருக்கிறார். காச்மீர சமஸ்தானத்தின் தற்போதைய அரசியல் திட்டம் இவர் வகுத்ததே. திருவாங்கூர் சமஸ்தானத்தில் முதல் முதலில் சட்டசம்பந்தமான ஆலோசகராக அமர்ந்தபின் 1936 முதல் அங்கே திவானாக விளங்கினார். ஆலயப்பிரவேசத்தை அனுமதிக்கும் ஒரு பிரகடனத்தை அங்கே வெளியிடக் காரண பூதராக இருந்ததற்காக அம்மன்னரால் இவருக்கு 1936-இல், "சச்சிவோத்தமர்" என்னும் பட்டம் அளிக்கப்பட்டது.

இந்திய சர்க்காரே இவருக்கு ஸர் முதலிய பட்டங்களை வழங்கியிருக்கின்றனர். சென்னையில இவர் சட்ட மெம்பர் பதவியிலிருந்ததன் ஒரு நிரந்தரப் பயனை நாம் இவர் முயற்சியின்பேரில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் மேட்டூர் அணை, பைகார மின்சார உற்பத்திசாலை இவைபோன்ற மாகாண மக்களுக்குப் பெரிதும் உபயோகமளித்துவரும் சாதனங்களில் கண்டு மகிழ்கிறோம்.

இவருக்குப் பொழுதுபோக்கு சம்ஸ்கிருதம், பிரெஞ்சு, இவ்விருமொழிகளிலும் உள்ள இலக்கியங்களை ஆராய்ந்து மகிழ்தலும், டென்னிஸ் பந்து விளையாடுதலும், குதிரை சவாரி செய்தலுமாம். தேகப் பயிற்சிக்காக, நடப்பதிலும் இவருக்கு வெகு பிரியம்.

மேற்கூறிய பதவிகளை இவர் ஒப்புக்கொண்டிருத்தலைப் பார்த்து இவர் அரசியல் துறையில் மிதவாதியாகக் கூட இல்லாத ஒரு பிற்போக்கான பேர்வழியோ என்று ஐயமுறுவோர்களுக்குக் கடைசியாக ஒன்று சொல்லலாம். இவர் தீவிர அரசியல் வாதத்திலும் கலந்துகொண்டிருக்கிறார். பெஸன்ட் அம்மையாரின் ஹோம்ரூல் இயக்கத்திலுள்ள இவருடைய சம்பந்தம் ஏற்கனவே குறிக்கப்பட்டது. அதைத் தவிர இவர் காங்கிரஸ் கட்சியிலும் ஓர் அங்கத்தினராக இருந்த காலம் உண்டு. ஏன்; 1917-18-ல் அந்தக் கட்சியின் அகில இந்தியக் காரியதரிசியாகக் கூட இவர் இருந்திருக்கிறார்!

சமீபகாலத்தில் நம் தேசம் சுதந்தரமடைந்த பின்னர் இவர் தாம் திவானாக இருந்த திருவாங்கூர் சமஸ்தானத்தை ஒரு சுதேச நாடாக்க முயன்றது மட்டும் எல்லோருக்கும் சற்று வெறுப்பையும் ஏமாற்றத்தையுமே கொடுத்தது. ஆனால் இந்த முயற்சியிலும் இவர் காட்டிய தைரியத்தையும் நெஞ்சழுத்தத்தையும் அபாரம் என்று தான் சொல்ல வேண்டும்.

# 3

# அமெரிக்கர் அழைத்த இந்தியக் கணித ஆராய்ச்சிக்காரர்

காலஞ்சென்ற கணித நிபுணர் ராமாநுஜன் மிகச் சிக்கலான (Highly Composite) எண்கள் என்று சொல்லக்கூடிய எண்களின் தொகுதி ஒன்றைத் தொகுத்தார். இவ்வெண்களின் தன்மை என்னவெனில், அவைகளுள் எதை எடுத்துக்கொண்டாலும் அதை வகுக்கக்கூடிய எண்களின் தொகை அவ்வெண்ணை விடச் சிறிய எந்த எண்ணின் வகுக்கும் எண்களின் தொகையையும் விஞ்சியிருக்கும். இதை விளக்க இத்தொகுதியிலுள்ள முதல் ஐந்து எண்கள் அடியில் கண்ட கட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| மிகச் சிக்கலான எண் | அதை வகுக்கக் கூடிய | |
|---|---|---|
| | எண்கள் | எண்களின் தொகை |
| 2 | 1, 2 | =2 |
| 4 | 1, 2, 4 | =3 |
| 6 | 1, 2, 3, 6 | =4 |
| 12 | 1, 2, 3, 4, 6, 12 | =6 |
| 24 | 1, 2, 3, 4, 6 8, 12, 24 | =8 |

இத் தொகுதியில் 12 என்னும் எண்ணுக்கு 6 வகுக்கும் எண்கள் உண்டு. 12-க்குக் குறைந்த தொகுதியில் உள்ள 2, 4, 6, என்னும் எண்கள் ஒன்றுக்காவது, அல்லது 12-ஐ விடச் சிறிய வேறு எந்த எண்ணுக்காவது அத்தனை வகுக்கும் எண்கள் கிடையா. இப்படியேதான் இத்தொகுதியிலுள்ள மற்ற எண்களுக்கும் கொள்ள வேண்டும்.

இத்தொகுதி முடிவற்றது. ராமாநுஜன் இத் தொகுதியிலுள்ள முதல் 102 எண்களைத் தொகுத்து முதல் முதலாக லண்டன் கணிதசங்கத்தின் பத்திரிகையில் 1915-ஆம் ஆண்டில் வெளியிட்டார்.

அவர் வெளியிட்ட தொகுதியில் யாது காரணம் பற்றியோ ஓர் எண் விட்டுப்போய்விட்டது. தொகுதியில் அது தொண்ணூறாவது எண்ணாக அமைந்திருக்க வேண்டியது. 5040 வகுக்கும் எண்களையுடைய 12 ஸ்தானங்களைக் கொண்ட 293318625600 என்னும் எண்தான் அது.

இத்தொகுதியில் இவ்வெண் விட்டுப்போனதைக் கண்டுபிடித்தவரும் ஓர் இந்தியரே. அவர்தாம் டாக்டர் தி. விஜயராகவன் என்னும் கணித ஆராய்ச்சிக்காரர். தாம் காலேஜில் மாணவராக வாசித்துக்கொண்டிருக்கையிலேயே அவர் இதைக் கண்டுபிடித்துப் பின்னர் லண்டன் கணித சங்கப் பத்திரிகையில் 1926-ஆம் வருஷத்தில் வெளியிட்டார். ராமாநுஜனிடம் தப்பிய இவ்வெண் இவரிடம் சிக்கிக்கொண்டது!

இது ஓர் உயர்ந்த ஆராய்ச்சியல்ல. எவரும் செய்யக்கூடியதே. எனினும் எடுத்துக்கொண்ட விஷயத்தை எவ்வளவு ஊக்கத்துடன் ஆராயும் இயல்பு இவருக்கு உண்டு என்பதற்கு ஓர் அறிகுறியாக இது நிற்கிறது.

இவர் தென்கலை வைஷ்ணவப் பிராம்மணர் மரபைச் சேர்ந்தவர். இவருடைய ஊர் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள வைஷ்ணவ ஸ்தலமாகிய திருக்கண்ணபுரம் என்பது. இவருடைய தந்தையாரின் இயற்பெயர் திருவேங்கடா

சாரியர். எனினும் அவரை எல்லோரும், "திருக்கண்ண புரம் ஸ்வாமி" என்றும், "பட்டப்பா ஸ்வாமி" என்றும் சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர். அவர் ஸ்ரீபாஷ்யத்தில் விளக்கிய வேதாந்தம், பகவத் விஷயம் முதலிய வைஷ்ணவ சம்பிரதாய நூல்களையும் பகவத் கீதை, வால்மீகி ராமாயணம் முதலியவைகளையும் திறம் படப் பிறருக்குப் பிரசங்கித்து வந்தார். அத்துறையில் இறங்கிய வேறெவருக்கும் அவருடைய திறமை இல்லை என்னும் புகழுரையை நான் 12 வருஷங்களுக்கு முன் தேசாந்தரத்தில் கம்பராமாயணம் சொல்ல வந்த ஒருவரிடத்திலிருந்து பல முறை கேட்டிருக்கிறேன்.

இவருடைய முன்னோர்களில் பலர் பிரசித்தி பெற்ற வர்கள். எல்லோரும் வைஷ்ணவ சம்பிரதாய நூல்களில் பயிற்சியுள்ளவர்கள். அவரவர் காலத்தில் சிறந்த அறிவாளிகளாக விளங்கினர்.

பட்டப்பா ஸ்வாமிகள் வைஷ்ணவ சமய நூல்களி லுள்ள தேர்ச்சியுடன் வடமொழிக் காப்பியங்களிலும் நல்ல பயிற்சியுடையவர். அவரிடம் காப்பியப் பிரசங்கங் களைக் கேட்க வேண்டுமென்றே அண்டினவர் பலர். வியாகரணமும் தர்க்கமும் பாடஞ் சொல்லுவதிலும் அவர் தேர்ந்தவர்.

இச் சிறந்த குலத்தில் ஸ்ரீ விஜயராகவன் சுப கிருது ஞு கார்த்திகைமீ 15-உக்குச் சரியான 30-11-1902-இல் தோன்றினர். இவர் பிறந்த ஊர் தென்னார்க்காடு ஜில்லாவில் மஞ்சக்குப்பத்துக்கும் விருத்தாசலத்துக்கும் இடையேயுள்ள ரஸ்தாவில் குறிஞ்சிப்பாடியிலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ள ஆடூர் அகரம் என்பது. இவ்வூர் இவருடைய அன்னை யாரின் பிறந்தகம். இவருடன் பிறந்தவர் ஒரு சகோதரி தான்.

இவர் முதலில் தஞ்சாவூரிலுள்ள திருக்கண்ணபுரம், மன்னார்குடி, குடவாசல் என்னும் மூன்று ஊர்களிலும் பின்பு சென்னையில், 'ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்' என்னும் பள்ளிக்கூடத்திலும் இளமைக்கல்வி பயின்றார்.

இக் கீழ் வகுப்புகளில் இவர் ஒரு சிறந்த மாணுக்கராக விளங்கிப் பல பரிசுகளையும் பெற்ருர்.

இவர் 1918-ஆம் வருஷம் முதல் 1920-ஆம் வருஷம் வரையில் சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் 'இன்டர் மீடியேட்' வகுப்பில் படித்தார். இங்கே இவர் கெட்டிக்காரராக விளங்கினுர் என்று சொல்ல முடியாது. இன்டர்மீடியட் பரீக்ஷையிலும் இவர் சாதாரணமான இரண்டாவது வகுப்பில்தான் தேறினுர். இவருக்கு விருப்பமானதும், பின்பு இவர் சிறப்படைந்திருப்பதுமான கணக்கு என்னும் விஷயத்தில்கூட அந்தப் பரீக்ஷையில் இவர் சோபிதமான மார்க் வாங்கவில்லை.

எனவே இவர் ராஜதானிக் கலாசாலையில் கணக்குப் பகுதியில் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் சேருவது கொஞ்சம் சிரம சாத்தியமான காரியமாகிவிட்டது. இவருக்குக் கணக்கிலிருந்த ஆசையைக் கண்டு பச்சையப்பன் கல்லூரியில் கணித போதகாசிரியராயிருந்த ஸ்ரீமான் எம். வைத்தியநாதையரென்பவர், ராஜதானிக் கலாசாலையில் கணித ஆசிரியராயிருந்த ஸ்ரீமான் கே. ஆனந்தராவ் என்பவரிடம் அழைத்துச் சென்ருர். ஆனந்தராவும் இவரைப் பரிசோதித்து இவருடைய ஆற்றலைப் பற்றித் தெளிந்து அவ் வகுப்பில் இவரைச் சேர்த்துக்கொண்டார். இவர் காலேஜில் சேர்ந்த சில மாதங்களுக்கெல்லாம் கணித சாஸ்திரத்தைக் குறித்து ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை பிரசுரித்துத் தம்முடைய ஆசிரியர் ஆனந்தராவை மகிழ்வித்தார்.

ஆனுல் கலாசாலையில் பரீக்ஷக்கென்று திட்டம் போட்டிருந்த பாடங்களில் இவர் மனம் செல்லவில்லை. தம்முடைய ஆராய்ச்சியிலேயே முழுவதும் ஈடுபட்டுவிட்டார். ஆனந்தராவுக்கு இவரிடம் அதிக மதிப்புத் தோன்றி வளர்ந்து வந்தது. இவ்விருவருக்கும் உள்ள தொடர்பு சாதாரணமாக ஓர் உபாத்தியாயருக்கும் மாணவனுக்கும் இடையில் உள்ளதைப்போல் இல்லை. மரியாதையுடன் தமக்குச் சமமாக ஒரு நாற்காலியில் இவரை இருக்கச் சொல்லி இவருடன் வெகு நேரம்

ஆனந்தராவ் அளவளாவுதலை அக்கலாசாலையில் நானே பல முறை கண்டிருக்கிறேன்.

கலாசாலையில் படிக்கையில் இடையில் ஒரு வருஷம் நோய்வாய்ப்பட்டதன் பயனாக இவர் படிப்பு வீணாயிற்று. பரீக்ஷைக்கென்று வைக்கப்பட்ட விஷயங்களில இவர் தம்முடைய ஊக்கத்தைச் செலுத்தாதனால் 1924 மார்ச்சு மாதத்தில் இவர் கொடுத்த பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷையில் இவர் தேறவில்லை. அதோடு இந்தியாவில் இவருடைய உயர்தரப் படிப்பு நின்றது.

ஆனால் ராஜதானிக் கலாசாலையில் இவர் மாணவராயிருக்கையில், இடையிடையே ஆனந்தராவ் தேர்ந்தெடுத்துக்கொடுத்த சில முக்கியமான ஆராய்ச்சிகளைப் பயன்படச் செய்து முடித்தார். அவ்வாராய்ச்சியினால் கண்டுபிடித்த விடைகளுள் சிலவற்றை இவரே நேராகச் சீமையில் ஜி. எச். ஹார்டியென்னும் கணித ஆராய்ச்சிக்காரருக்கு அனுப்பினார். ஆனால் ஹார்டி இவருடைய விடைகளைச் சற்றும் கவனியாமல் பராமுகமாயிருந்துவிட்டார்.

இதற்கிடையில் தற்போது சென்னைச் சர்வகலாசாலையில் புத்தகசாலை நிர்வாகஸ்தராயிருக்கும் ஸ்ரீமான் எஸ். ஆர். ரங்கநாதன் என்பவர் சீமையில் 1925-ஆம் வருஷத்தில் ஹார்டியைச் சந்திக்க நேர்ந்தது. விஜயராகவனுடைய விடைகளைப்பற்றி அவரை ரங்கநாதன் விசாரித்ததன் பயனாக ஹார்டி இவ்விடைகளில் ஒன்றைத் தாமாகவும், ஏனைய சிலவற்றைத் தம்முடைய மாணவர்களைக்கொண்டும் ஆராய்ந்தார். அப்போதுதான் அவருக்கு விஜயராகவனுடைய கணித ஆராய்ச்சியின் மேன்மை புலப்பட்டது. உடனே அவர் சென்னைச் சர்வகலாசாலைத் தலைவரான மெக்பெய்ல் என்பவருக்கு விஜயராகவனைக் குறித்து ஒரு கடிதம் எழுதி, சீமைக்கு வர அவருக்கு ஓர் உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி தூண்டினார். அதோடு ஸ்ரீ எஸ். ஆர். ரங்கநாதனும் ஒரு கடிதம் எழுதினார். ஹார்டியின் கடிதத்தைக் கண்டு வருஷம் ஒன்றுக்கு 300 பவுன்கள் வீதம் மூன்று வருஷங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும், அதோடு போக

வரக் கப்பல் செலவும், உடைகளுக்காகக் கொஞ்சம் பணமும் கொடுக்கவேண்டுமென்றும் சென்னைச் சர்வ கலாசாலையார் தீர்மானித்தார்கள்.

இந்த விஷயம் சர்வகலாசாலை அங்கத்தினருள் விவாதத்துக்கு வந்தபோது நடைபெற்ற நகைச்சுவை யுள்ள ஒரு நிகழ்ச்சி இங்கே குறிப்பிடத்தக்கது. அங்கத் தினருள் ஒருவரான டாக்டர் ஸி. நடேச முதலியார், “பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷையில் தேருத ஒருவருக்கு இம்மாதிரி நன்கொடை அளிக்கலாமா?” என்று இடை மறித்தார். “பலமுறை வைத்தியப் பரீக்ஷயில் தவறி யும் நண்பர் நடேச முதலியார் இப்போது ஒரு சிறந்த வைத்தியராக விளங்குவது எப்படியோ?” என்று ஸ்ரீமான். எஸ். சத்தியமூர்த்தி விடையளித்து அவரை மடக்கியதுடன் சபையோரையும் நகைக்கச் செய்தார்.

விஜயராகவன் 1925-ஆம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் சீமைக்குப் புறப்பட்டார்.

சீமையில் ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் நியூ காலேஜ் என்னும் கல்லூரியில் இவர் ஒரு மாணவராகச் சேர்ந்து அங்கே ஆசிரியராயிருந்த ஹார்டியினிடம் தம் ஆராய்ச்சிகளைத் தொடங்கினர். 1925-ஆம் வருஷம் முதல் 1928-ஆம் வருஷம்வரையில் அங்கே இருந்தார். தம்முடைய ஆராய்ச்சிகளையும் பல கட்டுரைகள் மூலம் வெளியிட்டுக் கடைசியில் பி எஸ்ஸி., டாக்டர் (D. Phil.) என்னும் இரண்டு ஆராய்ச்சிப் பட்டங்களை அடையத் தம்மை அருகராக்கிக்கொண்டார். 1928-ஆம் ஆண்டு அக்டோப ரில் இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்.

முதல் முதலில் இவர் சிதம்பரத்தில் அண்ணாமலைச் சர்வகலாசாலையில் ஆராய்ச்சியாளராக 1929-இல் அமர்ந் தார். ஆனால் அதை விட்டு ஒரு வருஷத்துக்குள் அகல வேண்டிவந்தது. அடுத்ததாக 1930-1931-இல் வட இந்தி யாவில் ஐக்கிய மாகாணத்திலுள்ள அலீகட் சர்வ கலா சாலையில் ஆசிரியர் பதவி கிடைத்தது. அங்கே இவருக்கு மேல் ஆசிரியராயிருந்தவர் ஆந்த்ரே வெ இல் (Andre Weil) என்ற ஒரு பிரெஞ்சு யூதர்.

இவ்விருவருக்கும் இடையே ஓர் இணைபிரியாத நட்பு நாளடைவில் ஏற்பட்டு இருவரும் ஒரு குடும்பத்தினர் போல் நெருங்கிப் பழகினர். 1931 முதல் விஜயராகவன் டாக்கா சர்வகலாசாலையில் கணித ஆசிரியராக இருந்து வந்தார். 1946-இல் ஆந்திர சர்வகலாசாலையில் கணித ஆசிரியராக நியமனம் பெற்றார்.

சில ஆராய்ச்சிக்காரரைப்போல் அல்லாமல் இவர் கணித சாஸ்திரப் பகுதிகள் பலவற்றுள் நன்னோக்கத்தைச் செலுத்தியதனால் இவருடைய ஆராய்ச்சிகள் குறுகியனவாக இல்லாமல் பரந்த தன்மையுடையனவாக இருக்கின்றன.

இவருடைய ஆராய்ச்சிகள் பரிமளித்ததற்குக் காரணபூதராயிருந்தவர்களுள் முக்கியமானவர் ஆனந்தராவ் அவர்களே. அவ்வப்போது புதிய கணக்குகளை ஆராயச் சொல்லித் தூண்டி இவருக்கு ஊக்கமளித்து வந்தவர் அவரே. காலஞ்சென்ற பி. வி. சேஷுவையர் என்பவருக்கும் இத்தொண்டில் ஒரு பெரும் பங்கு உண்டு. விஜயராகவன் பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷையில் தவறியவுடனேயே, ஹார்டி கடிதம் எழுதுவதற்கு முன், சேஷுவையர் சென்னைச் சர்வகலாசாலையிலிருந்து இவருக்கு ஓர் உபகாரச் சம்பளம் கிடைப்பதற்கு முயன்றார். விஜயராகவனின் ஆராய்ச்சிகளைப் பார்க்கும்படி ஹார்டியைத் தூண்டிய எஸ். ஆர். ரங்கநாதனும் இவரை ஆதரித்தவர்களுள் ஒருவராகிவிட்டார். ஆனால் இவர்கள் எல்லோரையும்விட இவருக்கு அதிக ஆதரவும் அன்பும் அளித்தவர் ஹார்டியே.

**1936-ஆம்** வருஷத்தில் இதுவரையில் ஓர் இந்தியக் கணித ஆராய்ச்சிக்காரருக்கும் கிட்டாத ஓர் அரிய பாக்கியம் இவருக்குக் கிடைத்தது. அவ் வருஷத்தில் அமெரிக்கக் கணித சங்கத்தினர் இவரை அங்கே வந்து தம்முடைய ஆராய்ச்சிகளைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தும்படி அழைத்தனர். அமெரிக்கா, கானடா இவ்விரு தேசங்களிலுமுள்ள சுமார் நாற்பது பிரபல சர்வகலாசாலைகள் இவரை அழைத்தன. போதிய ஓய்

வில்லாமையால் அவைகளுள் சுமார் 25 அழைப்பு களையே இவர் ஏற்றுக்கொள்ள முடிந்தது.

1936 மார்ச்சு முதல் 1937 ஜனவரி வரையில் அந்த யாத்திரை நடந்தது. அதனோடு இவர் நார்வே தேசத்தின் தலைநகரமாகிய ஆஸ்லோ என்னும் ஊருக்கும், இங்கிலாந்தில் தம்முடைய ஆசிரியரான ஹார்டியைப் பார்ப்பதற்காகக் கேம்பிரிட்ஜுக்கும் சென்றார்.

இப் பிரசங்க யாத்திரையில் அமெரிக்க சர்வ கலா சாலைகளிலிருந்து இவருக்குக் கிடைத்த பணம், போக வரக் கப்பல் செலவு உட்பட இவருடைய சகல செலவு களுக்கும் சரிக்கட்டிக்கொண்டது.

இரண்டாம் முறையாக அமெரிக்காவுக்கு இவர் ஒரு பிரசங்க யாத்திரையைச் சமீபத்தில் செய்யவிருக்கிறார்.

கணித ஆராய்ச்சியில் இவருக்கு இருந்த ஆர்வம் இதர விஷயங்களில் இவருடைய கவனத்தைத் தடைப் படுத்தவில்லை. வடமொழி நூல்களில் இவருக்குப் பிரியமும் பயிற்சியும் உண்டு. அவைகளுக்குள் காளி தாசனுடைய ரகுவம்சம், வால்மீகி ராமாயணம், வியாசரின் மகாபாரதம் இந்த நூல்களில் இவருக்கு விசேஷப் பற்று. பாரதத்தில் யக்ஷப்ரச்னத்தில் தருமர் அளித்திருக்கும் விடைகளின் நுட்பங்களைத் தாம் அநு பவிப்பதுடன் பிறரையும் கேட்டுக் களிக்கச் செய்வதை நான் பலமுறை கண்டிருக்கிறேன்.

தமிழ்மொழியிலும் இவருக்கு விசேஷ அன்பு உண்டு. தமிழ் நூல்களுக்குள் இவர் அதிகமாக விரும்பி யது குறளும் நாலாயிரப் பிரபந்தமுமே. இவரை ஒரு குறள் பித்தர் என்னலும் தகும். சமயம் வாய்த்த போதெல்லாம் சலிக்காமல் குறட்பாக்களை மேற்கோள் களாக எடுத்தாளுவார்.

அமெரிக்காவில் பல இடங்களில் இவர் குறளைப் பற்றிப் பிரசங்கம் செய்து, "இவ்வளவு அரிய நுட்ப மான உண்மைகள் பொதிந்த நூல் ஒன்றை இரண்டாயி

ரம் வருஷங்களுக்குமுன் எழுதிய கவி ஒருவர் உங்கள் ஊரில் இருந்தாரா!'' என்று அவர்கள் ஆச்சரியத்துடன் கேட்கும்படி செய்தாராம்.

ஒரு பிரசங்கத்தில் குறளின் நீதிகளை எடுத்து விளக்கி அவைகளைத் தற்காலத்திய மேனாட்டு ராஜீய நிலைமையின் பல அம்சங்களுடன் இவர் பொருத்திக் காட்டியது, அவ்வூர் ராஜதந்திரிகள் நம் குறளைப் படித்துவிட்டுத்தான் தங்களுடைய வேலைகளைத் திட்ட மிட்டனரோ என்று கேட்போரை வியக்கச் செய்த தாம்.

நாலாயிரப் பிரபந்தத்தில் இவருக்கு இருந்த பரிச யத்தை விளக்க இரண்டு சம்பவங்கள் இங்கே குறிப்ப தற்குரியன.

ஒரு சமயம் ஒரு தனித்தமிழ்ப் பிரியர் தாம் நடத்திய சொற்பொழிவில் தமிழரைச் சிறப்பித்துக் கூறுகையில், 'நாகரிகம்' என்னும் சொல்லுக்குத் தற்காலத்திய இன்பக்களியாட்டுக்கள் என்று பொருள் கொள்ளா மல், 'பிறரிடம் இரங்குதல்' அல்லது 'கண்ணோட்டம்' என்னும் பொருளிலேயே அதை வழங்கினர் என்று சொல்லி அதற்கு மேற்கோளாக,

> ''பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்''

என்னும் குறளைச் சொன்னார். உடனே இவர், ''வேறு பொருளிலும் இச்சொல் பண்டைத் தமிழ் நூல்களில் வழங்கப்பட்டிருக்கிறது'' என்று கூறி, அதற்குச் சான் றாக அடியிற்கண்ட திருமங்கையாழ்வாரின் பெரிய திரு மொழியில் வரும் செய்யுளைக் குறித்தார் :

> ''வம்பவி ழும்துழாய் மாலைதோள்மேல்
> கையன ஆழியும் சங்கும்ஏந்தி
> நம்பர்நம் இல்லம் புகுந்துநின்றார்
> நாகரி கர்பெரி துர் இளையர்
> செம்ப வளம்இவர் வாயின்வண்ணம்
> தேவ ரிவரது உருவம்சொல்லில்

அம்பவ ளத்திர ளேயும்ஒப்பார்
அச்சோ ஒருவ ரழகியவா!"
—9-ஆம் பத்து, 2-ஆம் திருமொழி.

(இங்கே 'நாகரிகர்' என்பதற்கு ரஸிகர் என்று பொருள்.)

கலாசாலையில் இவர் மாணவராயிருக்கையில் ஒரு சமயம் இவர் மகாமகோபாத்தியாய ஸ்ரீ சாமிநாதையரவர் களைச் சந்திக்க நேர்ந்தபோது அவரிடம், "திருமங்கை யாழ்வாரின் பெரிய திருமொழியில், 9-ஆம் பத்து 2-ஆம் திருமொழியில் 2-ஆவது செய்யுளில், 'துளம்படு முறுவல்' என்று ஒரு வருணனை வருகிறது. இதில் 'துளம்' என்னும் சொல்லுக்கு மாதுளம் என்று சாதாரணமாகப் பொருள் கூறுவதுடன் பீலிக்காம்பு (மயில் தோகைக் காம்பு) என்றும் உரையாசிரியர்கள் கூறுகிறார்கள். இந்தப் பொரு ளில் இந்தச் சொல் வேறு எந்த நூலிலாவது வந்திருப்ப தைக் கண்டிருக்கிறீர்களா?" என்று கேட்டாராம். ஐயர வர்கள், "இல்லை" என்று விடையளித்ததுடன், உடனே அதை ஒரு தாளில் குறித்துக்கொண்டது இவருக்கு வியப்பை அளித்ததாம்!

இவர் குறித்த செய்யுளின் முதல் இரண்டடிகள்,

"துளம்படு முறுவல் தோழியர்க் கருளாள்
துணைமுலை சாந்துகொண் டணியாள்"

என்பன.

இவர் ஒரு நல்ல ரஸிகர். எனவே பழைய இதிகாசங் களில் இவருக்குள்ள பற்றுதல் வெறும் மூடபக்தியில் பிறந்ததன்று. அவைகளில் உள்ள கலைச்சுவையும் பொருட்சிறப்புமே இவர் மனத்தைக் கவர்ந்தன. உதார ணமாக வால்மீகி ராமாயணத்தில் வருவிக்கப்படும் ராம குணங்கள் இவரால் அதிகமாக ரஸிக்கப்படுகின்றன. அதே மாதிரியே விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் பகவா னுக்குக் கொடுக்கப்படும் அடைமொழிகளில் ஒன்றான ஸத்ய சங்கல்பன் என்பதைக் குறித்து நினைத்த படி காரியங்களைச் செய்ய இயலாத மானிடராகிய நம் 'அஸத்ய சங்கல்ப' குணத்தைச் சுட்டிக் காட்டுவார்!

இக்கலை நுகர்ச்சியும் வாக்கு வன்மையும் இவருக்குப் பிதிரார்ஜிதமாகக் கிடைத்த செல்வமே போலும்! இல்லாவிட்டால் இவருடைய சொந்த ஊராகிய திருக்கண்ணபுர வாசிகளைப்பற்றித் திருமங்கையாழ்வார்,

"கலையிலங்கு மொழியாளர்
கண்ணபுரத் தம்மானைக்
கண்டாள்கொலோ?"

என்று வாயாரப் புகழ்வாரா!

இவர் சற்றுப் பருமனான தேகத்தையுடையவர். சிவந்த மேனி; பரந்த முகமும் நெற்றியும். இவர் கண்களிலுள்ள ஒரு கூர்மையும் ஒளியும் கண்டோரைக் கவரும்.

கடல் கடந்ததன் பயனாக இவர் தம்முடைய குலாசாரங்களையும் மதப்பற்றையும் விட்டுவிடவில்லை. பளிச்சென்ற பட்டைத் தென்கலை நாமம் நெற்றியில் அணிவதற்கு இவர் அஞ்சுவதில்லை. உச்சிக்குடுமியும் இவருக்கு உண்டு.

உண்மையான விருந்தோம்பலை இவரிடந்தான் நான் கண்டேன். இவர் இல்லத்துக்கு விருந்தினராகச் செல்லுபவர்கள் இவர் குடும்பத்தினரில் ஒருவராக ஆகிவிடுவது திண்ணம். இவருடைய நண்பராகிய மேற்குறித்த ஆந்த்ரே வெஇல் என்பவர் டாக்காவில் இவர் இல்லத்தில் தங்கியிருக்கையில் நான் கண்டது இவ்வுண்மையை நன்கு விளக்கியது. நட்புக்கு எத்துணை உரியவர் இவர் என்பதும் அப்போது தெரிந்தது. இவருடைய அன்னையாரிடம் இவர் பழகுவது இவர் மாத்ருபக்திக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி நிற்கிறது. இவரிடம் படாடோபமும் செருக்கென்பதும் கட்டுடன் இல்லை. அடக்கமும் அமைதியும் இவரைத் தம் உறைவிடமாக்கிக் கொண்டுவிட்டன. சோம்பேறித்தனத்தை இவர் அடியோடு வெறுப்பார். எனவே குறளில் இவருக்குப் பிடித்த பாக்கள் பலவற்றுள்,

"குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்"

என்பது ஒன்றாயிருந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

தெரிந்த விஷயத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதில் இவர் வெகு சமர்த்தர். சொல்லுவதைத் தெளிவாகச் சொல்லுவார். கெருடான பல கணித உண்மைகளைக் கணிதப் பயிற்சியில்லாதவர்களும் கேட்டுக் களிக்கும்படி சொல்லுவார். சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதை இவர் ஒரு முக்கிய லக்ஷ்யமாகக் கருதுவார். இதை வலியுறுத்தும்,

"பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்ரு தவர்"

என்னும் குறட்செய்யுளை இவர் பாராட்டுவார். இந்த நோக்கத்தை இவர் தம்முடைய சம்பாஷணைகளிலும் சொற்பொழிவுகளிலும் கடைப்பிடித்துக் காட்டுவார். இவ்வாறு செய்ய இளமையில் இவருடைய தந்தையாரிடம் இவர் பெற்றுக்கொண்ட சொற்ப தர்க்கசாஸ்திரப் பயிற்சி இவருக்குப் பெரிதும் பயன்பட்டது.

சிற்சில சமயங்களில் பிரிட்ஜ் என்னும் மேனுட்டுச் சீட்டாட்டத்திலும் சதுரங்கம் ஆடுவதிலும் இவர் பொழுது போக்குவார். ஆனல் இவ்விரண்டிலும் தாம் ஒரு சாதாரண ஆட்டக்காரர் என்று சொல்லிக்கொள்ளுகிருர்.

காலஞ்சென்ற கணித நிபுணர் ராமாநுஜனிடம் இவருக்கு ஒரு தனி மதிப்பு உண்டு. கணிதத்துக்கு அவர் இயற்றிய தொண்டு எவ்வளவு சிறந்தது என்பதைப் பலர் அறிந்துகொள்ளவில்லை என்றும், அதை அறியச் செய்ய வேண்டுவது தம் கடமை என்றும் கொண்டு தம் மால் இயன்ற அளவில் இச்சேவையை இவர் செய்து வருகிருர்.

ராமாநுஜனைப்பற்றி ஹார்டி, 'அவர் என்னிடம் அறிந்துகொண்டதைவிட அதிக விஷயங்களை நான் அவரிடம் தெரிந்துகொண்டேன்' என்று எழுதியிருப்பதை ஒரு புகழுரையாகக் கருதுவதுடன், ஒரு குறைபாடாகவும் எண்ண வேண்டும் என்று இவர் அடிக்கடி வற்புறுத்துவார். "ஆசானும் மாணவனும் ஒருவரிடம் ஒருவர்

பல விஷயங்களைக் கற்க வேண்டும்" என்னும் கீதை உபதேசத்துக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டுமென்பது இவருடைய கொள்கை.

சமீபகாலத்தில் விஜயராகவன் செய்து வெளியிட்டிருக்கும் சில ஆராய்ச்சி முடிபுகள் உயர்ந்த தன்மையுடையன. தொடர்ந்து இத்தகைய ஊக்கத்துடனேயே இவர் உழைத்து வருவாரென்பதிலும் அதன் பயனாக இன்னும் புகழுக்குப் பாத்திரமாவார் என்பதிலும் சிறிதும் ஐயமில்லை.

4

# சாது முதலியார்

சுமார் மூன்று வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் இது. என் குடும்பத்துடன் ராமேசுவர ஸ்தல யாத்திரையாகச் சென்றிருந்தேன். திரும்புகாலில் வயது கடந்த என் தந்தையாரை இடையிலுள்ள ஒரு சிற்றூரில கண்டு அவருடன் ஒரு நாள் கழித்துவிட்டு மீண்டும் சென்னையை நோக்கி என் பிரயாணத்தைத் தொடங்கினேன். விழுப்புரம் ஜங்ஷனில் சென்னைக்குச் செல்லும் ரெயில்வண்டி ஒன்றில் இரண்டாவது வகுப்பில் ஏறவேண்டியிருந்தது. பகல் வண்டியாகையால் ஒரே கூட்டம். என் மனைவியுடனும் இரு பெண்குழந்தைகளுடனும் சிரமப்பட்டு ஓர் இடத்தைத் தேடிப்பிடித்து ஏறி அதில் நாங்கள் அமர்ந்தோம். நான்குபேர் உட்காரக்கூடிய பெட்டியாகிய அதில் ஒருவர் மட்டுமே வீற்றிருந்தார். அங்கே நாங்கள் சென்றவுடன் அவர் சிறிது நேரத்துக்குள் தம் சாமான்களை எல்லாம் எடுத்துக்கொண்டு பக்கத்தில் இருந்த ஒரு பெட்டிக்குத் தாமாகவே போய்விட்டார். இது எனக்குப் பெருத்த ஆச்சரியம் அளித்தது. எங்கள் தனிமையைக் குலைக்க எண்ணமின்றி, போன இடத்தில் ஜனநெருக்கத்தில் தமக்கு ஏற்பட்ட தேக அசௌகரியத்தையும் பாராட்டாமல் எங்களுக்குத் தாமாகவே உதவிய இப் பெரியார் யார் என்பதை அறிய ஆவல்கொண்டேன். நல்ல வேளையாக அவர் தம் சாமான்களை அப்புறப்படுத்துகையில் தமக்குச் சொந்தமான படம் ஒன்றை எடுத்துப்போக மறந்துவிட்டார். ஆசனத்துக்குக் கீழே விழுந்து கிடந்த அது என் கண்ணில்பட்டது. அதில் அச்சடித்த வரவேற்புத்தாள் ஒன்று இருந்தது. அத்தாளில் இருந்த பெயரைப் பார்த்தவுடன்,

'இவர்தாமா அவர்! அதனால்தான் இயற்கையா

கவே பிறருக்கு உதவ முன் வருகிறார்' என்று எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன்.

இச்சிறு சம்பவத்தை ஏன் இவ்வளவு விஸ்தாரமாகச் சொல்லுகிறேன் என்றால், உயர்தர வகுப்புப் பிரயாணிகளுக்குள் பொதுவாக இத்தகைய ஒத்துழைப்பு ஒரு நாளும் இருப்பதில்லை. வெற்றிலைக்குச் சுண்ணும்போ, மூக்கில் போட்டு உறிஞ்ச ஒரு சிட்டிகை பொடியோ இரவல கேட்பதிலிருந்து தொடங்கிக் கடைசியில் ஒரு கல்யாணமே நிச்சயம் செய்துவிடும் மூன்றும் வகுப்புப் பிரயாண சிநேகம் இங்கே கட்டுடன் இல்லை. ஒரு முறை நான் கல்கத்தா செல்லுகையில் ஓர் இந்திய தனவந்தருக்கும் ஒரு வெள்ளையருக்கும் இடையே அவ்வண்டியிலுள்ள மின்சார விசிறியை எப்படித் திருப்பி வைத்திருப்பது என்பதைப்பற்றி ஒரு விவாதம் மூண்டு கடைசியில் அது கைகலப்பில் போய் முடிந்தது. இந்தக் கோர சம்பவத்தையும் சென்ற இருபது வருஷங்களில் நான் வருத்தத்துடன் கண்ட இதைப்போன்ற பல நிகழ்ச்சிகளையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் அன்று விழுப்புரத்தில் நடந்தது சற்று நம் பத்தகாததாகவே இருந்தது.

முன்பின் தெரியாத எங்களிடம் அன்றைத் தினம் அன்புகாட்டிய அப்பெரியார்தாம் திரு. வி கல்யாண சுந்தர முதலியார் என்னும் சிறந்த தேசபக்தர். பிறருக்கு உதவுதல் என்பது அவருக்கு இயற்கையிலேயே அமைந்திருக்கும் ஓர் அரிய குணம். கூர்ந்து கவனித்தால் அது அவர் முகத்திலிருந்தே நன்கு விளங்கும்.

இவர் நிரந்தரமாக வசித்து வருவது சென்னையின் ஒரு பகுதியாகிய ராயப்பேட்டையில். ஆனால் இவர் பிறந்த ஊர் சென்னைக்குப் பத்து மைல் தூரத்தில் உள்ளதும், பூவிருந்தவல்லி (பூந்தமல்லி)க்குப் போகும் மார்க்கத்தில் உள்ளதுமான துள்ளம் என்னும் சிற்றூர். ஆனால் இது ஊர் என்று அழைக்கப்படுவதற்கே தகுதியில்லாததாம். ஒரு சமயம் இவ்வூருக்கு இவருடன் சென்ற ஒரு நண்பரை நோக்கி இவர், "எப்படியப்பா இருக்கிறது இவ்வூர்?" என்று கேட்டதற்கு அந்நண்பர் எந்தப் பதிலும் கொடுக்கவொண்ணமல் சும்மா புன்னகை

புரிந்தாராம். நான்கு ஓலைக் குடிசைகளையும், மூன்று கல் வீடுகளையுமே கொண்ட இந்தக் குடியிருப்பை ஊர் என்று சொல்லிக் கௌரவப்படுத்த அவர் மனம் இடங்கொடுக்க வில்லை போலும்!

வியாபாரநிமித்தமாகச் சென்னையிலிருந்து இவருடைய பெற்றோர்கள் இவ்வூருக்குச் சென்று தங்கியிருக்கையில் இவர் தோன்றியதால்தான் இவர் இச்சிற்றூரில் பிறக்க நேர்ந்தது. இவர் பிறந்த வருஷம் கி. பி. 1883.

நம் முதலியாரின் தந்தையார் திருவாரூர் விருத்தாசல முதலியார் என்பவர். அவருக்கு முதலில் பச்சையம்மாள் என்னும் பெண்மணியும் அவ்வம்மையார் இறந்த பின் சின்னம்மாள் என்னும் மாதும் வாழ்க்கைத் துணைவிகளாக அமைந்தார்கள். இவர்களிடத்தில் விருத்தாசல முதலியாருக்குத் தோன்றிய பன்னிரண்டு குழந்தைகளுக்குள் நம் கல்யாணசுந்தரனார் ஒருவர்.

இவர் தந்தையார் தம் வாழ்நாளில் நோயுற்றதும் இல்லையாம், பொய் சொன்னதும் இல்லையாம். எனவே நல்ல சுகாதார நிலையில் இருத்தலையும் நேர்மையான ஒழுக்கத்தைக் கைக்கொள்ளுதலையும் இவர் பிதுரார்ஜித சொத்தாக அடைந்தார் என்று சொல்லலாம்.

பின்னால் தொழிலாளிகளின் சார்பாக முதலாளிக் கூட்டத்துடன் இவர் போர் நடத்துங்கால் துப்பாக்கிப் பிரயோகத்தையும் பொருட்படுத்தாமல் போர்முனையில் நிற்கவல்ல மனோதைரியத்தை இவர் சிறு வயதிலேயே சில சம்பவங்களால் காட்டியிருக்கிறார். உதாரணமாக அடியில்கண்ட நிகழ்ச்சியைக் கூறலாம். இவருக்கு ஆறும் பிராயம் நடந்துகொண் டிருக்கையில் ஒரு நாள் தெருவில் தம் சகாக்கள் சிலருடன் விளையாடிக் கொண்டிருந்தார். அப்போது அவ்வழியே அமீனா வேலை செய்து வந்த முனுசாமி பிள்ளை என்னும் ஒருவர் வர நேர்ந்தது. அவரைக் கண்டால் எல்லோருக்கும் ஒரே பயமாகையால் உடன் விளையாடிக்கொண் டிருந்த சிறுவர்கள் அனைவரும் உடனே அங்கும் இங்கும் ஓடி ஒளிந்து

கொண்டனர். அமீனு முனிசாமி பிள்ளை என்றால் அந்தப் பிராந்தியத்தில் அக்காலத்தில் அழுத பிள்ளை வாய் மூடுமாம்! இத்தகைய பிரதாபங்கொண்ட அப்பேர்வழியைக் கண்டு சற்றேனும் பயமின்றி நம் முதலியார், பயந்தோடும் தம் சிநேகிதர்களை விளித்து, "ஏன் இப்படி ஓடுகிறீர்கள்?" என்று கேட்டாராம். சிறுவனின் தைரியம் அமீனுவின் நோக்கத்தைக் கவரவே, அவர் இவருடைய கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு சிறுவனின் தந்தையிடம் போய் அவரைப் பார்த்து, "நீர் இச்சிறுவனைத் தகுந்த முறையில் வளர்த்த வேண்டும். இவன் பிற்காலத்தில் பேரறிஞனாய் விளங்கக் கூடியவன்" என்று சொன்னாராம்.

அன்று அமீனு சொன்னது எவ்வளவு உண்மையாயிற்று என்பதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

நம் முதலியார் நான்காம் வகுப்பு வரையில் ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் படித்தார். அதற்கப்புறம் வெஸ்லி கலாசாலைக்குச் சென்றார். ஆனால் இவர் உடல் நிலையில் ஏற்பட்ட இடையூறுகளால் இவருடைய படிப்புக்குப் பல தடங்கல்கள் ஏற்பட்டன. எனினும் நான்காம் வகுப்பிலிருந்து ஆறாம் பாரம் வரையில் இவருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டதுடன், பல பரிசுகளும் கிடைத்தன. கடைசியாக 1904-ஆம் ஆண்டில் இவருக்கு 21-ஆம் வயது நடந்துகொண்டிருக்கையில் ஆறாவது பாரத்துடன் இவருடைய படிப்பு நின்றது. இவர் வெஸ்லி கலாசாலையில் ஐந்தாம் பாரத்தில் படித்துக்கொண்டிருக்கையில் இவருக்கும் அங்கே அப்போது தமிழ்ப் பண்டிதராயிருந்த கதிரைவேற் பிள்ளை என்பாருக்கும் தொடர்பு ஏற்பட்டு அதன் பயனாக இவருக்குத் தமிழ் மொழியில் பற்றுதலும் பயிற்சியும் ஏற்பட்டன.

சிறு வயதில் இவர் பல குறும்புச் செயல்கள் புரிந்திருக்கிறார். அதனால் இவருடைய உடல் நலனுக்குச் சில சமயங்களில் இடையூறும் ஏற்பட்டதுண்டு.

ஆறாம் பாரத்தில் இவருடைய படிப்பு முற்றுப் பெற்றபின் சில உறவினரின் புத்திமதியின் பேரில் இவர் கணக்கெழுதும் கலையைக் (புக்கீப்பிங்) கற்றார்.

1906-ஆம் வருஷத்தில் ஸ்பென்சர் கம்பெனியில் ஒரு குமாஸ்தா வேலையில் அமர்ந்தார். அங்கே வேலை செய்து வருகையில் பத்திரிகைகளைப் படித்து அவைகளிலுள்ள விஷயங்களை அங்கே உடன் வேலை செய்துவந்த தொழிலாளிகளுக்கும் எடுத்துச் சொலலிவந்தார். இது அங்குள்ள அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லையாகையால் இப்பழக்கத்தை நிறுத்தும்படி இவருக்குத் தடையுத்தரவு பிறந்தது. இதைச் சகிக்காமல் உத்தரவு தமக்குக் கிடைத்த அன்றே அவ்வேலையிலிருந்து இவர் விலகினார்.

அடுத்தபடியாக இவர் மேற்கொண்ட வேலை ஆயிரம் விளக்கு என்னும் பகுதியைச் சேர்ந்த 'மிஷன்' பாடசாலையில் ஓர் ஆசிரியர் பதவி. இதில் இவர் 1909-இல் அமர்ந்தார். இது ஓர் ஆதித்திராவிடப் பள்ளிக் கூடம். அங்கே பள்ளியின் தலைவராயிருந்த ஜான் ரத்தினம் என்பவருக்கும் இவருககும் இடையே நட்பு உண்டாயிற்று. பிற்காலத்தில் இதைக் குறித்து நம் முதலியார், என் வாழ்வுக்கு உறுதுணையாக நின்றவர் திரு. ஜான் ரத்தினம் என்று சொல்லிக்கொள்ளும்படி அவ்வளவு வளர்ந்தது இந்தச் சிநேகம்.

இப்பள்ளியில் இவர் வேலை செய்கையில் இவருக்கு இயற்கையாகவே உள்ள நெஞ்சழுத்தத்தையும் தைரியத்தையும் நன்கு எடுத்து விளக்கிய சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அப்பள்ளிக்கூடத்தை மேற்பார்வையிட வந்த அதிகாரி ஒருவர் இவர் பிள்ளைகளுக்குக் கணக்குப் போதித்த முறை அந்த வகுப்புக்குத் தக்கதன்று என்று சொல்ல, இவர் தம் முறைதான் சரியானது என்று வாதிக்க, அதன் விளைவாக அவ்வதிகாரியிடத்திலிருந்து இவருக்கு, "அதிகப் பிரசங்கி" என்றபட்டம் கிடைத்தது. ஆனால் பின்னர் இவர் ஒரு கடிதமூலம் அவ்வதிகாரியின் குற்றத்தை எடுத்து விளக்கவே, அவர் அதை உணர்ந்து கொண்டு பரிசோதனையின் போது இவரிடம் மரியாதைக் குறைவாகத் தாம் நடந்துகொண்டதைக் குறித்து வருத்தமடைந்தார். இவர் ஸ்தானத்தில் வேறு எந்த இளவாசிரியரும் மேலதிகாரியை எதிர்த்து இவ்வளவு மனோதைரியத்துடன் நடந்துகொண் டிருக்கமாட்டார்.

அடுத்தபடியாக 1916-இல் இவர் வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியர் ஆனார். ஆனால் ஒன்றரை வருஷத்துக்குப்பின் அவர் அதைவிட்டு விலகி, 'தேச பக்தன்' என்னும் தேசியப்பத்திரிகைக்குத் தலைமை ஆசிரியரானார். இரண்டரை வருஷம் இதை நடத்திவிட்டுப் பின்பு 1920-இல் 'நவசக்தி' என்னும் தம் சொந்தப் பத்திரிகையைத் தொடங்கினார்.

தமிழில் இவருக்கு இருந்த பயிற்சியினால் அரசியல் துறையில் இவர் ஒரு புதிய முறையைப் புகுத்தினார். அதாவது, பாமரரே திரண்டிருக்கும் கூட்டத்திலும் பண்டிதர்கள் தமக்குள்ளேயே பேசும் இலக்கணத் தமிழில் சொற்பொழிவாற்றுதல் என்பதே. எனவே இவர் பேச்சைக் கேட்ட பலருக்கு (அதிலும் தொழிலாளிகளுக்கு) விஷயம் சரிவரப் புரிவது கடினம். இருந்தாலும் இவர்பேரில் உள்ள அன்பாலும் பொதுமக்களுக்காகவும் தொழிலாளிகளுக்காகவும் இவர் செய்துவரும் பரிசுத்தமான சேவையாலும் எல்லோருமே உத்ஸாகத்துடன் இவர் பேச்சைக் கேட்பார்கள்.

ஒரு சமயம் தமிழ்நாட்டு அரசியல் வாதிகளுக்குள் இவருடைய நடையைப் பின்பற்றுவது சகஜமாக இருந்தது; ஏன், அது ஒரு 'பாஷன்' கூட! அதிலும் தேவார வாக்கியமான, "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதை மேற்கோளாகப் பயன்படுத்துதல் நிச்சயமாக இவரைப் பின்பற்றிச் செய்யும் காரியமே.

ஆதித்திராவிடப் பகுதியைச் சேர்ந்த எளிய மக்களுக்குத் தொண்டு செய்வதில் இவருக்கு அதிக ஆர்வம் உண்டு. இப்பணியில் இவருக்குக் குருநாதர்களாக அமைந்தவர்கள் காலஞ்சென்ற உயர் நீதிபதிகள் மணி ஐயரும் சதாசிவ ஐயருமே. மணி ஐயரை இவர் மிக்க மதிப்புடன் கருதிவந்தார். அவரை இவர் 'மயிலை முனிவர்' என்று குறிப்பிடுவதுண்டு.

இவர் செய்துள்ள பொது ஸேவைகளுள் தலைசிறந்து நிற்பது தொழிலாளிகளின் நன்மைக்காக இவர் ஆற்றிய அரும் பெரும் தொண்டே. இதை இவர் மனோதிடத்துடன் பல இடையூறுகளுக்கிடையே - சில சமயங்கள்

தம் உயிருக்கே ஆபத்து நேரும்போலிருந்தும் - செய்து முடித்தார்.

காலஞ்சென்ற பெஸண்டு அம்மையாரிடம் இவருக்கு அதிக பக்தி உண்டு. அவ்வம்மையாரையும் மணி ஐயரையும் ஒரு முறை கோகலே மண்டபத்தில் இவர் அடியிற்கண்டபடி குறிப்பிட்டார்: "எனக்கு அரசியல் உணர்ச்சியை ஊட்டிய அனிபெஸண்டு அம்மையாரும், மணி ஐயரும் இதோ எனக்கு முன்னே காட்சியளிக்கின்றனர்."

பெண்களில் இவர் ஒரு தெய்வத்தைக் காண்கிறார். எனவே இவர் ஓயாமல், பெண் தெய்வத்தையும், பெண்மையின் பெருமைகளையும் பற்றிப் பேசிப் பிரசாரம் செய்திருக்கிறார். இக்கருத்தை விளக்கும், "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை" என்னும் இவருடைய நூல் இவர் எழுதியுள்ள புத்தகங்களுள் தலை சிறந்து நிற்கிறது.

தமிழறிஞர் உலகில் இவரும் இவருடைய தமையனார் உலகநாத முதலியாரும் இரட்டையர்போல் விளங்குகிறார்கள். வேறு எந்தச் சகோதரர்களுக்கு இடையேயும் இவர்களுக்குள் இருந்து வரும் சகோதரவாஞ்சையையும் அந்நியோந்நியத்தையும் காண்பது எளிதன்று. வாலிபப் பருவத்திலேயே தம் வாழ்க்கைத்துணைவியையும் அவள்பால் தமக்குண்டான இருமக்களையும் இழந்து தன்னந் தனியராக விடப்பட்ட இவர் தம் தமையனாரின் குமாரனைத் தம் மகன் எனவே கருதி அன்புகாட்டி வந்தார். ஆனால் இறைவன் செயலால் இவ்விளைஞனும் இறக்க நேரிட்டபோது அடியில் கண்டவாறு தமக்குற்ற துயரத்தை இவர் வெளிப்படுத்தினார்:

"என்னைத் தன்னந் தனியனாக்கிய ஆண்டவன் தமையன் வழிப்போந்து, எனக்குப் பல வழியிலும் ஆறுதல் அளித்துவந்த ஒரு மைந்தனையும இப்போது அழைத்துக்கொண்டான். எச்செல்வமும் பெறுத வறியேனுக்குத் தமையன் வழிக்கிடைத்த சேய்ச் செல்வமும் போயிற்று. எளியேன் வாழ்வை ஆண்டவன் திருவுள்ளப்படி நடத்துவானாக."

பகைவனுக்கும் அருளும் பெரியார்களுள் ஒருவர் நம் முதலியார். பிற்போக்கான கட்சியொன்றைச் சேர்ந்தவரும், சென்னையில் அந்நியர் ஆட்சிக்குத் தூணென உதவி புரிந்தவரும், இவருக்கு முற்றும் மாறான கொள்கையை உடையவருமான தியாகராஜ செட்டியார் மறைந்ததை ஒட்டி அடியில் கண்ட அநுதாபக் கூற்றுக்களை இவர் எழுதி வெளியிட்டது இச் சமரச குணத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக நிற்கிறது:

> "அன்னார் அரசியல் நோக்கத்துக்கு மாறுபட்டு நிற்கும் மனமுடையோராயினும், அவரது பிரிவு எமது உள்ளத்தை உருக்குகிறது. எழுதவும் முடியவில்லை. தியாகராஜர் பிரிவை உன்னுங்கால், அப்பிரிவு ஆறும், மலையும், கூவலும், குளமும், கலையுப், தொழிலும், மக்களுப், ஒழுக்கமும் பல படச் செறிந்த ஒரு பெரிய நகரம் திடீரென மறைந்தது போல் எமக்குத் தோன்றுகிறது."

எல்லா வகையிலும் பரம சாதுவான இவர் சொந்தமாகத் தொடங்கி இவரும் இவருடைய தமையனாரும் ஒன்று சேர்ந்து இன்றும் நடத்திவரும் அச்சுக்கூடத்துக்கு, "சாது அச்சுக்கூடம்" என்னும் பெயர் வெகு பொருத்தமாய் அமைந்திருக்கிறது. இப்பெரியாருக்குச் சில வருஷங்களுக்கு முன்பு வெகு சிறப்பாக அறுபதாம் ஆண்டுவிழா தமிழ்நாட்டில் பல இடங்களில் கொண்டாடப்பட்டது. அது தமிழ்நாட்டுக்கும் தமிழராகிய நமக்குமே ஒரு தனிப் பெருமை. ஆழ்ந்த கருத்துக்களும் பல புதிய ஆராய்ச்சி முடிவுகளும் நிறைந்த இவர் இயற்றியுள்ள சுமார் 30 புத்தகங்களையும் படித்துப் பயனடைதல் தமிழர்களாகிய நம் கடமை.

# 5

# தமிழ் நவீனத்தின் தாய்

படிப்பில் எவ்வளவு சோபிதமாயிருந்தாலும் பையன்களுக்குப் பள்ளிக்கூடமென்றால் கொஞ்சம் மனக் கசப்புத்தான். அங்கிருக்கும் கட்டுப்பாடுகள் படிக்கும் மாணவர்களின் உரிமைகளைக் களைந்தெடுத்துவிடுகின்றன என்னும் எண்ணந்தான் இதற்குக் காரணம். பள்ளிக் கூடங்கள் எப்படியோ அப்படியேதான் அங்கே உழைக் கும் உபாத்தியாயர்களும். ஓடியாடித் திரியும் சுதந்த ரத்தை மாணவர்களிடமிருந்து பறித்தெடுக்கும் பணியில் இந்த நிலயங்களுக்கு அநுசரணையாக இருப்பவர்கள் உபாத்தியாயர்கள் என்பது பிள்ளைகளின் எண்ணம். ஆகையால அவர்களிடத்திலும் மாணவர்களுக்குப் பொது வாக வெறுப்பே. எனவே பள்ளிக்கூட உபாத்தியாயர் களுக்கு இன்னல்கள் இழைப்பதில் பிள்ளைகளுக்கு ஒரு தனிப் பிரியம். இதை விளக்க ஒரு செய்யுளும் உண்டு.

"நெடுமால் திருமருகா
நித்த நித்தம் இந்த இழவா?
வாத்தியார் சாகாரா
வயிற்றெரிச்சல் தீராதா!"

என்பதுதான் அது. இந்தச் செய்யுள் மூலம் மாணவர் களின் உள்ளத்தைப் படம் பிடித்துச் சித்திரித்துக்காட்டி அவர்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் காட்சி ஒன்றை அமைத்து எழுதப்பட்டிருக்கும் கட்டம் தமிழ் நவீனம் ஒன்றில் வருகிறது. இந்த நவீனந்தான், "ஆபத்துக்கிட மான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்" என் னும் நவீனம். தமிழிலே இதற்கு ஈடான நாவல் இது வரையில் வெளிவரவில்லை என்றே சொல்லலாம். தமிழ் மொழியில் நாவல் அல்லது நவீனம் என்னும் இலக்கிய

அங்கத்துக்கு இதுதான் சிறந்த வழிகாட்டியாக நிற்கிறது என்றாலும் அது முற்றும் தகும். இதை எழுதிய பெரியார் காலஞ்சென்ற பி. ஆர். ராஜமையர் என்பவர். அவரைத் தமிழ் நவீனத்தின் தாய் என்று மிகவும் பொருத்தமாக அழைக்கலாம்.

ராஜமையருக்குச் சிவசுப்பிரமணிய ஐயர் என்றும் ஒரு பெயர் இருந்தது. இவர் மதுரை ஜில்லா வாசியாக இருந்தவர். இவர் பிறந்த ஊர் வத்தலகுண்டு என்பது. இது மதுரை ஜில்லாவில் நிலக்கோட்டை என்னும் தாலூகாவைச் சேர்ந்தது. அம்மையநாயக்கனூர் அல்லது கோடைக்கானல் ரோட்டு என்று சொல்லப்படும் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து கோடைக்கானல் மலைக்குப் போகும் பாதையில் இவ்வூர் இருக்கிறது. ஆதியில் இவ்வூருக்கு, "பக்துல குண்டா" என்று பெயராம். தெய்வபக்தியுள்ள ஸாதுக்கள் நிறைந்த ஓர் இடமாக இருந்ததாம் நாளடைவில் அப்பெயர் 'வத்தலகுண்டு' என்று மருவியதாம். முன் காலத்தில் அவ்விடத்தில் நல்ல ஜலத்தையுடைய ஒரு நீர்நிலை, அதாவது ஏரி, இருந்ததையும் தூய ஒழுக்கமுள்ள அவ்வூர்வாசிகளுக்கு ஸ்நான பானாதிகளுக்கு அது மிகவும் பயன்பட்டதென்பதையும் அப்பெயர் குறித்ததென்றும் சொல்லப்படுகிறது.

இவ்வூரில் பி. ஆர். ராஜமையர் என்பவர் 1872-ஆம் வருஷத்தில் பிறந்தார் இவர் அந்தணர் மரபில் வடமர் என்னும் உட்பிரிவைச் சேர்ந்தவர்.

இவருடைய ஆரம்பக் கல்வி மதுரையில் நடந்தேறியது. அவ்வூரிலுள்ள 'மதுரைக் கலாசாலை' என்னும் நிலையத்தில் இவர் எப் ஏ. வரையில் படித்துப் பின்னர் 1887-இல் சென்னைக்குச் சென்றார் அங்கே கிறிஸ்தவ கலாசாலையில் சரித்திரப் பகுதியில் மாணவராகச் சேர்ந்து 1889-இல் பி. ஏ. பட்டப் பரீக்ஷையில் தேறினார். அப்புறம் மூன்று வருஷங்கள் சட்டப் படிப்பில் சென்றன.

மாணவராயிருக்கையில் இவரிடம் ஒருவித விசேஷ குணமும் காணப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. பிறருடன் சேர்ந்து கலகலப்பாக இருக்கமாட்டாராம்.

பள்ளிக்கூடத்திலுள்ள விளையாட்டுகளில் அதிகமாகக் கலந்துகொள்ளும சுபாவம் இவருக்கு இல்லை என்று தெரியவருகிறது. இதைத்தவிர இவர் இளமையைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியவில்லை.

கலாசாலையில் மேற்படிப்புப் பயிலுகையில் இவருக்கு அவ்வயதுக்குரிய மிடுக்குமட்டும் இருந்தது. அத்தகைய மாணவர்கள் ஆங்கில மொழியின் பழக்கம் ஏற்பட்டதன் பயனாக மேனாட்டு நாகரிகத்தில் மோகங்கொண்டு நம் நாட்டுப் பழக்க வழக்கங்களை வெறுப்பது சகஜம். இவ் விதிக்கு இவரும் உள்ளானார். இந்து மதத்திலுள்ள பல கோட்பாடுகளை இவர் கண்டனம் செய்தார். முக்கியமாக ஜாதி வித்தியாசத்தை அறவே ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டார். நாட்டின் எளிய நிலைமைக்கு இந்த வர்ணாசிரம தர்மமும் ஏனைய பழைய இந்துமத ஆசாரங்களுமே காரணம் என்றுகூட இவர் நினைப்ப துண்டாம்.

ஆங்கில மொழியில் பிரபல ஆங்கிலக் கவிகளான ஷேக்ஸ்பியர், பைரன், கீட்ஸ், ஷெல்லீ, வோர்ட்ஸ் வொர்த் முதலியோரின் கவிதைகளில் இவருக்கு அதிக ஈடுபாடு. அதே மாதிரி தமிழ் மொழியிலும், தாயுமான வர், கம்பர் இவ்விரு கவிகளின் வாக்கில் இவர் மெய்ம் மறந்துவிடுவார். கம்பருக்கு ஈடு இணை உலக மகாகவிகளி லேயே ஒருவரும் இல்லை என்று இவர் கருதினார்.

மேனாட்டு நாகரிகத்தில் இவருக்கு இருந்த பிரமை, அமெரிக்கா முதலிய இடங்களுக்குச் சென்று அந்தச் சமூகத்தின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருக்கும் ரகசியத்தைத் தெரிந்துகொண்டு பின்னர் இங்கே வந்து இந்த நாட்டையும் அதே முறையில் சீர்திருத்துவதற்குத் தக்க முயற்சிகள் செய்ய வேண்டுமென்று இவரை எண்ணச் செய்ததாம்.

இத்தறுவாயில் இவருக்கு முதல் முதலாகப் படிப் பில் ஒரு தோல்வி நேர்ந்தது பி. எல். பரீக்ஷையில் இவர் தேறவில்லை. இத்தோல்வி எதிர்பாராத விதத்தில் இவர் மனத்தை மாற்றிவிட்டது. இவருடைய நோக்கம் இதி லிருந்து மத விஷயத்தில் சென்றுவிட்டது. இப்பற்றுதல்

இவருடைய இறுதிக்காலம் வரையில் மாறாமல் இருந்தது. கைவல்ய நவநீதம், தத்துவராய ஸ்வாமிகள் பாடல் என்பவைகளிலும் ஏனைய அநுபூதி நூல்களிலும் இவர் மனம் லயித்தது. சதா அவைகளையே படிக்க ஆரம்பித்தார். இம் மனமாறுதலின் பயனாக இதற்கு முன் மாணவராயிருக்கையில் இந்துமத ஆசாரங்களிலும் வழக்கங்களிலும் கொள்கைகளிலும் இவர் கொண்டிருந்த வெறுப்பு முற்றும் பறந்து போயிற்று. மேனாட்டுச் சஞ்சாரத்திலுள்ள ஆசையும் மறைந்தது. அதுமுதல் தாம் நாளடைவில் ஒரு யோகியாவதற்குப் போதிய அஸ்திவாரத்தை நாட்டிக்கொண்டார்.

கட்டுரை எழுதுவதில் இவருக்கிருந்த திறமை முதல் முதலில் இவர் கிறிஸ்தவ கலாசாலையில் இருக்கையில் வெளிப்பட்டது. பிரபல கணித ஆசிரியரான காலஞ் சென்ற பூண்டி அரங்கநாத முதலியார் அவர்கள் கச்சிக் கலம்பகம் என்னும் ஒரு நூல இயற்றியிருந்தார். அதைப்பற்றி இவர் ஒரு விமர்சனம் எழுதி அதை அக் கலாசாலைப் பத்திரிகையில் வெளியிட்டார். அக்கட்டுரை மூலம் இவருடைய ஆற்றல் நன்கு வெளிப்பட்டது. அதுமுதல் கட்டுரை எழுதும் பணி இவருக்கு ஒரு பொழுதுபோக்காக அமைந்துவிட்டது 1802-ஆம் வருஷத்தில் விவேகசிந்தாமணி என்னும் மாதப் பத்திரிகையில் இவர் தம்முடைய அருமையான நவீனமாகிய, "ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்" என்னும் கற்பனைக் கதையைத் தொடர்ச்சியாக எழுத ஆரம்பித்தார். இவருக்கிருந்த அபரிமிதமான கற்பனா சக்தி இந்த நவீனத்தின்மூலம் நன்கு புலப்பட்டது. இதே பத்திரிகையில் பின்பு இவர் "சீதை" என்ற தலைப்பிட்ட வேறொரு தொடர்கதையையும் எழுதினார்.

கமலாம்பாள் சரித்திரத்தின்மூலம் இவரிடம் அச் சமயம் தோன்றிவந்த மற்றொரு மனப்பான்மையும் பிறருக்கு விளங்கிற்று. அதுதான் யோகசித்தியில் இவருக்கிருந்த ஈடுபாடு. இப் புத்தகத்தில் வரும் "விசுவரூப தரிசனம்" என்னும் 25-ஆம் அத்தியாயப் பிற்பகுதியிலும், "கருதும் அன்பர் மிடிதீரப் பருகவந்த

செழுந்தேனுகி" என்னும் 30-ஆம் அத்தியாயத்திலும் இவர் வைத்து அமைத்திருக்கும் அநுபூதி விஷயங்களி லிருந்து இது நன்ருக விளங்குகிறது இப் புத்தகத்தைப் பற்றி இவரே விடுத்திருந்த அபிப்பிராயத்தையும் இதற்குப் பெருஞ்சான்ருகச் சொல்லலாம். இவருடைய அபிப்பிராயம் வருமாறு:

> "இக் கதை, உண்மையை உணர உள்ளபடி விடாது பாடுபட்டுத் தத்தளித்துக்கொண் டிருந்து, முடிவில் மோக்ஷதாகம் தீரப் பருகும் படியான தடாகத்தைக் கண்டு நீர் பருகிக் களைப்புத் தீர்ந்த ஓர் சுத்த ஆத்மாவின் அநுபூதி பேதங்களை அடக்கியுள்ளது."

இந்தப் புத்தகத்தை இரு பாகங்களாகப் பிரித்து, அவை களுக்கு முறையே, "வியஷ்டிபாவ யோகம்" அல்லது "ப்ரபஞ்ச நாடகம்," "ஸமஷ்டி பாவ யோகம்" அல்லது "ப்ரபுத்த லக்ஷணம்" என்ற பெயர்களைக் கொடுத் திருப்பதிலிருந்தும் இது நன்கு தெரியவருகிறது.

இவர் மனம் மாறி யோகாப்பியாசத்தில் முற்றும் ஈடுபட்டதும் முதல் முதல் இவருக்கு அநுபூதி நிலை கிடைத்ததும் ஒரு ரஸமான கதை. இவர் சென்னையில் திருவல்லிக்கேணியில் இருந்துவந்த வீட்டுக்குச் சமீபத் தில் ஓர் சந்நியாஸினி மத விஷயங்களைப்பற்றி அருமை யான உபந்நியாசங்கள் செய்து வந்தார். இவர் அங்கே சென்று அடக்கத்துடன் அவ்வுபதேச மொழிகளைக் கேட்டு வந்தார். இவருடைய சாந்தங்கலந்த தோற்றத் தையும் அடக்க ஒடுக்கத்தையும் கண்டு மனமுவந்த அந்த அம்மாள் இவருடன் அளவளாவ விரும்பினுள். ஒரு நாள் நடந்த பிரசங்கத்தில் உருகி மெய்ம்மறந்து பிரசங்கம் முடிந்து மற்றெல்லோரும் போன பின்பும் அங் கேயே வீற்றிருந்து ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்த இவரை அந்த அம்மாள் அருகில் அழைக்கவே இவரும் சென்ருர். அந்த அம்மாளிடம் இவர் தம்முடைய வரலாற்றை எடுத்துரைத்து, தமக்குத் தவப்பெரியார் களுக்குக் கிட்டிய அநுபூதி எவ்வாறு சித்திக்கும் என்று வினவினுர். அந்த அம்மாள் இவ்வளவு இளம் வயதி

லேயே மோக்ஷ சாம்ராஜ்யத்தில் இச்சைகொண்ட இவருடைய மன நிலையைக் கண்டு மெச்சி, இவருக்குத் தக்க போதனைகளைக் கூறி; இவருடைய தலையின்மேல் தம்முடைய கரத்தை வைத்தாள். இவருக்கு உடனே ஒரு புதிய உணர்ச்சி தோன்றிற்று. தம்மையும் வெளி யுலகையும் பற்றியுள்ள அறிவை க்ஷணநேரம் இழந்தார். அளவில்லாத ஓர் ஆனந்தத்தை அடைந்தார். இம்மாதிரி இவருக்கு உபதேசித்து இவர் கோரியபடியே நிஷ்டை யினால் உண்டாகும் ஆனந்தத்தை இவருக்கு அளித்த அவ் வம்மாள் கொஞ்ச நாட்களில் போன இடம் தெரியாமல் மறைந்துவிட்டார்கள். இவர் எழுதிய, "கமலாம்பாள் சரித்திர"த்தில், "விசுவரூப தரிசனம்" என்னும் கட்டத் தில் இச்சம்பவத்தைத்தான் இவர் சித்திரிக்கிறார் என்று எண்ண இடமிருக்கிறது.

மேற்கூறிய சம்பவம் நடந்தது முதல் இவருக்கு மத விஷயத்திலிருந்த பற்றுதல் அதிகரித்து, அதன் விளைவாக உலக விஷயங்களில் அலக்ஷ்யம் தோன்றிவிட்டது. இவர் செய்த காரியங்களும் பிறருக்கு விளங்கவில்லை. ஆகையால் இவருக்கு மூளை கலங்கிப் பைத்தியம் பிடித்து விட்டது என்று அவர்கள் எண்ணலாயினர்.

இந்தச் சமயத்தில் சென்னையில் ஸ்வாமி விவேகானந் தரின் முயற்சியால் தொடங்கப்பட்டு வந்த, "பிரம்ம வாதினி" என்னும் ஓர் ஆங்கில மதப்பத்திரிகைக்கு இவரை விஷயதானம் செய்யச் சொன்னார்கள். பத்தி ரிகை ஆசிரியரின் தொந்தரவின் பேரில் இவர், "மனிதன்; அவன் தாழ்வும் ஏற்றமும்" என்னும் விஷயத் தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதிக் கொடுத்தார். இது முதலில் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. சில மாதங்களுக் குப்பின் அப்பத்திரிகைக்குப் போதுமான கட்டுரைகள் கிடைக்காமல் பஞ்சம் ஏற்படவே, மீண்டும் இதை வாசித்துப் பார்த்து வெளியிட்டனர். இது வெளிவந்த வுடன் பலர் இதை மெச்சினர். கேவலம் படிப்பினால் மட்டும் அடையக் கூடாததும், ஸ்வானுபூதியால் மட்டுமே உணரப்படுவதாயுமுள்ள பல அரிய விஷயங்கள் இதில் அடங்கியிருந்ததைக் கண்டு எல்லோரும் அதிசயித்தனர்.

இவ்வாறு இதைப் படித்து மகிழ்ந்தவருள் சாந்தானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் தவப் பெரியாரும் ஒருவர். அவர் அப்போது மயிலாப்பூரில் இந்துமத விஷயமாகப் பல அரிய உபந்நியாசங்களைச் செய்துவந்தார். இக்கட்டுரையைக் கண்டு ஆனந்தித்தவுடன் இதை எழுதிய ஆசிரியரையும் காண அம்மகான் விரும்பினார். ராஜமையரும் அவரை அடைந்து ஞானோபதேசம் பெறுவதற்கு முயன்றுகொண் டிருந்தார். ஆனால் ஸ்வாமிகளைச் சுற்றிலுமிருந்த சிஷ்ய கோடிகள் ஸ்வாமிகளுக்குக் குறிப்பிட்ட காணிக்கையைச் செலுத்தச் சக்தியுள்ளவர்களையே அவரை அண்ட விட்டனர். ஆகையால் என்ன முயன்றும் அவர்கள் விதித்திருந்த காணிக்கையைச் செலுத்த அசக்தராயிருந்தபடியால் அவருடைய தரிசனம் இவருக்குக் கிட்டாமலேயே இருந்தது. இக்கட்டுரையைப் படித்தவுடன் ஸ்வாமிகளே இவரைக் கண்டு சல்லாபஞ் செய்யப் பிரியப்பட்டதனால் இவருக்கு அவருடைய பரிசயம் ஏற்பட்டது. பின்னர் அவரே இவருக்கு உபதேச குருவும் ஆனார். இந்தச் சுவாமிகளை அடைவதற்கு முன் பக்தி மார்க்கத்தில் தீவிர நம்பிக்கையுடன் இருந்தவரும் பக்தியின் மேலீட்டால் ஆனந்த பாஷ்பம் முதலிய வெளித்தோற்றங்களுடன் கூடியவராக இருந்தவருமான ராஜமையர் அந்தக் குருவை அடைந்து அவர் செய்த உபதேசங்களைக் கேட்டுச் சிந்தித்ததன் பயனாக இவையெல்லாம் முற்றும் மாறி ஒரு சிறந்த ஞான யோகியானார்.

ஸ்வாமி விவேகானந்தர் அமெரிக்காவில் நம் மதத்தைப்பற்றிப் பிரசாரம் செய்து புகழுடன் சென்னைக்குத் திரும்பியதும் அவருடைய ஆசீர்வாதத்துடன், "பிரபுத்த பாரதா" அல்லது "விழித்துக்கொண்ட இந்தியா" என்னும் மதவிஷயமான ஆங்கிலப் பத்திரிகை சென்னையில் தொடங்கப்பட்டது. அதற்கு ராஜமையர் ஆசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பத்திரிகையை வெகு விமரிசையாக நடத்தியதுடன் அதில் தாமே நேரில், தம் சொந்தப் பெயரிலும், மறைமுகமாக, 'டி. ஸி. நடராஜன்', 'தியாகி' என்னும் புனைபெயர்களிலும் பல கட்டுரைகள் எழுதினார். அப்பத்திரிகை தொடங்கிய

மூன்றும் வருஷத்தில் இவர் அகால மரணமடைந்ததால் இவரைப்போல் திறமையுடன் அதை நடத்த வல்லார் எவருமின்றி அதை நிறுத்தும்படி நேர்ந்ததிலிருந்தே இவருடைய ஆற்றல் நன்கு புலப்படுகிறது.

"பிரபுத்த பாரதா'' என்னும் பத்திரிகையில் இவர் எழுதிய மதவிஷயமான கட்டுரைகளைத் திரட்டி, "வேதாந்த ஸஞ்சாரம்'' என்ற தலைப்புடன் கூடிய ஒரு புத்தகமாகப் பிரசுரித்திருக்கிறார்கள். இது படிக்கப் படிக்கத் தெவிட்டாத தேனாக இருக்கிறது.

சிறுவயதிலேயே மதப்பற்றுத் தோன்றிவிட்டபடியால் இவருடைய இல்வாழ்க்கையும் சற்று விநோதமாகவே அமைந்திருந்தது. இவருக்கு மணமானவுடன் இவருடைய இல்வாழ்க்கை இவருடைய யோக நிஷ்டைகளுக்கு இடையூறாக இருந்தது. என்றாலும் வெற்றியுடன் சமாளித்துக்கொண்டு தம் பத்தினியையும் தக்கபடி திருப்தி செய்து வந்தார். நடுவில் 1896-ஆம் வருஷத்தில் இவருக்கு வந்த ஒரு கொடிய குடல்நோயினால் இந்தப் பந்தத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள இவருக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. வியாதி சொஸ்தமானவுடன் இவர் தம் மனைவியிடம் நடந்துகொள்ளும் விதத்தைச் சற்று மாற்றிக்கொண்டார். கணவன் தன்னிடம் வைத்துக்கொண்ட புதிய உறவில் தோன்றிய மாறுதலை அந்த அம்மாள் - நல்ல வேளையாக - அந்த நோயினால் விளைந்ததென்றே நம்பினாள். ஆனால் உண்மை எப்படியோ அந்த அம்மாளுக்கும் ராஜமையரின் தந்தையாருக்கும் நாளடைவில் தெரிந்துவிடவே, இளம் வயதிலேயே, பிஞ்சில் பழுத்து உதிர்ந்துவிடும் பழம்போல், இவருக்கு உலகத்தின்மேல் அலக்ஷ்யபுத்தி ஏற்பட்டு அதனால் அநியாயமாக இவர் கெட்டுவிட்டாரே என்று அவர்கள் வருந்தினர். அவர்கள் இவ்வாறு துன்புற்றது இவர் மோக்ஷ சாம்ராஜ்யத்துக்கு ஒரு பெருத்த இடைஞ்சலாக முடிந்தது.

1897-ஆம் வருஷம் நவம்பர் மாதத்தில் மீண்டும் இவர் பழையபடியே குடல் நோயால் பீடிக்கப்பட்டார். அம்முறையும் தெய்வ சங்கல்பத்தாலும் தக்க சிகிச்சை

யாலும் உயிர் தப்பினர். ஆனல் மூன்ருும் முறையாக அவ்வியாதி இவரைப் பீடிக்கையில் இவரால் சமாளிக்க முடியவில்லை. இவரை ஆதரித்தோரும் இவரிடம் விசேஷ பிரியமும் மதிப்பும் வைத்திருந்தோருமான பல மயிலாப்பூர்ப் பிரமுகர்கள் உயர்ந்த சிகிச்சைகளை ஏற்பாடு செய்தனர். ஆனல் அவை ஒன்றும் பயன்படாமல் 1898-ஆம் வருஷம் மேமீ 13-ஆம் தேதி இளம் வயதாகிய தம்முடைய 26-ஆம் பிராயத்தில் இவருடைய ஆத்மா சொர்க்காரோகணம் செய்தது.

தமிழில் எழுதப்பட்டுள்ள, "கமலாம்பாள் சரித்திரமும்" ஆங்கிலத்திலுள்ள, "வேதாந்த சஞ்சார"மும் ராஜமையர் உலகுக்கு அளித்திருக்கும் இலக்கியச் செல்வங்கள். கமலாம்பாள் சரித்திரம் சமூக வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒப்புயர்வற்ற ஒரு நவீனம். அதில் தென்னிந்தியக் குடும்பவாழ்க்கையை ஆசிரியர் நன்ருகப் படம் பிடித்துக் கொடுக்கிருர். ஸ்திரீகள் குளக்கரை முதலிய நீர் நிலைகளுக்கு அருகில் கூடிப் பேசும் வம்பும், மாமியார் நாட்டுப் பெண் இவர்களுக்குள்ள சம்பந்தமும், சச்சரவும், ஓரகத்திகளுக்குள் ஏற்படும் மனத்தாங்கல்களும் சண்டைகளும், கிராம வாழ்க்கையில் உள்ள மற்ற முக்கியமான அம்சங்களும், கிராமங்களில் நடக்கும் பலீன்சடுகுடு போன்ற விளையாட்டுக்களும், 'ஜல்லிக் கட்டுப் போன்ற கொண்டாட்டங்களும், ஏனைய விழாக்களும் ஒன்றன்பின் ஒன்ருகத் திரையில் தோன்றி மறைகின்றன. சிறுபிள்ளைகளின் மனேபாவத்தை இந்தக் கதையில் சித்திரித்திருப்பது ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. தமிழில் நகைச்சுவை உண்டா என்று கேட்போருக்குக் கமலாம்பாள் நல்ல ஆணித்தரமான விடை அளிக்கிறது; உண்டு என்று அழுத்தந்திருத்தமாக. "கடல் சூழ்ந்த இங்கிலவலயத்துக்கு ஒரு திலகம் போன்ற ஆடுசாபட்டியில் அவதரித்த அண்டர் புகழும் அஷ்டாவதானம் அருந்தமிழ்ப் புலவர், வித்வான் அம்மையப்பப்பிள்ளை" அவர்களைப்பற்றிய வரலாறுகளையும், சுப்பம்மாளின் பிரசங்கங்களில் சரமாரியாகத் தோன்றும் 'ரயயோரபேத' மென்னும் சூத்திரப் பிரயோகத்தையும், பொன்னம்மாளின் பேச்சிலுள்ள அதியிலக்

கணத்தையும் படித்தபின் யார்தாம் தமிழில் நகைச் சுவை இல்லை என்று சொல்லத் துணிவார்கள்?

இந்த நவீனத்தின் மூலம் ராஜமையர் தமிழ் மொழிக்கு வேறொரு சிறந்த தொண்டும் செய்திருக் கிறார். அதை நாம் கம்பராமாயணப் பிரசாரம் என்று சொல்லிவிடலாம். கம்பராமாயணத்திலிருந்து மேற் கோள்கள், அதில் வரும் சில பிரசித்தமான சொற்றொ டர்கள் இவைகளைச் சரியான சந்தர்ப்பத்தில் பிரயோ கித்தல், அவைபோன்ற தொடர்களைத் தாமே சிருஷ்டித் தல் முதலிய வழிகளில் படிப்போர் மனத்தில் கம்பர் காவி யத்தில் ஒரு பற்றுதல் ஏற்படுத்திவிடுகிறார்.

இந்தக் கதையின்மூலம் இவர் வெளியிட்டிருக்கும் மத உண்மைகள் ஏற்கனவே குறிக்கப்பட்டிருக்கின்றன. இவருடைய 'வேதாந்த ஸஞ்சா'ரத்தில் இத்தகைய உண்மைகளை எளிய நடையில் விஸ்தாரமாக மனத்தைக் கவரும் ரஸமான கதைகள்மூலம் விளக்கியிருக்கிறார்.

இருபத்தேழு வயதுக்குள் இவ்வளவு காரியங்களைச் சாதித்த இவருடைய திறமை அமானுஷ்யமானது என்ப தில் என்ன சந்தேகம்?

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 101580

# ௬

# ஆராய்ச்சி மனப்பண்பு வாய்ந்த ஆதீனகர்த்தர்

சுமார் பதினைந்து வருஷங்களுக்குமுன் நடந்த சம்பவம். என் மனக்கண்முன் இப்போது நடப்பதுபோல் தோன்றுகிறது. 1935-ஆம் வருஷத்தில் நம் நாட்டிலிருந்து வந்து வட இந்தியாவில் பிரயாணம் செய்து கொண்டிருந்த கும்பகோணத்துக் காஞ்சி காமகோடி மடம் கல்கத்தாவின் தென்பகுதியில் உள்ள காளிகட்டம் என்னும்பேட்டையில் உள்ள மைசூர் மகாராஜா சத்திரத்தில் முகாம் போட்டுக்கொண்டிருந்தது. வழக்கம்போல் மடத்தின் மூர்த்தியான சந்திரமௌளீசுவர சுவாமிக்கும் பூஜையிலுள்ள ஸ்ரீசக்கரத்துக்கும் அந்திவேளைப் பூஜை நடந்துகொண்டிருந்த சமயம். மடத்தின் மரபின்படி பீடாதிபரே பூஜையை நடத்திக்கொண்டிருந்தார். அன்று மாலை மடத்தில் அதிகக் கூட்டம் இல்லை. அங்கிருந்த ஐந்தாறு பேர்களுள் நானும் ஒருவன். பூஜை நடந்துகொண்டிருக்கையிலேயே ஒருவர் தம்பூரு சுருதியுடன் அம்பாளுக்கு அர்ப்பணமாகத் தம் மதுரகானத்தை இசைத்துக்கொண்டிருந்தார். பூஜை முடிந்து பிரசாதம் கொடுக்கப்பட்ட பின்பு, பீடாதிபர் மாடியில் ஓர் அறைக்குச் சென்று அங்கே வந்து தம்மைக் காணும்படி எங்களுக்குச் செய்தி அனுப்பினார். நாங்கள் அவ்வறைக்குச் சென்றோம். சுவாமிகளின் சமூகத்தை அடைந்ததும் சம்பிரதாயத்தை ஒட்டி ஒவ்வொருவராக அவர் போதும் என்று சொல்லும் வரையில், "ஓம் நமோ நாராயணாய" என்ற மூல மந்திரத்தை உச்சரித்தவண்ணம் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தோம். பூஜையின்போது பாடியவரும் அங்ஙனமே செய்தார். அவர் ஒரு வைஷ்ணவப் பிராம்மணர்.

ஸர்க்கார் ஸேவையில் ஒரு பொறுப்புள்ள 'ஆபீஸர்' பதவி வகித்து வந்தவர். பொழுது போக்காகவும் ஆத்மார்த்தமாகவும் சங்கீதத்தைப் பயின்றவர். சென்னை சங்கீத வித்வத் சபையிலும் ஒரு சமயம் நிர்வாகப்பதவி யொன்றை வகித்திருந்தார். நமஸ்காரம் செய்து வணங்கியது முடிந்தவுடன் சுவாமிகளின் ஆக்ஞையின்பேரில் எல்லோரும் அவர் எதிரில் ஒரு வரிசையாக அமர்ந்தோம். பாடிய நண்பருக்கும் சுவாமிகளுக்கும் இடையே அடியில் கண்ட சம்பாஷணை நடந்தது.

சுவாமிகள்: சங்கீதம் நன்றாகப் பழகியிருக்கிறீர்கள். நடுவில், 'ஜானகி ரமண' என்று ஒரு கிருதி பாடினீர்களே அது இதுதானே? (இதைச் சொல்லி சுவாமிகள் இந்தச் சாகித்யத்தை முதலடியாகக்கொண்டு சுத்த ஸீமந்தினி ராகத்தில் தியாகையர்வாள் அருளியிருக்கும் உருப்படியை லேசாகப் பாடிக் காட்டினார்.)

பாடியவர்: இல்லை. அது ஐயர்வாள் கிருதி. நான் பாடியது எங்கள் ஊர் அம்மனாகிய ஸ்ரீவரமங்கைத் தாயார் பேரில் எங்கள் மூதாதையர் ஒருவர் பாடியது. அது 'சுத்த ஸீமந்தினி' ராகம், இது தோடி.

சுவாமி: உங்களூர் நாங்குநேரியா? அங்கே அகோபில மடக் கிளை ஏதாவது உண்டோ?

சுவாமிகளின் இந்தக் கேள்வி எங்களுக்கெல்லாம் ஆச்சரியத்தை அளித்தது. அவர்கள் இருவரும் பேசிய சங்கீத விஷயத்துக்கும் இதற்கும் உள்ள சம்பந்தம் என்ன என்பது பாடியவர் உட்பட எங்கள் ஒருவருக்கும் விளங்கவில்லை.

பாடி: ஆமாம், ஒன்று இருக்கிறது. இக் கிருதியைப் பாடிய பெரியார் அம்மடத்துடன் தொடர்பு வாய்ந்திருந்தவர் தாம்.

சுவாமி: (ஒரு புன்முறுவலுடன் எங்கள் எல்லோரையும் பார்த்து) அப்படி இருக்குமோ என்றுதான் நானும் சந்தேகித்தேன். ஏனென்றால் நாங்குநேரி என்பது தென்கலை வைஷ்ணவர்கள் உள்ள ஊர். அவர்களுக்குள் பிரசித்தி பெற்ற வானமாமலை மடம் என்பது அங்கேதான்

இருக்கிறது. இவர் என்னை நமஸ்காரம் செய்கையில் ஒன்றுக்கு மேற்பட்டதாகச் செய்தார். வைஷ்ணவர்களுக்குள் தென்கலையாருக்கும் வடகலையாருக்கும் உள்ள அபிப்பிராய பேதங்களுக்குள் இந்த நமஸ்கார விஷயமும் ஒன்று. தென்கலையார் ஒரே நமஸ்காரந்தான் செய்வார்கள். அதற்குமேல் செய்யக்கூடாது என்பது அவர்கள் கொள்கை. வடகலையாரோ ஒன்றுடன் நிற்கக் கூடாதென்று நம்புகிறவர்கள். இவர் நாங்குநேரி வாசியாகையால் ஒருவேளை தென்கலைப் பிரிவினராயிருப்பின் ஊரை விட்டு வெளியே வந்ததன் பயனாகச் சம்பிரதாயத்தை மறந்து ஒன்றுக்கு மேற்பட்ட நமஸ்காரம் செய்கிறாரோ என்று சந்தேகித்தேன். இந்த நமஸ்காரப் பிரச்னைக்கு இரு பிரிவினரும் ஒன்றையே ஆதாரமாகக் காட்டுகிறார்கள். ராமாயணத்தில் ஸ்ரீ விபீஷணாழ்வான் ஸ்ரீ ராமரைச் சரணாகதி அடையும்போது, ஒரே நமஸ்காரம் செய்து விழுந்தவன் மீண்டும் எழுந்திருக்கவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவரே ஒற்றை நமஸ்காரம் செய்ததால் நாமும் அப்படியே அதற்கு மேற்பட்டு நமஸ்கரிக்கக் கூடாதென்று தென்கலையார் கருதுகின்றனர். ஒரு நமஸ்காரத்துக்கே அவருக்கு மோக்ஷ சாம்ராஜ்யம் கிட்டியதால் அற்ப அறிவுள்ள நாம் அத்துடன் நின்றுவிடக் கூடாதென்பது வடகலையாரின் கட்சி.

மேற்கூறிய சம்பவத்திலிருந்து நாங்கள் சுவாமிகளின் பரந்த அறிவையும், கூர்ந்து உற்று நோக்கும் தன்மையையும் கண்டு வியந்தோம்.

அந்தச் சமயம் சுவாமிகளுடன் சில மாதம் நெருங்கிப் பழகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தபடியால் இத்தகைய சம்பவங்கள் பலவற்றை நான் காண நேர்ந்தது. ஒவ்வொன்றிலிருந்தும் இவருடைய கூர்ந்த அறிவு நன்கு வெளிப்பட்டது. இவர் இப்பீடத்துக்கு அதிபதியாகாமல் இருந்தால் நம் நாட்டின் தலை சிறந்த ஆராய்ச்சியாளர் ஒருவராக ஆகியிருப்பார் என்பது நிச்சயம் என்பது இச் சம்பவங்களால் நன்கு வெளியாயிற்று.

காமகோடி பீடத்தில் இவர் 66-ஆவது பீடாதிபதியாக விளங்குபவர். பட்டத்தில் இவருடைய முழுப் பெயர், 'ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்'' என்பது. இதில், "பரமஹம்ஸ பரிவ்ராஜகர்'' என்பது பிரம்மசர்யத்திலிருந்து கிருகஸ்தாசிரமம் வகிக்காமல் நேரே சந்நியாச ஆசிரமம் அடைந்ததைக் குறிக்கிறது. 'இந்திர ஸரஸ்வதி' என்பது இந்தப் பீடத்தின் ஆசாரியர்களுக்கு ஏற்பட்ட சந்நியாச ஆசிரமப் பட்டம். ஏனைய சங்கரமடத்துப் பட்டப் பெயர்களாகிய 'ஆச்ரமி' (துவாரகா மடம்),'பாரதி' (சிருங்கேரி மடம்), பூர்ணகிரி' (பதரிகாசிரம மடம்), 'ஆரண்ய' (பூரி அல்லது ஜகந்நாத மடம்) என்பவைகளை ஒத்தது.

பூர்வாசிரமத்தில் அதாவது பட்டத்துக்கு வந்து சந்நியாசம் வாங்கிக்கொள்ளுவதற்கு முன் - இவருக்கு விசுவநாதன் என்று பெயர். (இவ்வாறு இவர் பெயரை ஒருமையில் குறிக்க என் உடல் நடுங்குகிறது.) இவருடைய சொந்த ஊர் கும்பகோணம், என்றாலும் பாலியத்தில் பெரும்பாலும் இவர் தென்னார்க்காட்டு ஜில்லாவில் திண்டிவனம், விழுப்புரம், சிதம்பரம் முதலிய ஊர்களில் இருந்து கல்வி கற்று வந்தார். 1908-ஆம் வருஷத்தில் தம் 13-ஆம் வயதில் இவர் இப் பட்டத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் இப் பட்டத்துக்கு வந்தது காஞ்சீபுரத்துக்கு 24 மைல்களுக் கப்பால் உள்ள ஒரு சிறு கிராமத்தில்.

இவர் கன்னட பிராம்மணப் பிரிவைச் சேர்ந்தவர். தென்னாட்டில் அத்வைத மதத்துக்கு ஒரு தூண்போல் இருந்தவரும் பிரபல அறிஞருமான கோவிந்த தீக்ஷிதர் என்னும் பெரியாரின் வம்சத்தில் தோன்றியவர் இவர். தஞ்சாவூரை நாயக்கர்கள் என்று ஒரு வம்சத்தார் சிறிது காலம் ஆண்டு வந்தனர். மதுரையை ஆண்ட நாயக்கர் களும் இவர்களும் வெவ்வேறு வம்சத்தினர் என்பதைக் குறிக்க இவர்களைத் தஞ்சாவூர் நாயக்க அரசர்கள் என்று சொல்லுவது உண்டு. இந்த வம்சத்தைத் தோற்று வித்த முதல் அரசர் செவ்வைய நாயக்கர் என்பவர்.

இவர் பேர்போன விஜயநகர மன்னரான கிருஷ்ண தேவராயர் என்னும் அரசனின் பெண்ணை மணந்தார். அவ்வரசர் அப்பெண்ணுடன் இந்தக் கோவிந்த தீக்ஷிதர் என்னும் அறிவாளியை ஸ்திரீதனமாக அனுப்பிவைத்தார். தஞ்சாவூரை அடைந்ததும் அம்மன்னனுக்கு இவர் அமைச்சராக அமைந்தார். இவருக்கு அதிகச் செல்வாக்கு இருந்தது. அந்தக் காலத்தில் முத்திரையிடப்பட்ட நாணயங்களில் அரசனின் பிம்பமும் இவருடைய பிம்பமும் ஒன்று சேர்ந்து காணப்படுகின்றன. இவரிடம் அரசன் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தான் என்பதற்கு இதுவே ஒரு பெரிய அடையாளம். நாட்டில் இவரை எல்லோரும் 'ஐயன்' என்றே அழைத்தனர். திருவண்ணமலையிலுள்ள 'ஐயன் குளம்', 'ஐயன் குளத் தெருவு' என்பன இவர் பெயரை ஒட்டியவையே. அக்குளம் இவர் வெட்டியதாகச் சொல்லப்படுகிறது. கும்பகோணத்துக்கு அருகிலுள்ள பட்டீசுரம் என்னும் ஊரில் இருக்கும் சிவன் கோயிலில் இவருடைய உருவச்சிலை ஒன்று கல்லில் வெட்டப்பட்டிருக்கிறது. இவ்வளவு புகழுடன் வாழ்ந்தவரின் சந்ததியில் தோன்றியவர்தாம் தற்போதைய காமகோடி பீடாதிபர்.

கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் என்று கருதப்படும் மூன்று சாகித்யகர்த்தர்களில் ஒருவரான முத்துஸ்வாமி தீக்ஷிதரும் இந்தக் கோவிந்த தீக்ஷிதரின் வழி வந்தவரே. அவர் தமையனார்தாம் ஹம்சத்வனி என்னும் ராகத்தை உண்டுபண்ணி அதில் வழங்கிவரும் பிரசித்தி பெற்ற வாதாபி கணபதிம் என்னும் கிருதியை இயற்றிய ராமசுவாமி தீக்ஷிதர் என்பவர். கர்நாடக சங்கீதத்தைச் சீர்திருத்தி அமைத்து, இப்போது தென்னிந்திய சங்கீத வித்துவான்கள் கையாளும் 72 மேளகர்த்தாக்கள் கொண்ட பிரகரணத்தை உண்டாக்கி ஒழுங்குபடுத்திய வேங்கடமகி என்னும் வேங்கடேச தீக்ஷிதரும் இப்பெரியார் வழி வந்தவரே. எனவே நம் ஆசார்ய சுவாமிகளுக்கும் இசையில் தேர்ச்சி இருப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை

வெகு இளம் வயதில் பட்டத்துக்கு வந்த இவர் ஸ்தானத்தில் ஏறியதும் ஏறுததுமாக மிகவும் சிரம

சாத்தியமான காரியம் ஒன்றை நிறைவேற்றிவைக்கும்படி நேர்ந்தது. திரிச்சிராப்பள்ளிக்கு அடுத்த ஜம்பு கேசுவரம் என்னும் ஊரிலுள்ள கோயிலில் இருக்கும் அகிலாண்டேசுவரி அம்மன் சிலையின் தாடங்க ஜீர்ணோத் தாரணம் செய்தல் என்னும் சடங்குதான் இது. இக்காரி யத்தை வெகு சாமார்த்தியத்துடன் முடித்துக்கொண்டு சுவாமிகள் ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள தம் பரமேஷ்டி குருவின் சமாதியைத் தரிசிக்கப் போனார். வழியில் புதுக்கோட்டை சம்ஸ்தானத்தாரால் மரியாதை களுடன் வரவேற்கப்பட்டார்.

மூன்று வருஷங்களுக்கு அப்புறம் 1912-ஆம் வருஷத் தில் லால்குடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆதிசங் கரரின் கோயிலைப் பிரதிஷ்டை செய்த பின்பு அகண்ட காவேரியின் கரையிலுள்ள சந்நியாசி மடம் என்னும் இடத்தில் வேத சாஸ்திரங்களைப் பயிலுவதற்காகத் தங்கி னார். மூன்று வருஷங்களுக்குப் பின் 1915-இல் மடத்தின் தற்கால இருப்பிடமாகிய கும்பகோணத்துக்கு வந்து பீடத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். ஸநாதன தர்மத்தைப் பிரசாரம் செய்வதை முக்கியக் கொள்கையா கக் கொண்ட 'ஆர்ய தர்மம்' என்னும் தமிழ்ப்பத்திரிகை அப்போதுதான் ஜனித்தது. 1919-ஆம் வருஷத்தில் இவர் கிளம்பிய வடதேச யாத்திரை முற்றுப்பெற ஏறக் குறைய 20 வருஷங்கள் ஆயின. இப்பிரயாணத்தில் தான் வட இந்தியாவிலுள்ள காசி, பிரயாகை, கயா, ஜகந்நாதம் முதலிய முக்கியமான ஸ்தலங்களை இவர் தரிசித்தார்.

நம் தேசத்திலுள்ள தலைவர்கள் பலரின் நன்மதிப்பை இவர் பெற்றிருக்கிறார். அவ்வப்போது மகாத்மா காந்தி யடிகள், காலஞ்சென்ற சித்தரஞ்சனதாஸ், ஸர் தேஜ் பகதூர் ஸப்ரூ, சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார், பண்டித மதன்மோகன மாளவியா, ஸேட் ஜம்னுலால் பஜாஜ், ஸர் புருஷோத்தமதாஸ் டாகுர்தாஸ், நிஜாம் சம்ஸ்தானத்தின் மாஜி பிரதம மந்திரி ஸர் கிருஷ்ண பிரஸாத்ஸிங் முதலியோர்கள் இவரை வந்து தரிசித்து இவருடன் அளவளாவி இருக்கின்றனர்.

சென்னை நகரபரிபாலன சபையில் சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்கவேண்டுமா வேண்டாமா என்பதை விவாதித்தபோது ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகரான ஏ. ராமசுவாமி முதலியார் என்பவர் (பின்னால் ஸர் பட்டம் பெற்று மத்திய அரசாங்க நிர்வாக சபையில் அங்கத்தினராக இருந்தவர்) வரவேற்பை அங்கீகரித்துப் பேசியது சுவாமிகள் வகுப்புவாதத்துக்குப் புறம்பானவர் என்பதைத் தெள்ளென விளக்குகிறது.

சென்னையில் 1933-ஆம் வருஷத்திலும் அதற்குப் பின்பும் சுவாமிகள் தங்கியிருக்கையில் நகரிலுள்ள உயர்நீதி மன்றத்து நீதிபதிகள், கலாசாலையிலுள்ள ஆசிரியர்கள், மாகாணத்தின் தலைமை நியாயவாதி (அதாவது அட்வகேட் ஜெனரல்) முதலியோர் உட்படப் பல பிரமுகர்கள் இவரை வந்து தரிசித்து இவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றவண்ணம் இருந்தனர். அப்போது அங்கங்கே இவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் மூன்று புத்தகங்களாகத் தமிழில் வெளிவந்திருக்கின்றன. அவைகளுள் இரண்டின் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்திலும் புத்தக உருவில் வெளியாகியிருக்கிறது.

சுவாமிகளுடன் நெருங்கிப் பழகியவர்களுள் இவருடைய ஞாபகசக்தியைக் குறித்து வியப்படையாதவர் ஒருவரும் இலர். தம் சிஷ்ய கோடிகளின் பெயர், ஊர், குலம், கோத்திரம், மூதாதையர்கள் முதலிய சகலவிதமான விஷயங்களும் இவருக்கு மனப்பாடம். எங்கள் ஜில்லாவிலும் என்னுடைய உறவினர் பலருடனும் பூர்வாசிரமத்தில் நெருங்கிப் பழகிய இவரை நான் முதல் முதலில் கல்கத்தாவில் சந்தித்து ஒரு நண்பரால் அறிமுகப்படுத்தப்பட்டபோது இவர் அந்நண்பரை நோக்கி, "நீ யாரை அறிமுகப்படுத்துகிறாய்? இவனை எனக்கு நன்றாகத் தெரியும்" என்று சொல்லி என் உறவினரைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்ல ஆரம்பித்ததும் அந்த நண்பருக்கு ஆச்சரியமாகிவிட்டது. ஞாபக சக்தியில் காலஞ்சென்ற தமிழ் ஆசிரியரான உ. வே. சுவாமிநாதையருக்கு ஈடு இணை இல்லை என்று பலர் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். ஆனால் இவரைக் கண்டு பழகிய பின்பு

அவர் ஞாபகசக்திக்கும் இவருடைய ஞாபகசக்திக்கும் ஏற்றத்தாழ்வு சொல்லுவது கிரமம் என்பதை அறிந்தேன்.

ஞாபக சக்தியை அடிப்படையாகக் கொண்ட விஷயங்களை அலசி ஆராய்ச்சி செய்யும் குணம் என்பது இவரிடம் அபரிமிதமாக உண்டு. எனவே ஏற்கனவே குறித்தபடி, இம்மடாதிபதி பதவிக்கு இவர் வந்ததன் பயனாக நம் நாடு ஒரு தலைசிறந்த சரித்திர ஆராய்ச்சியாளரையோ விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியாளரையோ இழந்துவிட்டது என்று நாம் எண்ண இடமிருக்கிறது. இதற்குப் பல சாட்சிகள் கூறலாம். இவருடைய சங்கர விஜயத்தில் ஆதிசங்கரர் பரமசிவனின் அவதாரமே என்பதற்கு ஆதாரமாக வேதத்திலிருந்து இவர்:

'நம: கபர்த்தினேச வ்யுப்த கேசாயச'

என்னும் ஸ்ரீருத்திர வாக்கியத்தைக் கொடுத்து அதை விளக்கியிருப்பது இதற்கு ஓர் உதாரணம். நம் தேச சரித்திரத்தில் அசோக மன்னன் தம்மைப்பற்றித் தம்முடைய சிலா சாஸனங்களில் குறித்துக்கொண்ட 'தேவனும் பிரியன்' என்னும் பதத்துக்கு முரண்பாடுள்ள இரு பொருள்களான 'தேவர்களுக்குப் பிரியமானவன்', 'மூடன்' என்பனவற்றைப் பொருத்திக் காட்டி விளக்கியிருப்பதும் இதற்கு ஒரு தகுந்த உதாரணம். இதைப் போலவே நம் புராணக் கதையில் சகர புத்திரர்களின் அழிவு ஏற்பட்டதாகச் சொல்லப்பட்ட இடத்துக்கும் அமெரிக்கா கண்டத்துக்கும் சம்பந்தம் ஏற்படுத்தி, காலிபோர்னியா என்பது 'கபிலர் அரண்யம்' என்பதன் சிதைவு என்னும் வியாக்கியானம் செய்திருப்பதும் அருமையான ஆராய்ச்சியே.

வேதங்களின் பூதக் கண்ணாடிதான் புராணம் என்கிறார் இவர். 'ஸத்தியம் வத' என்று வேதம் சொல்லுவதைப் புராணம் ஹரிச்சந்திரன் கதையின்மூலம் ரஸமான முறையில் எடுத்து உரைக்கிறது என்று இவர் விளக்கிக் காட்டுகிறார்.

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று"

என்னும் குறள்பாவுக்கு, 'யாகஞ் செய்தல் கெடுதல்' என்று சொல்லியிருப்பதாகப் பொருள்சொல்லுதல் தவறு என்றும் 'துறவறவியல்' என்னும் பகுதியில் இச் செய்யுள் வருதலால், சந்நியாசிகளுக்கு யாகம் முதலிய கர்மாக்களைவிட ஜீவகாருண்யமே முக்கியமான தர்மம் என்று கொள்வதுதான் சரி என்றும் இவர் கூறுவதும் இவருடைய ரஸிகத்தன்மையை எடுத்துக்காட்டுகிறது.

நவீன சாஸ்திர உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆசையும் இவருக்கு உண்டு. ஒரு முறை தம்மை வந்து தனியாகச் சந்தித்து மேனாட்டுத் தாவர ஜங்கம சாஸ்திரத்தின் அடிப்படைக் கொள்கையான 'பரிணமம்' (Evolution) என் பதைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லும்படி என் னைக் கேட்டார். டாடா நகரம் அல்லது ஜாம் ஷட்பூர் என்னும் ஊரில் இவர் தங்கியிருக்கையில் அங்கே நிறுவப்பட்டுள்ள எஃகு உற்பத்திச்சாலையின் ஒவ்வொரு பாகத்தையும் நுணுக்கமாக விசாரித்துத் தெரிந்து கொண்டார். இருந்தாலும் இந்த நவீன சாஸ்திரங்களின் உதவியால் நமக்குக் கிடைக்கும் அறிவுக்கு எல்லை உண்டு என்றும், பரதத்துவத்தைப்பற்றிய ஆத்ம அறிவுதான் எல்லையற்ற உண்மையான அறிவு என்றும் அடிக்கடி தம் உபதேசங்களில் இவர் எடுத்துச் சொல்லுவார்.

தமிழ்மொழியில் இவருக்குப் பரிசயமும் ஆசை யும் உண்டு. நாயன்மார்களின் தேவாரத் திருப்பதிகங் களில் இவருக்கு அதிக ஈடுபாடு உண்டு. 'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்' என்னும் பதிகத்திலுள்ள இந்து மதத்தின் பொதுக்கொள்கையை இவர் தம்முடைய பிரசங்கங்களில் பாராட்டியிருக்கிறார். "நாவேறு பாமணத்த" என்னும் திருப்புகழில் வரும், "நீவே றெனா திருப்ப நான்வே றெனாதிருப்ப" என்னும் அடியில் கண்ட அத்துவைத உண்மையை இவர் பாராட்டுவார். இவ ருடைய பதப்பிரயோகங்கள் மிகவும் பொருத்தமுள்ளவை களாக இருக்கும். இதை என் முன் ஒரு முறை எடுத்துச் சொல்லிக் காலஞ்சென்ற உ. வே. சாமிநாதையர் அவர் கள் புகழ்ந்திருக்கின்றனர். சிவகங்கை மன்னருக்கு

ஒரு சமயம் இவர் வழங்கின 'சாந்த மண்டலபதி' என்னும் பட்டத்திலுள்ள 'மண்டலம்' என்னும் பதத்தின் பொருத்தத்தைத்தான் அச்சமயம் ஐயரவர்கள் புகழ்ந்து கொண்டாடி ஆனந்தித்தார்.

வடமொழியில் வெகு நன்றாக இவர் பேசவல்லவர். அந்தப் பாஷை அதிகமாகத் தெரியாத தமிழர்களுக்கும் ஒருவாறு விளங்குமாறு அவ்வளவு எளிய நடையில் இவருடைய பேச்சு அமைந்திருக்கும்.

நெருக்கடியான சந்தர்ப்பங்களில் வெகு தெளிவுடன் நடந்துகொள்ளுவதில் இவர் சமர்த்தர். காளி கட்டத்தில் இவர் முகாம் போட்டுக்கொண்டிருக்கையில் வங்க மாகாணத்தில் சிறப்புடன் கொண்டாடப்படும் துர்க்கா பூஜை வந்தது. அச்சமயத்தில் காளி கோயிலில் அபரிமிதமாக ஆட்டுப் பலி கொடுப்பது வழக்கம். அதைத் தடுப்பதற்காக அந்த வருஷம் ஒருவர் வந்து உண்ணு விரதம் தொடங்கியிருந்தார். நெருக்கடி அதிகரித்து விட்டபடியால் கோயில் அதிகாரிகள் ஒரு கூட்டம் கூட்டி அதில் இவருக்கு வரவேற்புப் பத்திரம் வழங்கிப் பலியிடுதல் நியாயமான காரியமே என்னும் அபிப்பிராயத்தை இவரிடமிருந்து வாங்கிவிட ஏற்பாடு செய்தனர். அவர்கள் நடத்திய உபசாரத்துக்குப் பதிலாக இவர் செய்த சொற்பொழிவில், இவர், "பலியிடுதல் சாஸ்திர சம்மதம் உள்ளதுதான். ஆனால் பிற ஜந்துக்களிடத்தில் ஜீவகாருண்யம் காட்டுவதையும் நம் மதம் போதிப்பதால், புலால் உண்ணலை நிறுத்திவிடுவதும் நம்முடைய கடமைகளில் ஒன்றாகும். அப்படி நாமே பிற ஜந்துக்களின் மாம்சத்தை உண்ணும் வழக்கத்தை நிறுத்திவிட்டால், தெய்வங்களுக்கு அவைகளைப் பலியிட்டு அர்ப்பணம் செய்வதும் தானாக நின்றுவிடும். ஆகையால் இப்போது நடக்கும் உண்ணுவிரதம் முதலிய மறியல்களைக் கசாப்புக் கடைகளின் எதிரில் போய்ச் செய்து அதை முதலில் நிறுத்துவதுதான் முறையான காரியம்" என்று சொல்லி இரு திறத்தாரையும் சாமர்த்தியமாகத் திருப்தி செய்தார்.

'பகவத்பாதாள்' என்று ஆஸ்திகர் பக்தியுடன் குறிக்கும் ஆதிசங்கரர் தோற்றுவித்த மடங்கள் ஒவ்வொன்றிலும் இடையிடையே அவருடைய அம்சம் வாய்ந்தவர்கள் மடாதிபதிகளாக வருவார்கள் என்பது ஒரு பொதுக் கொள்கை. இதற்கு இணங்க இம்மடத்தின் பீடாதிபர்களுள் விசேஷ சக்தி வாய்ந்த அத்தகைய அவதார புருஷர்களுக்குள் ஒருவர் இவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

# 7

# தேசாந்தரியான டெபுடி கலெக்டர்

பலர் நிறைந்த கூட்டங்களில் ஒருவரை எளிதில் கண்டு பிடிக்க வேண்டுமென்றால் அது மற்றவர்களிடம் காணப்படாத, அவருடைய தோற்றத்தில் மட்டுமே உள்ள ஏதாவது ஓர் அங்க விசேஷத்தினால்தான் முடியும். எல்லோரையும் விடச் சற்று உயரமாகவாவது, மிகக் குள்ளமாகவாவது, அல்லது இவைபோன்ற மற்ற விசேஷத்துடனாவது இருக்க வேண்டும். சிலர் இயற்கையில் அமைந்திராத விசேஷத்தைச் செயற்கையாக உண்டுபண்ணிக்கொள்ளுவார்கள். ஸர் டி. விஜயராகவாசாரியார் என்பவர் அத்தகையோரைச் சேர்ந்தவர். அலாதியான முறையில் அமைந்துள்ள ஒரு தலைப்பாகையால் பிறர் தம்மை எளிதில் அறிந்துகொண்டுவிடும்படி செய்துகொண் டிருக்கிறார். இந்தத் தலைப்பாகை சிவப்பு நிறமுள்ள பட்டுத் துணியினால் ஆக்கப்பட்டது. கோகலே போன்ற மகாராஷ்டிரர்களின் படங்களில் நாம் கண்ணுற்றிருக்கும் தலைப்பாகைகளின் உருவத்தை உடையது.

இதை இவர் இத்தனை வருஷங்களாக விடாமல் அணிந்திருப்பது இவருடைய முக்கியமான குணம் ஒன்றை எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய தலைப்பாகைக்கு ஒரு காலத்தில் தென்னிந்தியாவில் கௌரவம் இருந்தது. அக்காலத்தில் இதை டெபுடி கலெக்டர் உத்தியோகத்தில் இருந்து வந்தவர்கள் அணிந்துகொள்ளுவது வழக்கமாக இருந்தது. ஆனால் இவ்வழக்கம் மறைந்து, தம்மைப் போன்ற பலர் இதைக் கைவிட்ட பின்பும், தாம் அப்பதவியையே விட்டு விலகி வேறு பல பதவிகளை வகிக்க நேர்ந்தபோதிலும், ஏன் - சர்க்காரிடம் உபகாரச் சம்பளம் பெற்று வரும் தற்போதுங்கூட - இந்தத் தலைப்பாகையை இவர் விடாது அணிந்திருப்பது, ஒரு விஷயத்தில் பற்று வைத்துவிட்டால் அதை எப்படிக் குரங்குப்

பிடியாகக் கைக்கொண்டு விடுகிறார் என்பதையும் காட்டு கிறது.

இவருடைய காரியங்கள் பலவற்றில் இதே முறைப் பற்றுதல் காணப்படும். இதற்குப் பல உதாரணங்கள் கூறலாம். இவர் டெபுடி கலெக்டராக இருந்த நாட்களில் ஒருமுறை தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள தாலுக்கா ஒன்றின் தலைநகருக்குப் போக நேர்ந்தது. அங்கே உள்ளூர் முனிசிபாலிடியார் தங்கள் வேலையைச் சரிவரச் செய்து வராததால் தெருக்கள் அசுத்தங்கள் நிறைந்தனவாக இருந்தன. அவ்வூரின் முக்கிய வீதி ஒன்றில் முழங்காலளவு வரையில் சேறும் சகதியுமாக இருக்கும்படி விட்டிருந்தனர். அதைப் பார்த்துவிட்டு இவர் சரேலென்று தம் உடுப்புகளுடனேயே அந்தச் சேற்றில் நடந்து சென்று பின்பு அதைப்பற்றித் தாம் முனிசிபாலிடியாருக்கு எழுதியனுப்பிய குறிப்புடன், சேறு படிந்திருந்த தம் கால்சட்டையையும் சேர்த்து அனுப்பினார். இச்செயலுக்குப் பலன் கைமேல் கிடைத்தது. ஒரு வாரத்துக்குள் அத்தெரு ஒழுங்காகச் சீர்திருத்தப்பட்டதுடன் அந்த நகர முனிசிபாலிடியின் தலைவர் சலவை செய்யப்பட்ட இவருடைய கால் சட்டையுடன் இவரிடம் வந்து இவருடைய மன்னிப்பையும் கேட்டுக் கொண்டார்.

வேறோரிடத்தில் ஊரின் ஒரு பகுதியில் உள்ள ஜனங்கள் அங்கே வசிக்க மறுத்து அக்கம் பக்கங்களிலுள்ள வயல்களில் குடியிருக்க ஆரம்பித்தனர். இதற்குக் காரணம் அவ்விடத்தில் ஒரு போலீஸ்காரன் தன் மனைவியைக் கொன்று பின்பு தானும் தற்கொலை செய்து கொண்டபடியால் அங்கே பேய்கள் நடமாடுகின்றன என்னும் வதந்திதான். அந்தக் கதையைக் கேட்டவுடன் இவர் ஓர் அறிக்கை தயாரித்தார். அதில் ஒரு சட்டத்தைக் குறிப்பித்து அதில் கண்டபடி கொலையுண்ட பி. ஸி. குருஸ்வாமியின் அருவத்துக்குக் கலெக்டர் துரையவர்களால் உடனே அவ்விடத்தைவிட்டு அகலவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருந்தது. இவ்வுத்தரவைப் பல இடங்களில் சுவர்களில் ஒட்டியும் தண்டோராப்

போட்டும் பரவச் செய்தார். அதற்கடுத்த இரவில் அவர் சில போலீஸ் ஜவான்களுடன் அத்தெருக்களில் தீவட்டிகள் சகிதமாகச் சுற்றிப் பார்த்து அவ்வுத்தரவுக்குப் பிசாசு அடங்கி நடக்கிறதா என்று சோதனை செய்தார். கொஞ்ச தூரத்துக்குப் பின்னால் கிராம ஜனங்களும் பயத்துடன் பின்தொடர்ந்து சென்று, நடந்ததைக் கவனித்தனர். அந்தப் பேய் எங்கும் காணப்படவில்லை. மறு நாளே ஜனங்கள் ஒவ்வொருவராகத் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிவந்து வசிக்கலாயினர். அத்துடன் பேய்களையும் அடக்கக்கூடிய அந்தச் சர்க்காரிடம் அவ்வூராருக்கு இருந்த மதிப்பும் உயர்ந்தது.

இவர் கோயம்புத்தூர் ஜில்லாவாசி. 1875-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் பிறந்தார். சென்னை ராஜதானிக் கலாசாலையில் உயர்தரக் கல்வி கற்றார். அந்த நாட்களில் சென்னை மாகாணத்தில் ஐ. ஸி. எஸ். என்னும் பதவிக்கு அடுத்தபடியாக உள்ள டெபுடி கலெக்டர் என்னும் வேலைக்குப் பரீக்ஷையின் மூலம் ஆட்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருந்தனர். இப்பரீக்ஷையைப் பின்பு நிறுத்தி விட்டனர். இப்பரீக்ஷையின் மூலம் டெபுடி கலெக்டர் வேலைக்கு வந்தவர்களுள் ஒருவர் இந்த விஜயராகவாசாரியார் என்பவர். இந்தப் பரீக்ஷையில் இவர் தேறி வேலையில் அமர்ந்தது 1898-இல், அதாவது இவருக்கு 23-ஆம் வயது நடக்கையில்.

இவர் பல பெரும் பதவிகளை வகித்திருக்கிறார். அவைகளுள் முக்கியமானவைகளாக அடியில் கண்டவைகளைக் குறிப்பிடலாம். 1912 முதல் 1917 வரையில் சென்னை நகர பரிபாலன சபையில் வருமான உத்தியோகஸ்தர், 1917 - 1918-இல் சென்னை வருமான இலாகாவை நிர்வகிக்கும் போர்டுக்குக் காரியதரிசி, 1918-இல் சென்னை சர்க்காரில் நில சம்பந்தமான தஸ்தாவேஜுகளைப் பாதுகாக்கும் இலாகாவின் தலைவர், 1918-19-இல் சென்னையில் கைத்தொழில் இலாகாவின் உப தலைவர். 1919-20-இல் கொச்சி சமஸ்தானத்தின் திவான் அல்லது மந்திரி, 1920 முதல் சில வருஷங்களுக்குச் சென்னை மாகாணத்தில் ஜில்லா கலெக்டர், 1911 முதல்

1915 வரையில் சீமையில் வெம்பிளி என்னும் இடத்தில் நடந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யக் காட்சிசாலையின் இந்தியப் பகுதிக்குத் தலைவர், 1915-16-இல் சென்னை சர்க்கார் கைத்தொழில் இலாகாவுக்கு முதல் தலைவர், பின்பு மீன் இலாகாவின் தலைவர், அதே வருஷத்தில் மத்திய சர்க்காரின் சட்ட சபையில் அங்கத்தினர் ஆதல், 1916-ஆகஸ்டு மாதத்தில் கானடா தேசியப் பொருட்காட்சியைத் திறந்து வைத்தல், 1916-19-இல் மத்திய சர்க்காரில் 'பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்' என்னும் சர்க்கார் பதவிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் சங்கத்தில் ஓர் அங்கத்தினர், 1919-35-இல் மத்திய சர்க்காரின் விவசாய மந்திராலோசனை சபையின் தலைவர்.

இவ்வளவு பெரும் பதவிகளைத் திறம்பட வகித்து விட்டு உபகாரச் சம்பளம் பெற்று விலகிய பின்னரும் இவருடைய திறமையை வட இந்தியாவிலுள்ள ஒரு சம்ஸ்தானத்தார் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றனர்.

இவர் ஆற்றியிருக்கும் அரிய தொண்டுக்காக மெச்சி, சர்க்கார் இவருக்குப் பல பட்டங்களைக் கொடுத்துக் கௌரவித்தனர். அவைகளுள் முக்கியமானவை 'திவான் பகதூர்', 'கே. பி. யி', 'ஸர்' என்பன.

இவர் வகித்த பதவிகளைப்பற்றி இவரை ஏதாவது கேட்டால் நகைச்சுவையுள்ளதாக ஏதாவது சொல்லுவார்.

"கைத்தொழில் இலாகா அதிகாரியாகவா உங்களை நியமித்தனர்?" என்று கேட்டால், "ஆமாம், சைனியங்களுக்குப் போர்வைகள் நயமாகச் செய்யவேண்டுமென்று விரும்பினர். உடனே என்னை இவ்வுத்தியோகத்துக்கு அனுப்பி அக் காரியத்தைச் சாதிக்கச் செய்தனர்" என்பார் புன்னகையுடன்.

"அதைச் செய்து முடித்தீர்களா?" என்று கேட்டால், "அதெப்படி முடியும்? அதற்குள் என்னைக் கொச்சிக்குத் திவானாக மாற்றிவிட்டார்களே" என்பார்.

இதைக் கேட்டுவிட்டு இடியிடியென்று சிரிக்கவேண்டியதுதான்!

"மீன் இலாகாவா?" என்று வியப்புடன் கேட்டால், "ஆமாம், நான் மீன் உண்ணு வகுப்பைச் சேர்ந்தவன் அல்லவா? ஆகையால் நான்தானே அப் பதவிக்குத் தகுதியானவன்" என்பார்.

"அந்த இலாகாத் தலைவர் பதவியில் இருக்கையில்தான் மத்திய சட்டசபைக்கு எனக்குத் 'தேர்தல்' கிடைத்தது" என்று குறிப்பார்.

"வெம்பிளியில் என்ன செய்தீர்?" என்றால், "மூன்று வருஷங்களாக முனைந்து ஒரு கே. பி. யி. பட்டத்தையும் ஆயிரக் கணக்கான சிநேகிதர்களையும் சம்பாதித்துக் கொண்டேன்" என்பார்.

மத்திய சர்க்காரின் பப்ளிக் சர்விஸ் கமிஷனில் நான்கு வருஷ காலம் ஐ. ஸி. எஸ். உத்தியோகத்தை நாடிவந்த நுற்றுக்கணக்கான வாலிபர்களை.

"ஸூயஸ் கால்வாய் எவ்வளவு ஆழம்?"

"கானேரித்தீவின்—பெயர் கேட்கப்படாத ஓர் இடத்தைக் குறித்து—"வரி வசூலிப்புக் கொள்கையைப் பற்றி உனக்கென்ன தெரியும்?"

"சூரியன் நம்மிடத்திலிருந்து எவ்வளவு தூரம்?"

இவை போன்ற கேள்விகளைப் போட்டு வாட்டு வாட்டென்று வாட்டினார். ஏனென்றால், "பின்னால் கலெக்டர் வேலையைச் சரிவரச் செய்யவேண்டுமானால் இவைகள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டுமல்லவா?" என்பார்.

நான் முதல் முதலில் இவரைச் சந்தித்தவுடனேயே நகைச்சுவையில் இவருக்குள்ள பற்றுதல் எனக்கு விளங்கி விட்டது. ராஜதானிக் கலாசாலையில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக இவரை வரவழைத்திருந்தோம். அன்று அவ்விடத்துக்கு வர இவரைச் சம்மதிக்கச் செய்தவர் எங்கள் ஆசிரியர்களுள்

ஒருவர். இதற்குக் கைம்மாருக இவர் தம்முடைய பிரசங்கத்தில் அவ்வாசிரியரை வெளுத்து வாங்கி விட்டார். அடிக்கு ஒரு முறை தாம் சொல்லுவதில் ஏதாவது குற்றமாவது, எங்களுக்குப் பிடிக்காததாகவாவது இருந்தால் அதற்கு ஜவாப்தாரி அவ்வாசிரியர்தாம் என்று சொல்லிக் காட்டிவிட்டார். "ஊரை விட்டு வெளியேறிய சென்னை மாகாணத்தவர்" என்னும் விஷயத்தைப் பற்றிய அன்றைப் பிரசங்கத்தைப்போல் நாங்கள் அக்கலாசாலையில் வேறென்றையும் ரஸிக்கவில்லை. அவ்வளவு நகைச்சுவை ததும்பியிருந்தது அது.

வாழ்க்கையிலேயே ஹாஸ்யம் என்பது இன்றியமையாதது என்பது இவர் கொள்கை. இதை இவர் தாம் நிர்வகித்த ஒவ்வொரு பதவியிலும் நடைமுறையில் கடைப்பிடித்துக் காட்டினர். என்றும் இவர் ஓர் இளைஞனின் உள்ளத்துடனேயே இருப்பதற்குக் காரணம் இதுதான். தாம் வகித்த பதவிகளுள் எதை இவர் அதிகமாக விரும்பினர் என்று இவரை ஒருவர் கேட்டதற்கு இவர் அளித்த விடையும் இதையே காட்டுகிறது. அவர் கூறிய பதில் பின் வருமாறு:

> "எனக்கு எல்லாம் பிடித்தவையே. வாழ்க்கையில் நகைச்சுவையுள்ள பகுதிகளும் அதில்லாது வறண்டு போனவைகளும் கலந்தே தோன்றுகின்றன. முன்னதாகக் கூறியதைத் தேடிப் பிடித்து அநுபவித்தால் வாழ்க்கையில் கசப்பென்பதே தோன்ருது."

இந்த மனப்பான்மை இருந்ததனுல்தான் இவர் தம் உத்தியோகங்களுள் எதைப்பற்றியும் கேட்போர் பரவசமடையும் ரீதியில் பேசுவது முடிகிறது. ஒரு முறை இவர் ஒரு சிறுவனிடம் மத்திய சர்க்காரின் விவசாய இலாகாத்தலைவர் பதவியில் தாம் செய்து வந்த வேலையைப்பற்றிச் சொல்லி வருகையில் அச் சிறுவன்,

> "இவ்விளையாட்டுக்களுக் கெல்லாமா உங்களுக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்கிறுர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டானும்

தென்னிந்தியாவைப்பற்றி வட இந்தியர்கள் கொண்டுள்ள தப்பபிப்பிராயங்களைத் திருத்துவதிலும் இவர் இந்நகைச் சுவையையே பயன்படுத்தியிருக்கிறார். ஒரு முறை ஐக்கிய மாகாணத்தில் ஓரிடத்தில் இவரை அவ்வூரான் ஒருவன், "எங்கே, 'மதராஸி' பாஷையில் கொஞ்சம் பேசுங்கள்?" என்று கேட்டதற்குப் பதிலாக உடனே இவர், "எங்கே ஐக்கிய மாகாணம் கொஞ்சம் பேசுங்கள்" என்று சொன்னாராம். தன்னுடைய பிழையை அவன் உடனே அறிந்துகொண்டு வெட்கினான்.

இந்த நகைச்சுவையினால் இவர் வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கும் சுவாரஸ்யமான சம்பவங்களை நாள் முழுவதும் ஓயாமல் சொல்லிக்கொண்டே போகலாம். அவைகளுள் இரண்டொன்றை மட்டும் இங்கே குறிப்பிடுகிறேன். ஒரு முறை ஜெர்மனி தேசத்தில் கல்யாணமாகாத ஓர் இளம் பெண்மணியும் அவளை மணக்கவிருந்த வாலிபனும் இவருடன் ரெயிலில் ஒரே வண்டியில் பிரயாணம் செய்ய நேரிட்டது. இவருடன் அவர்கள் சம்பாஷிக்கலாயினர். வழி முழுவதும் அச் சம்பாஷணையையும் அதிலுள்ள இவருடைய ஹாஸ்யக் கூற்றுக்களையும் ரஸித்து வந்த அம்மாது தாங்கள் இறங்கவேண்டிய இடம் வந்தவுடன் தன் காதலனைப் பார்த்து, "உன்னை மணப்பதாக முன்பே வாக்குறுதி செய்திராவிட்டால் இம்மனிதருடனேயே நான் சென்றுவிடுவேன். அவர் பேச்சு அவ்வளவு இனிப்பாக இருக்கிறது" என்றாளாம்.

வேறொரு சமயம் கானடா சென்றிருக்கையில் ஸ்திரீகளே அடங்கிய ஒரு கூட்டத்தில் இவர் பேச நேர்ந்தது. இவருடைய பெயரில் உள்ள "திவான்" என்பதற்குச் சரியான உச்சரிப்பு என்ன என்று அங்கே உள்ளவர்களில் ஒரு பெண்மணி இவரைக் கேட்டபோது இவர் நகைத்துக்கொண்டே, "அழகிய பெண்மணிகளே நிறைந்துள்ள இத்தகைய கூட்டத்தில் அப்பதத்தை 'டியர் ஒன்' - Dear One - அதாவது அன்பிற்கினியவனே) என்றுதான் சொல்லவேண்டும்" என்றார். நெடுநாட்கள் வரையில் அவ்வூரிலிருந்து இவருக்கு வந்துகொண்

டிருந்த விகிதங்களில் அவர்கள் இவரை அப்படியே அழைத்துவந்தனராம்.!

இத்தகைய நகைச்சுவையுள்ளவருக்குச் சென்ற இடமெல்லாம் சிநேகிதர்கள் ஏற்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. எனவே இவர் கானடாவுக்குச் சென்று திரும்புகையில் அவ்வூரின் அரசாங்கத்தார் ஓர் ஒலி பரப்பியின் மூலம், "உங்கள் 'திவான்' எங்கள் ஊருக்குமட்டும் வந்து போகவில்லை. எங்கள் வீடுகளுக்குள்ளும், ஏன்! எங்கள் இருதயங்களுக்குள்ளுங்கூடப் புகுந்துவிட்டார்" என்று இவரைப் பாராட்டினர்.

ஹாஸ்யமே நிறைந்துள்ள இவர் வாழ்வில் மனக் கசப்பென்பதே இல்லையோ என்று சிலர் சந்தேகிக்கலாம். துரதிருஷ்டவசமாக அத்தகைய பகுதிகளையும் இவர் அநுபவிக்க நேர்ந்திருக்கிறது. கல்வி கற்கையில் வெகு துடியாக இருந்து பின்பு ஐ. ஸி. எஸ். பதவியை ஏற்றவனும் கல்வி கற்கையில் என் சகபாடியாயிருந்தவனுமான இவருடைய மூத்த பிள்ளை தி. வீரராகவன் என்பவன் இளம் வயதிலேயே இவ்வுலகை விட்டு அகன்றான். இத்தகைய துயரத்தினால் மனம் உடையாமல் இருப்பதற்குப் போதிய மனவுறுதியையும் இவர் இந்த நகைச்சுவையிலிருந்தே அடைந்துவருகிறார் போலும்!

8

# தமிழின் முதல் மறுமலர்ச்சி எழுத்தாளர்

சுமார் ஒரு வருஷத்துக்கு முன்பு சென்னையில் அபிராமபுரத்தில் ஒரு திருமணம் நடந்தது. அதில் சம்பந்தப்பட்ட சிலர் என் நண்பர்கள். ஆகையால் அவர்கள் மூலம் அழைப்புப் பெற்று நான் அதற்குச் சென்றிருந்தேன். கல்யாணம் நடந்த பங்களாவின் முன்புறத்தில் வழக்கம்போல் வந்திருந்த பலர் குழுமியிருந்தனர். அந்தக் கூட்டம் இரு பகுதிகளாகப் பிரிந்து உட்கார்ந்திருந்ததை நோக்க எனக்குச் சற்று வியப்பாக இருந்தது. ஒரு பக்கத்தில், ஒரு பிரபல தமிழ் வாரப் பத்திரிகையுடன் தொடர்பு வாய்ந்தவர்கள் கூடியிருந்தார்கள். கூட்டத்திலிருந்த ஏனையோர் அதற்கு எதிர்ப்புறத்தில் அமர்ந்திருந்தனர். எனக்கு அழைப்பு விடுத்திருந்த நண்பர்களுக்கு அருகில் நான் போய் உட்கார்ந்தேன். எதிர்ப்புறத்தில் பிரஸ்தாபப் பத்திரிகையின் ஆசிரியருக்கு அருகில் ஒருவர் வீற்றிருந்தார். அவர் முகம் எங்கேயோ பார்த்ததாக எனக்குத் தோன்றிற்று. அவர் யார் என்பதை ஒருவாறு ஊகித்து அருகில இருந்த ஒருவரைக் கேட்டு என் ஊகம் சரிதான் என்று தெரிந்துகொண்டு எதிர்ப்புறத்துக்குச் சென்று அவரைக் கண்டு, "ஸார், என்னை அடையாளம் தெரிகிறதா?" என்றேன்.

அவர், என்னைப் பெயர் சொல்லி அழைத்து, "வாருங்கள்; எப்போது இந்த ஊருக்கு வந்தீர்கள்?" என்று பளிச்சென்று சொன்னார். சிறிது நேரம் யோக க்ஷேமத்தை விசாரித்துவிட்டுப் பின்பு அருகில் இருந்த பத்திரிகையாசிரியருக்கும் உடனிருந்த பிரமுகர்களுக்கும் என்னை அறிமுகப்படுத்தினார்.

இதற்குமுன் அவரை நான் இரண்டே முறைதான் சந்தித்தேன். அவ்விரண்டு முறையையும் ஒருங்கு சேர்த்தால் கூட அவரிடம் நான் அரைமணி நேரத்துக்குமேல் அளவளாவியிருக்கமாட்டேன்; அதுவும் சில வருஷங்களுக்கு முன்னுல். எனக்கு அன்று அவர் முகம் மட்டும் எங்கேயோ பார்த்ததுபோல் இருந்ததே ஒழிய, அவர் இன்னூர் என்பது சட்டென்று புலப்படவில்லை. அவர்மட்டும் என்னை உடனே அடையாளம் கண்டுபிடித்தது எனக்கு வியப்பை அளித்தது.

இதைக் குறித்துப் பின்னுல் நான் அவரையே கேட்டேன். அதற்கு அவர் அளித்த பதில் என் வியப்பை அதிகமாக்கியது.

"நாம் தொடர்ந்து அரைமணி நேரங்கூடப் பேசிப் பழகவில்லை என்பது உண்மைதான். ஆனுல் முதல் முதல் நீங்கள் என்னைக் கண்டபோது நம் இருவருக்கும் இடையே கலையைப்பற்றிக் கடுமையான வாக்குவாதம் நடந்தது. என் அபிப்பிராயத்துக்கு மாருக இருந்தது உங்கள் கொள்கை. என்னை நீங்கள் தீவிரமாக எதிர்த்து உங்கள் கட்சியையே நிலைநாட்ட முயன்றது தான் உங்களிடம் எனக்கு ஒரு மதிப்பை ஏற்படுத்தியதுடன், உங்களை மறவாமலும் செய்துவிட்டது."

வாக்குவாதங்களில் விட்டுக்கொடுக்காமல் பிடிவாதத்துடன் தம் கட்சியையே ஸ்தாபிக்க முயலும் தன்மையையுடைய வ. ரா. வுக்கு அந்தக் குணத்தைப் பிறரிடத்தில் காண்பதிலும் உத்ஸாகம்போலும்!

ஆம்; மேற்கூறிய சம்பவத்தில் குறிக்கப்பட்ட நண்பர் ஆசிரியர் வ. ரா.தாம். என் நட்புக்கும் மதிப்புக்கும் பெரிதும் பாத்திரமானவர். எனக்கு ஊக்கத்தையும் ஆசியையும் கொடுத்த பெரியார்களில் இவர் ஒருவர்.

முதல் முதல் நான் இவரைச் சந்தித்தது 1938-ஆம் வருஷம் 'பாரததேவி' என்னும் மாதம் இருமுறைப் பத்திரிகையை இவர் தொடங்கிய சமயம். சிட்டி என்னும் புனைபெயர் கொண்டு எழுதும் பெ. கோ. சுந்தரராஜனும், காலஞ்சென்ற கு. ப. ராஜகோபாலனும் சேர்ந்து

இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்தனர். வயிறு வளர்த்தலை முன்னிட்டு 1928-முதல் வங்க மாகாணத்தில் வசித்து வந்த நான் வ. ரா. வுடன் அன்று பேசிக்கொண்டிருக்கையில் தமிழ்நாட்டு எழுத்தாளர்களுக்கு வங்க மொழியிலிருந்து நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதிலேயே மவுசு இருக்கிறதேயொழியச் சொந்தக் கற்பனைகளாக நாவல்கள் எழுதும் ஆற்றல் தோன்றவில்லை என்றும், இக்காரணம்பற்றி வங்கநாட்டு எழுத்தாளர்களுக்குத் தமிழ்நாட்டைப்பற்றி அலட்சியம் ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன். தாமும் இதையேதான் தமது புதுப் பத்திரிகையில் கூறியிருப்பதாகச் சொல்லி, பாரததேவியின் முதல் இதழில் தாம் எழுதியுள்ளதை எனக்குப் படித்துக்காட்டினர்.

வ. ரா. என்று எல்லோரும் சுருக்கமாக அழைக்கும் இப்பெரியாரின் பெயர் வ. ராமசாமி ஐயங்கார் என்பது. முழுப் பெயரால் அழைக்கப்படாமல் அவர் பெயரைக் குறிக்கும் இரண்டு எழுத்துக்களால் மட்டுமே அழைக்கப்படுவதும் ஒரு பெருமையே. இந்தக் கௌரவம் மேல்நாட்டில்கூட மிகச் சிலருக்கே அமைந்திருக்கிறது. உதாரணமாக ஆங்கிலப் பிரபல எழுத்தாளரான ஏ. ஜி. கார்டினர் என்பவரை எழுத்தாளர் உலகம் ஏ. ஜி. ஜி. என்றே குறிப்பிடும். நம் நாட்டில் கூட ஸி. ஆர். முதலிய மிகச் சிலருக்கே இந்தப் பெருமை கிட்டியிருக்கிறது. இம்மாதிரி குறுக்கி அழைக்கப்படுவதில் வ. ரா.வுக்கு ஒரு தனிச் சந்தோஷம். இவருக்குக் கோபத்தை உண்டாக்கிப் பார்க்க வேண்டுமானல், "என்ன ஸார், ராமசாமி ஐயங்கார்" என்று சொன்னல் போதும். உடனே, "ஆமாம், இப்படி நீட்டி முழக்கித்தான் உங்களுக்குக் கூப்பிடத் தெரியுமோ?" என்று சீறுவார்! தாம் வசித்துவரும் வட்டாரங்களிலுள்ள ரிக்ஷாக்காரர்களுக்குக்கூடத் தம்மை 'வ. ரா.' என்றால்தான் தெரியும் என்று சொல்லி அவர் பெருமிதம் அடைவார்.

வ. ரா. வின் பூர்விக ஊர் தஞ்சாவூர் ஜில்லா. திருவையாற்றுக்கு அருகிலுள்ள திங்களூர் என்பது.

இது ஒரு பெரிய சிவஸ்தலம். திருநாவுக்கரசு சுவாமிகளின் சமகாலத்தவரும் ஓயாமல் தண்ணீர்ப்பந்தல் தருமம் செய்து புண்ணியம் சம்பாதித்தவருமான அப்பூதியடிகள் என்னும் சிவநேசச் செல்வர் வசித்துவந்த ஊர் அது. அவ்வூரிலுள்ள சிவன்கோயிலின் அமைப்பில் ஒரு விசேஷம் இருக்கிறது. பங்குனி உத்தரத்தில் சந்திர வெளிச்சம் நேராக லிங்கத்தின்மேல் விழுமாம்.

வ. ரா. வைஷ்ணவப் பிராம்மண மரபில் வடகலையார் என்னும் பிரிவைச் சேர்ந்தவர். ஆனால் சமூக சீர்திருத்தத்தில் தீவிரமான ஈடுபாடுள்ள அவரைப் பிறப்பினால் மட்டுந்தான் பிராம்மணர் என்று சொல்லலாம்.

அவர் தந்தையாரின் பெயர் வரதராஜ ஐயங்கார் என்பது. கடுமையான வைதிகரான அவருக்குப் பிறந்த 4 பிள்ளைகள், 5 பெண்களுக்குள் வ. ரா. மூன்றுவது மகவும் முதல் பிள்ளையும் ஆவர். வ. ரா. பிறந்த தினம் 1889-ஆு செப்டம்பர் மீ 17-ஆம் தேதி.

அவருக்கு ஒன்பதாவது பிராயம் நடக்கையில் அவருடைய பெற்றோர்கள் தங்கள் சொத்துக்களை இழந்து, ஜீவனத்துக்காக அங்கிருந்து ஒரு மைலுக்குள் காவிரிக் கரையிலுள்ள திருப்பழனம் என்னும் ஊருக்கு வந்தார்கள். அவ்வூர் திருப்பயணம் என்று வழங்குகிறது. அது முதல் இக்குடும்பம் அங்கேயே இருந்துவந்ததால், பின்பு வ. ரா. வை எல்லோரும் திருப்பயணம் ராமசாமி ஐயங்கார் என்றே அழைத்தனர்.

அவ்வூரிலுள்ள ஒரு திண்ணை பள்ளிக்கூடத்தில் அவருடைய கல்வி தொடங்கிற்று. அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்திக்கொண்டிருந்த எஸ். ஆபத்சகாயமையருடைய ஆற்றலை வ. ரா. இப்போதும் மிகவும் கொண்டாடுகிறார். யோக்கியமான நடத்தைக்கும், தீவிரமான தேசபக்திக்கும், பையன்களிடம் உள்ள பிரியத்துக்கும் அவரை வாயார வாழ்த்துகிறார். அவர் கற்றுக்கொடுத்த விஷயங்களுள் ஒன்றைமட்டும் வ. ரா. இன்னும் மறக்கவில்லை. 1857-ஆம் வருஷத்தில் நிகழ்ந்த சிப்பாய்க் கலகம் என்பது உண்மையில் இந்நாட்டு மக்கள் நடத்திய ஒரு தேசியப்போரே என்று சொல்லிக்கொடுத்த வியாக்கியா

னந்தான் அது. எனவே பின்னால் வி. டி. சாவர்க்கர் தம் முடைய 'இந்திய சுதந்தரப் போர்' என்னும் புத்தகத்தில் இதே கருத்தை வெளியிடுகையில் அதைப் படித்த வ. ரா. வுக்கு அது ஒன்றும் புதிதாகத் தோன்றவில்லை.

1898, 1899, 1900-இந்த மூன்று வருஷங்களில் இந்தப் பாடசாலையில் தம் ஆரம்பக் கல்வியை முடித்துக்கொண்டு திருவையாற்று உயர்தரப் பள்ளிக்கூடத்தில் 1902-இல் நடுத்தரப்பரீக்ஷையிலும், 1905-இல் மெட்ரிகுலேஷனி லும் தேர்ச்சி பெற்றார். அப்போதெல்லாம் நன்றாக வாசித்து முதல் வகுப்பிலேயே தேறிக்கொண் டிருந்தார். இவ்வளவுக்கும் வீட்டில் படிக்காமல் வகுப்பில் பையன் கள் கேட்கும் கேள்விகளுக்கு உபாத்தியாயர் அளிக்கும் விடைகளைக் கவனித்தே விஷயங்களை இவர் கிரகித்துக் கொள்ளுவாராம்.

பின்பு தஞ்சாவூரில் ஸெயின்ட் பீட்டர்ஸ் கல்லூரி யில் சேர்ந்து படித்து 1907-இல் எப். ஏ. பரீக்ஷையில் தேறத் தவறினர். இதனால் ஒரு வருஷம் அதாவது 1908-இல் படிப்புக்குத் தடங்கல் ஏற்பட்டது. 1909-இல் ஸ்ரீரங்கத்துக்கு அருகிலுள்ள கொடியாலத்தைச் சேர்ந்த கே. வி. ரங்கசாமி ஐயங்கார் என்னும் பிரபல தேச பக்தரின் உதவியால் திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியில் சேர்ந்து படித்து, மீண்டும் ஒரு முறை எப். ஏ. யில் தவறினர்.

பரீக்ஷையில் கிடைத்த தோல்வியைத் தாங்க முடி யாமல் தன்னந்தனியாகக் கல்கத்தாவுக்கு ஓடினர். அங்கே பிரபல வட இந்திய தேசபக்தரான ஸுரேந்திர நாத் பானர்ஜி என்பவர் தொடங்கியிருந்த ஒரு புதிய தேசீயக் கலாசாலையில் சேர்ந்து படிக்கலாம் என்னும் எண்ணத்துடன்தான் அவர் கல்கத்தாவுக்குப் போனர். ஆனல் அங்கே ஸுரேந்திரநாத்தின் பேட்டியே கிடைக் காமல் போனபடியால் மனங்கசந்து ஊர் திரும்பினர்.

தேசீயப் போரில் பலாத்காரப் புரட்சிக் கட்சியின் ஆதிக்கம் தலையோங்கியிருந்த காலம் அது. அந்தக் கட்சியின் தலைவராயிருந்த அரவிந்த கோஷ் திடீரென்று

மறைந்தது அப்போதுதான். ஆகையால் வ. ரா. தம் ஊர் வந்ததும், மறைந்த அரவிந்தரை எப்படியாவது கண்டுபிடிப்பது என்று அவரும் கே. வி. ரங்கசாமி ஐயங்காரும் கங்கணம் கட்டிக்கொண்டனர். இம்முயற்சிதான் அவரைப் புதுச்சேரிக்குக் கொண்டுபோய்விட்டு அங்கே பாரதியாரின் நட்பையும் அவர்மூலம் அரவிந்தரின் பரிசயத்தையும் பின்னர் அக்கூட்டத்தில் வந்து கலந்துகொண்ட வ. வே. சு. ஐயரின் தொடர்பையும் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. அரவிந்தரைக் கண்டவுடன் அவர் கே. வி. ரங்கசாமி ஐயங்காரையும் அங்கே வரவழைத்து அரவிந்தரின் தரிசனம் கிடைக்கும்படி செய்தார். அந்தக் கோஷ்டியாருக்குப் பெரிதும் பண உதவி செய்தவர் இந்த ரங்கசாமி ஐயங்காரே.

1914 - 18 - இவ் வருஷங்களில் வ. ரா. திருச்சிராப்பள்ளியில் காலேஜ் மாணவர் வசித்து வந்த விடுதிகளில் சர்க்காருக்கு விரோதமாகப் பிரசாரம் செய்வதில் காலத்தைக் கழித்தார். அப்போதே இவர் பேச்சு வீராவேசத்துடனும் காரசாரத்துடனும் இருக்குமாகையால் ஆரம்பத்தில் 50, 60 பேர்கள் அடங்கிய கூட்டமாயிருந்து, பேச்சு முற்ற முற்ற 4, 5-க்கு வந்துவிடுமாம். பயத்தினால் மற்றப் பிள்ளைகள் எல்லோரும் கூட்டத்தை விட்டு விலகிவிடுவார்களாம். பிரசாரத்தின் வேகம் அவர்களை அப்படி விரட்டியடிக்குமாம்!

1918-இல் காஞ்சீபுரத்தில் பெஸண்டு அம்மையாரின் தலைமையில் நடந்த தமிழ்நாட்டுக் காங்கிரஸ் மகாநாடுதான் அவர் முதல் முதல் சென்ற தேசீய மகாநாடு. அது முதல் வேறு பல தேசீயக் கூட்டங்களுக்கும் அவர் சென்றிருக்கிறார்.

அதே வருஷத்தில் சேலம் சூரமங்கலத்துக்குப் போய் இவர் முதல் முதலாகச் சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியாரைக் கண்டார். அவரைத் தமிழ்நாட்டுக் காங்கிரஸுக்குத் தலைமை வகிக்கும்படி தூண்டியவரும், அவருக்கும் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடுவுக்கும் இடையே ஏற்பட்ட நட்புக்கு அணைகோலி வைத்தவரும் வ. ரா.வே. 1919-இல் மகாத்மா காந்தியவர்கள் சென்னைக்கு விஜயம்

செய்தபோது ராஜகோபாலாசாரியார் வீட்டிலேயே இவர் இருந்தார்.

அமிருதஸரஸ் காங்கிரஸிலிருந்து திரும்பிப் பம்பாய் மார்க்கமாக வருகையில் புனாவில் தங்கி மகாராஷ்டிர சரித்திரத்தைத் தமிழில் எழுதவேண்டுமென்று எண்ணினார். அந்த எண்ணம் இன்னும் பூர்த்தியாகவில்லை.

சித்திரங்கள் எழுதுவதில் காலத்தைப் போக்கிக் கொண்டிருந்த நாமக்கல் ராமலிங்கம்பிள்ளையவர்களைத் தமிழ்க் கவிதை எழுதும்படி தூண்டியவரும் வ. ரா. வே.

அவர் சேர்ந்து உழைத்த தமிழ்ப் பத்திரிகைகள் பல. அவைகளின் பெயர் வருமாறு: 'தமிழ் நாடு', 'வர்த்தக மித்திரன்', 'சுதந்தரன்', 'தமிழ் சுயராஜ்யா', 'ஊழியன்', 'மணிக்கொடி', 'வீர கேசரி', 'சுதேசமித்திரன்', 'பாரத தேவி', 'நவயுகம்'. இவைகளுள் பலவற்றை அபிப்பிராய பேதத்தினாலும், அவருக்குள்ள தன்னம்பிக்கையாலும் சேர்ந்த சிறிது காலத்துக்கெல்லாம் அவர் விட நேரிட்டது. இலங்கையில் 'வீரகேசரி'யில் அவர் வேலை பார்க்கையில், 1936 - மே மாதத்தில், அங்கே பிரபல ஜோதிஷராயிருந்த பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த தேவிஸிங் என்பவரின் குமாரி புவனேச்வரி என்பவரை அவர் மணந்தார்.

இடையில் சிறிது காலம் சென்னை ரேடியோ நிலயத்தில் தமிழ்நாடக நிகழ்ச்சிகளின் மேற்பார்வையாளராக வேலை பார்த்தார். 1930 - இல் உப்பு சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டு ஏனைய தேசபக்தர்களைப்போல் அவரும் சிறைவாசம் செய்தார்.

ஆதியில் ஓயாமல் பாரதியாரைப்பற்றி இவர் பிரசாரம் செய்தார். 'மணிக்கொடி'யின் மூலம் தமிழில் மறுமலர்ச்சியைப் புகுத்திவிட்டார். சிறுகதையோ, வாழ்க்கை வரலாற்றுச் சித்திரமோ, மற்ற எந்த விதமான கட்டுரையோ, இவர் காட்டிய வழியைத்தான் இன்னும் பிறர் கைப்பற்றுகின்றனர். எனவே தமிழ் எழுத்தாளர் கோஷ்டியில் இவருக்குத்தான் முதல்

தாம்பூலம் கொடுக்க வேண்டும் என்பதை எல்லோரும் மனமுவந்து ஒப்புக்கொள்ளுவார்கள்.

பேர்வழி வெகு கண்டிப்பு; எப்போதும் இவர் விவகாரமெல்லாம் வெட்டு ஒன்று, துண்டு இரண்டு தான். வழவழா குழகுழா சமாசாரமே இவரிடம் இல்லை.

கலையைப்பற்றிய விஷயங்களில் இவருடைய கற்பனை அபாரம். சந்தேகம் இருந்தால், இவருடைய 'கோதைத் தீவு' என்னும் நூலில் நம் சமூகத்தின் பழைய கதைகளாகிய அகல்யையின் நடத்தைக்கும் (நடத்தைப் பிசகுக்கும்?), சாவித்திரியின் வெற்றிக்கும் (சாகசத்துக்கும்?) இவர் கூறும் புதிய வியாக்கியானத்தைப் படித்துப் பாருங்கள்.

'கர்மபலன்' என்பதை இவர் கடுமையாகக் கண்டிப்பார். "எல்லாம் விதிப்பயன் ஸார்" என்று குறைந்து கொள்பவர்களைப் பளார் என்று கன்னத்தில் ஒன்று கொடுக்கலாமா என்று இவருக்குக் கோபம் வரும். அப்படிச் சொல்லுபவனின் சோம்பேறித்தனத்துக்கோ, யோக்கியதையின்மைக்கோ இது ஒரு போர்வை என்று விளக்குவார்.

நாட்டின் எளிய மக்களின் நிலைமையை உயர்த்த வேண்டும் என்பதுதான் நம் வாழ்க்கையின் உண்மை லட்சியமாக இருக்க வேண்டுமென்று இவர் பன்முறை கூறுவது உண்டு. அதற்காக உழைப்பதையே தம் முக்கிய நோக்கமாகக் கொண்டிருக்கிறார்.

ஆங்கில மொழியின் வனப்பைக் கண்டு இவர் பெரிதும் மகிழ்வார். பல உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் வெளியிட ஆங்கில வார்த்தைகள் பலவற்றுக்குச் சரியான தமிழ் வார்த்தைகள் இல்லையே என்று இவர் அங்கலாய்ப்பார். அத்தகைய வார்த்தைகளை உண்டாக்கிக் கொடுக்க ஒருவரும் முன்வரவில்லையே என்று நொந்துகொள்ளுவார். அவர் இலங்கையில் இருந்த போது பண்டித ஜவாஹர்லால் நேருவின் சுயசரித்திரத்தை மொழிபெயர்க்கையில் ஓர் அத்தியாயத்

துக்குத் தலைப்பாய்க் கொடுத்திருக்கும் "Ballyho" என்னும் வார்த்தையைப் பெயர்த்தெழுத மிகவும் சிரமப்பட்டதாக என்னிடம் சொல்லியிருக்கிறார்.

மூத்த எழுத்தாளரான இவர் இளம் எழுத்தாளர்களுக்குப் போதுமான ஊக்கமளித்து அவர்களைக் கை தூக்கிவிடுவதில் பிரியம் கொண்டவர். என் சொந்த அநுபவத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. தென்னிந்தியப் பிரமுகர்கள் சிலரைப்பற்றி நான் எழுதிய வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகள் அப்போது வெளிவந்துகொண்டிருந்தன. பதினைந்து நாள் விடுமுறையில் சென்னைக்கு வந்திருந்த நான் திருவல்லிக்கேணியில் நான் தங்கியிருந்த வீட்டின் வாயிலில் நின்றிருந்தேன். எதிரில் ஒரு ரிக்ஷாவில் வந்துகொண்டிருந்த வ. ரா. என்னைக் கண்டதும் ரிக்ஷாவை நிறுத்திக்கொண்டு, என்னை அருகில் வரும்படி ஜாடை செய்தார். நான் அவரை அணுகியதும், உத்ஸாகத்துடன் அக்கட்டுரைகளுள் சமீபத்தில் வெளிவந்திருந்த ஒன்றைக் குறிப்பிட்டு, "கட்டுரை நன்றாயிருக்கிறது. வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரைகளை நீங்கள் எழுதுவது நல்ல பணியாக இருக்கிறது. சென்னை ராஜதானிக் கலாசாலையிலுள்ள ஆங்கிலப் பேராசிரியர் அதைத் தம் வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்குப் படித்துக் காட்டினார். தொடர்ந்து எழுதுங்கள்" என்று சொல்லி ஊக்கமளித்தார். போட்டியும் பொறாமையும் நிறைந்த எழுத்தாளர்கள் உலகில் இத்தகைய ஆசிமொழிகள் ஒரு புதிய எழுத்தாளனுக்குக் கிடைப்பது எவ்வளவு அபூர்வமாயிருக்கிறது!

இவர் சதா வறுமையால் பீடிக்கப்படுகிறார். ஆனால் அதைப்பற்றி இவருக்கு ஒன்றும் வருத்தம் இருப்பதாகத் தோன்றவில்லை. நான் முதல் முதலில் இவரைச் சந்திக்கையில், பேச்சின் இடையே, "இவ்வுலகத்தில் எனக்குள்ள சொத்து என்பதெல்லாம் ரூ. 500-தான்" என்று பெருமையுடன் கூறினார். இவருடைய வறுமைக்காக இரங்கி யாராவது இவருக்குப் பண உதவி செய்ய முன்வந்தால், இவருக்குக் கடுங்கோபம் வந்துவிடும். "என்னுடைய வறுமையை நீக்க நீங்கள் எனக்குப் பணம்

கொடுக்கவேண்டாம், ஸார்; என் கலைத்தொண்டுக்காகச் சம்மானமாகக் கொடுத்தால் கொடுங்கள்; பெற்றுக் கொள்கிறேன்'' என்று சொல்லுவார்! எப்படி இந்தப் பேச்சிலுள்ள கண்ணியம்?

அறிவறிந்த காலம்முதல் தேசத்தைப்பற்றியும் சமுதாயத்தைப்பற்றியும் சிந்தனை செய்து தலை நரைத்தவரும், பேசி நாத்தழும்பேறினவரும், எழுதிக் கை வைரம் பாய்ந்தவருமான இவருக்கு சென்ற 1948-ஆம் வருஷம் அறுபதாம் ஆண்டுவிழா வெகு விமரிசையாகச் சென்னையில் ராஜாஜி ஹாலில் கொண்டாடப்பட்டது. அச்சமயம் இவருக்கு 8000 ரூபாய் அடங்கிய ஒரு பண முடிப்பும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இன்றல்ல, என்றுமே அவரைப் பாராட்டும்.

௭

# கவிமணி

ஓமர் கயாம் என்பவர் பண்டைக்காலத்திய பாரஸீகக் கவி. அவருடைய கவிதைகள் எழில் ததும்பியனவாக இருக்கும். "உண்டு உடுத்துக் களியாடுங்கள். நாளை என்பதைக் குறித்துக் கவலையுறுதீர்கள்" என்னும் தத்துவம் நிரம்பிய 'ருபாயியாத்' என்னும் நீண்ட ஒரு கவிதையை இவர் அருளியிருக்கிறார். பாரஸீக மொழியை அறியாத நம் போன்றவர் இதைப் படித்து இன்புறுமாறு பிட்ஜெரல்டு என்னும் ஆங்கில அறிஞர் இதை ஆங்கிலத்தில் செய்யுள் உருவில் மொழிபெயர்த்திருக்கிறார். சுமார் இருநூறு செய்யுட்கள் அடங்கிய இந்நூலில் சிறு வயதிலிருந்தே எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. நான் மாணவனாக இருக்கையில் இச்செய்யுட்கள் அத்தனையும் எனக்கு மனப்பாடம். அவைகளுள்ளும், "இவ்வழகிய இடத்தில் மரத்தின் நிழலும், கவிதைப்புத்தகமும், கலசம் ஒன்றில் நிரம்ப மதுவும், நீயும் என் அருகில் இருப்பின், காடாகிய இவ்விடமும் சொர்க்கமே அன்றோ? கவலை ஏன்?" என்று ஓர் ஆடவன் தன் காதலியிடம் வெளியிடுவது போன்ற கருத்தை அடக்கிய செய்யுள் என் மனத்தை அதிகமாகக் கவர்ந்தது. பிற்காலத்தில் நான் ஒரு நாள் இச்செய்யுளைப் பற்றிச் சிந்தித்திருக்கையில், நம் தமிழிலும் இது செய்யுள் உருவில் தோன்றவில்லையே என்று எண்ணி ஏங்கினேன். அச்சமயம் நான் தற்செயலாக வெறுமனே ஏடு தள்ளிக் கொண்டிருந்த ஒரு தமிழ்ப் பத்திரிகையில் அடியில்கண்ட கவிதையைப் பார்க்க நேர்ந்தது.

"வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசுந் தென்றல் காற்றுண்டு
கையிற் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு

தெய்வ கீதம் பலவுண்டு
　　தெரிந்து பாட நீயுண்டு
வையந் தருமிவ் வனமின்றி
　　வாழும் சொர்க்கம் வேறுண்டோ!''

**ஆதிநூலிலுள்ள செய்யுளை வெகு அழகாகப் பெயர்த்து எழுதியிருக்கும் இவர் யார் என்று அறிய விரும்பினேன். அதிலும் 'கவிதைப் புத்தகம்' (Book of Verse) என்னும் முதல்நூலிலுள்ள சொற்றொடரைக் 'கம்பன் கவி' என்று இவர் தமிழாக்கியிருப்பது என் மனத்தை மிகவும் கவர்ந்தது.**

**இந்தக் கவிதான் தேசிகவிநாயகம்பிள்ளை என்பவர். இதுவே நான் முதல் முதலாக இவரைப்பற்றி அறிந்தது. பின்னர் இவருடைய 'மலரும் மாலையும்' என்னும் நூல் திரட்டில் மேற்கூறிய செய்யுள் அடங்கிய 'பாரசீகக் கவியமுதம்' என்னும் கவிதையில் உள்ள 61-செய்யுட்களையும் பல முறை படித்துப் படித்து உள்ளம் மகிழ்ந்தேன். இக்கவிதையில் என் கவனத்தைக் கவர்ந்த இன்னும் இரண்டு செய்யுட்கள் அடியில் கொடுக்கப்பட்டிருப்பவை:**

"எல்லாம் இங்கோர் சூதாட்டம்
　　இரவும் பகலும் மாறுட்டம்
வல்லான் விதியே ஆமேகன்
　　வலியில் மனிதர் கருவிகளாம்.
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்
　　ஜோடி சேர்ப்பான் வெட்டிடுவான்
செல்லா தாக்கி ஒவ்வொன்றுய்த்
　　திரும்ப அறையில் இட்டிடுவான்.''

*　　*　　*　　*

''எழுதிச் செல்லும் விதியின்கை
　　எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்ருலும்
　　சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னுய் நீங்கியொரு
　　வார்த்தை ஒன்றை மாற்றிடுமோ?

அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?''

இச் செய்யுட்களின் சரளமான நடையழகை யார் தாம் ரஸிக்கமாட்டார்கள்!

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள நாங்குநேரி தாலுகாவும் திருவிதாங்கூர் ஸம்ஸ்தானத்தின் தாலுக்காக்களில் ஒன்றாகிய நாகர்கோயில் என்பதும் சேர்ந்த நிலப்பரப்புக்குத் தொன்றுதொட்டு 'நாஞ்சில் நாடு' என்ற பெயர் வழங்கிவருகிறது. இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் நம் கவிமணி.

இந்த நாஞ்சில்நாட்டில் உள்ள தேரூர் என்னும் ஊர் தான் இவருடைய முன்னோர்கள் வாழ்ந்து வந்த இடம். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் - இந்த மூன்று மூர்த்திகளும் ஒருங்கே "ஸ்தாணு, மால், அயன்'' என்னும் கூட்டுப்பெயரால் வழிபடப்படும் சுசீந்திரம் என்னும் தலத்துக்குப் பக்கத்தில் உள்ளது இவ்வூர். இவருடைய முன்னோர்கள் வேளாளர் குலத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுள் ஒருவர் ஊரைவிட்டுப் பொருளீட்டும் நோக்கத்துடன் தஞ்சை ஜில்லாவிலுள்ள நாகப்பட்டினத்துக்குச் சென்று அங்கே வியாபாரம் செய்து பெருஞ் செல்வவந்தர் ஆனாராம். அது முதல் இவர்களுக்கு நாகப்பட்டினமே இருப்பிடம் ஆயிற்றாம். இவர்கள் நடத்தி வந்த தூய வாழ்வின் பயனாக அக்கம்பக்கத்தினர் இவர்களைச் சைவ முதலியார்களாகவே கருதினர். அதன் பயனாக இவர்களுக்கு முதலியார் என்னும் குலப்பெயரும் அமைந்துவிட்டது. இவர்களுள் சுவாமிநாத முதலியார் என்னும் ஒருவருக்குக் கணபதி முதலியார், நடராஜ முதலியார் என்னும் இரண்டு ஆண் மக்களும் பார்வதவர்த்தினி என்ற ஒரு பெண் மகவும் தோன்றினர். இந்தப் பெண்ணை இவர்களுடைய பூர்விக ஊரான நாஞ்சில் நாட்டில் தாமரைக்குளம் என்னும் கிராமத்திலுள்ள மாணிக்கவாசகம் பிள்ளை என்னும் பெரியார் ஒருவருக்கு மணம் செய்துகொடுத்தனர். இவர் ஒரு தமிழ் அறிஞர். "காரியந்தாதி'' என்னும் ஒரு நூலை இவர் இயற்றியுள்ளார். இவருடைய குடும்பமே தமிழன்பு உடையதாக இருந்தது. இவர் சகோ

தரரான கண்ணுபிள்ளை என்பவர் கம்பராமாயணத்தில் நல்ல ஈடுபாடு உள்ளவர்.

மாணிக்கவாசகம் பிள்ளைக்கும் பார்வதவர்த்தினி அம்மாளுக்கும் பிறந்த பெண் குழந்தைக்கு ஆதிலட்சுமி என்று பெயரிட்டனர். நாளடைவில் இப்பெண்ணைத் தேரூரிலுள்ள சிவதாணுபிள்ளை என்னும் ஒரு பெரியவருக்கு மணம் செய்வித்தனர். இவருக்குத் தமிழன்பும், ஆங்கிலப் பயிற்சியும் உண்டு. அரசாங்க வேலையில் இருந்துவந்தார். இவ்விருவருக்கும் மகவாகத் தோன்றியவர்தாம் நம் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை என்னும் புகழ்பூத்த பெரியார். இவர் பிறந்தது 1876-ஆம் ஆண்டில்.

இவர் பிறந்த ஊராகிய தேரூரிலேயே இவருடைய கல்வி ஆரம்பித்தது. ஆனால் அக்காலத்தில் அப்பிரதேசங்களில் தமிழைக் கற்றுக்கொடுக்கப் பள்ளிக்கூடத்தில் வசதி இல்லாமையால் இவர் முதல் முதலாக மலையாள மொழியைத்தான் பள்ளியில் கற்றார். ஆனால் தாய்மொழியாகிய தமிழ்மொழியைக் கற்கவேண்டுமென்னும் ஆர்வம்மட்டும் இவருக்கு இருந்துவந்தது. அதுவும், அம்மொழியில் விசேஷ ஆற்றல் படைத்த கவிஞர் வழியில் வந்த இவருக்கு அத்தகைய ஆவல் உண்டானது இயற்கையே அல்லவா? எனவே தமிழில் 'முறையில் நூல் உணர' விரும்பிய இவர் தேரூரை அடுத்த வானந்திட்டு என்னும் ஊரில் இருந்து வந்த சாந்தலிங்கத் தம்பிரான் என்னும் சைவத் துறவியும் மடாதிபதியுமான பெரியார் ஒருவரை அணுகி அவரிடம் தம் தமிழ்க் கல்வி கேள்வியைத் தொடங்கினார். பின்பு இவர் கோட்டாறு என்னும் ஊரிலுள்ள ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து அங்கே ஆங்கிலமும் படிக்கலானார். தம் தாய் தந்தையருக்கு இவர் ஒரே புதல்வராக இருந்தபடியால் இவருக்கு வீட்டில் அதிகச் சலுகைகள் காட்டப்பட்டு இவர் செல்வமாக வளர்ந்துவந்தார். அதனால் ஆதியில் இவருடைய இளமைப் பருவம் சிறப்பாகவே அமைந்திருந்தது. இவருடைய பத்தாம் பிராயத்தில் இவர் தந்தையார் உயிர் துறக்கவே அப்பரு

வத்தில் இவருடைய வாழ்க்கையில் முதலாவது இடையூறு தோன்றிற்று. அதுமுதல் இவருடைய பராமரிப்பும் கண்காணிப்பும் இவர் தாயாரின் தனிப்பொறுப்பாயிற்று. எனினும் இவர் ஆங்கிலப் படிப்பு முறைப்படி முதலில் 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷையில் தேறி 'எப். ஏ.' க்கும் படித்தார். ஆனால் அந்தப் படிப்பு முற்றுப் பெறுமலேயே இவருடைய ஆங்கிலக் கல்வி நின்றுவிடும்படி நேர்ந்தது. பள்ளிக்கூடத்தை விட்டு நின்று விட்டபோதிலும், கல்வி கற்பதில் இவருக்கு இயற்கையாகவே அமைந்திருந்த ஆசையினால், தொடர்ந்து தாமே ஆங்கிலப் புத்தகங்களைப் - அவைகளுள்ளும், ஆங்கிலக் கவிதைகளை - படித்து அவைகளிலுள்ள நுணுக்கங்களை இவர் அநுபவித்து வந்தார்.

தம்பிரானிடம் இவர் தமிழ்ப்பாடம் கேட்டு இலக்கண இலக்கியங்கள் கற்றது சுமார் ஐந்து, ஆறு வருஷங்கள் இருக்கும். சிறு வயதான அப்பருவத்திலேயே இவருக்குக் கவிபாடும் திறன் ஏற்பட்டுவிட்டது. சந்தர்ப்பத்துக்கு ஏற்ற தனியன்களை இவரைக்கொண்டு பாட வைத்து, அவைகளை அநுபவித்துக் களிப்பது அங்குள்ளோரின் பழக்கமாயிற்று. அம்மாதிரி அப்போது இவர் பாடிய சிறு கவிதைகள் எண்ணிறந்தன. இவைகளில் பல இப்போது இவருக்கே முழு உருவில் நினைவில் இல்லை. அந்நாளில் இவருக்கு இருந்த இவ்வாற்றலுக்கு உதாரணமாக அடியிற்கண்ட வெண்பாவைக் குறிப்பிடலாம்:

"வேறும் ஒருதுணையான் வேண்டுவேனோ வேணுவனம்
தேறுமுமை யோர்பாகத் தேசிகனே!— கூறுமெனக்
கெய்யாப் பிறவி இருளகல நீயளித்த
பொய்யா விளக்கிருக்கும் போது."

இச் செய்யுள் இவருக்குக் கோட்டாற்றில் சிவதீட்சை அளித்த உமையொருபாகக் குருக்கள் என்னும் திருநெல்

---

குறிப்பு: இவ்வெண்பாவில் 'வேணுவனம்' என்பது திருநெல்வேலியைக் குறிக்கும்.

வேலி மடத்தைச் சார்ந்த பெரியாரைக் குறித்து இவர் பாடியது.

சிறு வயதிலேயே இவருக்கு நல்ல ஞாபக சக்தி உண்டாம். இதை விளக்க அப்போது இவர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் எடுத்துச்சொல்லப்படுகிறது. அது வருமாறு:

ஒரு சமயம் பொங்கல், அப்பம், வடை முதலிய பக்ஷணங்கள் கட்டளைப் பிரசாதமாகச் சுசீந்திரம் பேரம்பலவாணர் கோவிலிலிருந்து, இவருக்குப் பழக்கமான ஒரு மடத்துக்கு வந்தது. அந்த மடத்துக்குத் தலைவராக இருந்த சங்கரலிங்கத்தம்பிரான் என்பவர் இவர் உட்பட அங்கிருந்த சிறு பிள்ளைகளுக்கிடையே விளையாட்டாக ஒரு போட்டிப் பந்தயம் வைக்க எண்ணி மூன்று முறை மட்டும் படிக்கப்படும் தேவாரச் செய்யுட்களை யார் மனப்பாடம் ஆக்கிக்கொண்டு திருப்பி ஒப்பிக்கிருனோ அவனுக்குப் பாட்டு ஒன்றுக்கு ஒரு வடையோ அப்பமோ கொடுக்கப்படும் என்று திட்டமிட்டார். போட்டி தொடங்கிற்று. அப்பங்களும் வடைகளும் நம் தேசிகவிநாயகம் பிள்ளையிடமே வந்து குவிந்தவாறு இருந்தன. மற்றப் பிள்ளைகள் அவைகளைப் பெற இயலாமல், இவர்முன் தோன்றிய பலகாரக் குவியலைப் பார்த்த வண்ணமே நின்றுகொண் டிருந்தனர். போட்டி முடிந்ததும், அந்தப் பக்ஷணங்களைப் போட்டியில் தோற்ற தோழர்களுக்கும் இவர் பங்கிட்டுக் கொடுத்து அதுகாறும் வாடிய முகங்களில் மலர்ச்சியை உண்டாக்கினுர்.

இளவயதிலேயே இவருக்கிருந்த செய்யுள் இயற்றும் திறனைக் குறிக்க இன்னும் ஓர் உதாரணத்தையும் இங்கே கொடுக்கலாம். புது மணம் கழிந்த இவருடைய நண்பன் ஒருவன் பல காரணங்களால் வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றித் தன் வீட்டையும், இளம் மனைவியையும் விட்டு எங்கேயோ சென்று மறைந்தான். அவனுடைய பிரிவால் வருத்தமுற்ற அவனுடைய சுற்றத்தாரின் துயரத்தை நீக்க எண்ணங்கொண்ட தம்பிரான் இவரைக் கொண்டு அடியிற்கண்ட செய்திச் செய்யுளை இயற்றச் செய்தார்:

மந்தாரை மலர்ந்திருக்க மதுவுண்ணும் வண்டெங்கே?
　　மாமுல்லைக் கொடிபடர வளருங்கொள் கொம்பெங்கே?
சிந்தாத மணியிருக்க ஒளியெங்கே சென்றதெனத்
　　தெருவில் பலர்கூடித் தெரிந்துகொளக் கேட்டதற்கு
நந்தாத பரஞான அமுதுண்டு தெவிட்டெறியும்
　　நற்பரமா னந்தனருள் பெறச்சென்ற நண்பாநீ
வந்தாலே மறுமொழியும் வகுப்பமெனச் சோதிடநூல்
　　வல்லாரும் கூறுகின்றார் வகையேதும் அறியேனே.

அவன் ஒரு மடத்தில் இருந்து வந்தான் என்னும் புலனை அறிந்து தம்பிரான் அங்கே இச்செய்யுளை அனுப்பி வைத்தார். செய்யுளைக் கண்டதும் அந் நண்பன் விரைந்து வீடு வந்து, தன் மனைவியையும் உறவினரையும் மீட்டும் மகிழ்வித்தான்.

இளம் பிராயத்திலேயே இவர் தாமாகவும் தம்பிரான் கருத்துக்கு இணங்கியும் பாடிய பாட்டுக்கள் பல. அவைகளுள் அழகம்மை என்னும் தெய்வத்தின்மீது இவர் இயற்றிய ஆசிரிய விருத்தங்களையும் சுசீந்திரம் என்னும் தலத்தில் கோவில் கொண்டிருக்கும் 'ஸ்தாணுமாலயன்' என்னும் தெய்வத்தின்மேல் பாடிய செய்யுட்களையும் முக்கியமானவை என்று கூறலாம்.

அந்நாளிலேயே இவருடைய கவிதாசக்தி பிறரால் பெரிதும் பாராட்டப்பட்டது. இவர் கவிகளை மெச்சிப் புகழ்ந்தோருள் காலஞ்சென்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் நண்பரும் தமிழை நன்கு கற்றறிந்தவருமான குலசேகரபுரம் வலிய மேலெழுத்துச் சிவராமலிங்கம்பிள்ளை என்பவரும் ஒருவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

இவருக்கு இருபத்தைந்தாவது ஆண்டில் நாகர்கோயிலை அடுத்துள்ள புத்தேரி என்னும் ஊரைச் சேர்ந்த உமையம்மையார் என்னும் பெண்ணை இவர் தம் வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார்.

அடக்கமும் அமைதியும் நிறைந்த இவருக்கு வாழ்க்கையிலும் அமைதியே நிலவிற்று. இவர் பார்த்து வந்த

வேலைகளிலும் குறிப்பிடக்கூடிய சம்பவம் ஒன்றும் நடக்க வில்லை. கோட்டாறு என்னும் ஊரிலுள்ள ஆரம்பப் பாடசாலையில்தான் இவர் முதல் முதலாக ஆசிரியர் தொழிலில் அமர்ந்தார்.

விஷயங்களைக் கூர்ந்து கவனிக்கும் தன்மை வாய்ந் தவர் இவர். இதை விளக்க இவர் வாழ்க்கையில் நடந்த இரு சம்பவங்களைக் கூறலாம். அரசாங்கத்தார் பதிப்பிக் கும் பாடபுத்தகங்களைப் பரிசோதித்துச் சரிவரத் திருத்தி யமைக்கும் அலுவல் இவருக்கும் இன்னும் சிலருக்கும் கொடுக்கப்பட்டு அதை இவர் செய்து வந்தார். ஒரு பாட புத்தகத்தில் வரையப்பட்டிருந்த கிளியின் படத் தில் முன் பக்கமாக மூன்று விரலும், பின்புறம் ஒரு விரலும் கொடுத்திருந்தது இயற்கைக்கு முரண் என்றும், உண்மையில் முன், பின், இரு பக்கங்களிலும் இரண்டிரண்டு விரல்களாக இருப்பதுதான் சரி என்றும், இவர் எடுத்துக்காட்டினார். கடிகாரத்தின் படத்தில் நான்கு மணியைக் குறிக்கும் எண், IIII என்று எழுதப்படுவதுதான் சரி என்றும், 'IV' என்று குறிப்பது தவறு என்றும் இவர் எடுத்து விளக்கினார்.

இதற்குப்பின் இவர் வேலை பார்த்தது, நாகர்கோயிலி லுள்ள போதனுமுறைப் பாடசாலையிலும், திருவனந்த புரம் பெண்கள் போதனுமுறைப் பாடசாலையிலும். தமிழில் நல்ல பயிற்சியுள்ள இவர் முதலில் விஞ்ஞானப் பகுதியில்தான் ஆசிரியராக அமர்ந்தார். விஞ்ஞானத் தைப்பற்றிய விஷயங்களில் இவருக்கு நல்ல அறிவு உண்டு. நாளடைவில்தான் இவர் தமிழ் ஆசிரியரானார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களில் இவருக்கு எவ்வ ளவு ருசியுண்டோ அவ்வளவு ருசி நம் நாட்டுப் புராதன சிலாசாஸன ஆராய்ச்சியிலும் இவருக்கு உண்டு. ஆகை யால் இவ்வாராய்ச்சியில் தம் கவனத்தையும் ஊக்கத்தை யும் செலுத்தி, அதன் பயனுகத் தேச சரித்திரத்தைப் பற்றித் தமக்குக் கிடைத்த பல உண்மைகளிலும் வெகு வாக இவர் ஈடுபடுவார்.

ஆங்கில மொழியிலுள்ள கவிதையின் வனப்பும் இவருடைய கவனத்தைக் கவர்ந்தது. எட்வின் ஆர்னல்ட்

என்னும் ஆங்கிலக் கவி எழுதியிருக்கும் புத்தர் சரித்திரம் (ஆசிய ஜோதி அல்லது Light of Asia என்பது இந் நூலுக்கு அவ்வாசிரியர் கொடுத்த பெயர்) என்னும் நூலில் இவர் மனம் மிகவும் லயித்தது. 'புத்தர் அவதாரம்', 'புத்தரும் ஏழைச் சிறுவனும்', 'கருணைக்கடல்', 'புத்தரும் மகனை இழந்த தாயும்', 'காதல் பிறந்த கதை' என்ற மகுடங்கள் அமைந்த இவருடைய கவிதைகள் இந்த 'ஆசிய ஜோதி'யைத் தழுவி எழுதப்பட்டவையே.

ஏனைய தமிழ்க் கவிகளிடமும் இவருக்குப் பக்தி உண்டு. அவர்களுடைய கவியமுதத்தைப் பருகி இவர் பல படப் பாராட்டியிருக்கிறார். இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் இவருக்கு,

"தேனிலே ஊறிய செந்தமி ழின்சுவை
தேடும் சிலப்பதி கார"

மாயிருக்கிறது. கம்பர் உலகுக்குத் தந்திருக்கும் இணையற்ற கவிமலர்களை இவர்,

"பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து கம்பன்
பாரில் பொழிந்ததிப் பாற்கடல்"

என்று போற்றுகிறார். ஔவை மூதாட்டியாரைப் பற்றியும் இவர்,

"ஔவைக் கிழவி நங்கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி"

என்று வாயாரப் புகழ்கிறார்.

சமீபகாலத்தில் தோன்றிய நம் தேசியகவி பாரதியாரைப்பற்றி இவர் பாடியிருப்பதைப் பாருங்கள்!

"உள்ளம் தெளியுமொரு பாட்டிலேயடா—மிக்க
ஊக்கம் பிறக்குமொரு பாட்டிலேயடா
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலேயடா—ஊற்றாய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டிலேயடா."

இவருடைய கவிதைகளில் உள்ள எளிய நடைதான் அவைகளின் ஜீவநாடி. குழந்தைக்கும் தெள்ளென விளங்கும் சொற்களே நிரம்பியிருக்கும் இவர் செய்யுட்களில், இவருடைய கற்பனு சக்தியும் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்தது.

அன்பின் வெற்றி என்ற தலைப்பிட்ட இவருடைய மீராபாயின் கதையை விளக்கும் கவிதையில் வரும்,

"காசியிலே இறப்பதனல் பயனென்றில்லை
காஷாயம் தரிப்பதோரு வேஷமேயாம்"

என்னும் அடிகளைப் படிக்கையில் அருணகிரியாரின் திருப்புகழில் வரும்,

"காவியுடுத்தும் தாழசடை வைத்தும்
காசினி முற்றும் திரியாதே'

என்னும் அடிகள் நம் நினைவுக்கு வருகின்றன. மேற்கூறிய இவருடைய கவிதையில் அடுத்தாற்போல் வரும்,

"ஆசையினை வேருடனே அறுக்க வேண்டும்
அழியுமுடல் அபிமானம் அகற்ற வேண்டும்"

என்னும் அடிகள் பகவத்கீதையில் வரும், 'பற்றற்ற வினை செய்தல்' என்னும் போதனையை நமக்கு நினைவூட்டுகின்றன.

அன்பின் வெற்றியில் இவர் புனைந்திருக்கும் 'அன்னையே தாயே அழகன் ஜகதீசன்' என்ற அடியுடன் தொடங்கும் செய்யுட்கள் ஆண்டாளின் 'வாரணமாயிரம்' என்று ஆரம்பிக்கும் கனுப்பாட்டை நமக்கு ஞாபகமூட்டுகின்றன.

இவருடைய கவிதைகளுக்கு இலக்காயிருக்கும் விஷயங்கள் பலதிறப்பட்டவை. 'கோபுரம்சேர் கோயிலோடு குடிசைகட்டும் கையே' என்று மனிதனின் கைத்திறனைப்பற்றியும் இவர் பாடுவார். அதே மூச்சில், 'அல்லும் பகலும் அலைகடலே—உனக்கு அலுப்பும் இலையோ கருங்கடலே!' என்று கடலைப்பற்றி

யும் வியந்து பாடுவார். சந்திரன், வெண்ணிலா, மலர்கள், குழந்தை, முதலிய விஷயங்களைப்பற்றி இவர் பாடியிருக்கும் கவிதைகளின் பாணி பாரதியாரின் இனிய பாணியை ஒத்திருக்கும்.

இயற்றமிழில் இவ்வளவு மேதையுள்ள இவர் இசைத்தமிழிலும் வல்லுநராயிருக்கிறார். எழில் பொருந்திய சுத்தத் தமிழ்க் கீர்த்தனங்களும் பதங்களும் பல இவரால் பாடப்பட்டிருக்கின்றன. அவற்றுள் பிரசித்தமடைந்துவிட்டவையென,

“தெள்ளத் தெளிந்ததையா—உமது
கள்ளத் தனமெல்லாம்”

என்னும் பல்லவியுடன் தொடங்கும் நிந்தாஸ்துதியையும்,

“நல்ல சகுனம் நோக்கிச் செல்லடி—சென்று
நான்படும் பாடவர்க்குச் சொல்லடி”

என்ற பல்லவியைக் கொண்ட பதத்தையும் குறிப்பிடலாம்.

இவருக்குப் பணத்தில் ஆசையே இல்லை. ஒரு முறை இவருக்குச் சம்மானமாக அளிக்கப்பட்ட பெருந்தொகையாகிய ஆயிரம் ரூபாயையும் இவர் ஒரு பள்ளிக்கூடத்தில் பரிசளிப்பதற்காகத் தர்மம் செய்துவிட்டார்.

இவருக்குப் புகழிலும் பற்றில்லை. தம்மைப் பற்றி விளம்பரம் செய்துகொள்வதை இவர் வெறுக்கிறார். அதனால்தான் இவரைப்பற்றிய தகவல் எதுவும் இவரிடத்திலிருந்து நமக்குக் கிடைப்பதில்லை. அதிலும் பிரசுரத்துக்காக விரும்புகிறோம் என்று தெரிந்தால், வாயை இறுக மூடிக்கொண்டுவிடுவார். ‘பூக்கடைக்கு விளம்பரமேன்?’ என்னும் பழமொழியின் உண்மையை நன்கு அறிந்தவர்போலும்! ஆதியில் தாம் இயற்றிய நூல் ஒன்றைத் தம் உறவினர் ஒருவர் பெயரால் வெளியிடச் சம்மதித்தார். எனவே இவருடைய வாழ்க்கை தூய தன்னலமற்ற வாழ்க்கையாக அமைந்து, அடக்கத்துக்கும் அமைதிக்கும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

1940-டிசம்பரில் 24-ஆம் தேதியன்று சென்னையில் பச்சையப்பன் கல்லூரியில் திரண்டிருந்த பெருத்த கூட்டம் ஒன்றில் இவருக்குக் 'கவிமணி' என்னும் செவிக்கினிய, பொருத்தமான பட்டம் வழங்கப்பட்டது.

சமீபத்தில் சென்னை சர்க்கார் ஏற்படுத்திய ஒரு நிபந்தனையின் பயனாக இவருக்குத் தமிழ் ஆஸ்தான கவிப் பதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அப்பதவி வேறு ஒருவருக்கு அளிக்கப்பட்டுவிட்டது. பரவாயில்லை; அவருக்குப் பிறகாவது அப்பதவி இவருக்கு அளிக்கப்பட்டால் சென்னை அரசாங்கத்துக்கே அது ஒரு கௌரவமாக இருக்கும். அப்பதவியை வகிக்க அத்தனை தகுதி இவருக்கு உண்டு.

காந்தி மகானிடத்தில் மிக்க ஈடுபாடுள்ள இவர் அப்பெரியார் மரணமடைந்ததைக் கேட்டவுடன் திடுக்கிட்டுப் போனார். அப்போது தமக்கு உண்டான உணர்ச்சியை அடியிற்கண்ட விருத்தத்தால் தெரியப்படுத்தினார்:

"திடம்படைத்த கல்நெஞ்சம் திடுக்கிட்டு
நடுநடுங்கிச் சிதறிப் போக
மடம்படைத்த மாபாவி வஞ்சனையால்
காந்திமகான் மடியச் சுட்டான்
உடம்பனைத்தும் வாயாக அழுதாலும்
உறுதுயரம் ஒழிந்தி டாதால்
இடம்படைத்த உலகாளும் இறையேநீ
எங்கொழிந்தாய் இந்நாள் ஐயா?"

இச்செய்யுளின் மூன்றும் அடியாகிய, 'உடம்பனைத்தும் வாயாக அழுதாலும் உறுதுயரம் ஒழிந்தி டாதால்' என்பதில் உள்ள கற்பனை அபூர்வமானது. அதன் ஈற்றடியாகிய, 'இடம்படைத்த உலகாளும் இறையே நீ எங்கொழிந்தாய் இந்நாள் ஐயா?' என்பதை நோக்குகையில், 'பரந்து கெடுக உலகியற்றியான்' என்னும் திருக்குறள் அடியில் ஆசிரியர் படைப்புக் கடவுளுக்கே ஒரு சாபம் கொடுத்திருப்பது நம் நினைவுக்கு வருகிறது!

## 10

# சபா நாயகர்

சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் சென்னை ராஜதானிக் கலாசாலையில் நான் மாணவனாக இருக்கையில் அந்த நிலையத்தின் தமிழ் மாணவர் சங்கத்தின் சார்பில் பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய, 'ரத்னாவளி' என்னும் நாடகம் நடிக்கப்பெற்றது. இது நடிக்கப்பட இருந்த நாளுக்குப் பல நாட்களுக்கு முன்னிருந்தே வழக்கம்போல் ஒத்திகைகள் ஏற்பாடாயின. நாடகத்தில் பங்கு எடுத்துக்கொண்ட மாணவர்கள் (நான் உட்பட) மட்டுமே அவ்வொத்திகைகளுக்கு வருவார்கள். அதில் சம்பந்தமில்லாத ஒருவர்மட்டுமே ஒத்திகை நடந்த ஒவ்வொரு நாளும் அங்கே வந்து ஆரம்பம் முதல் கடைசி வரையில் இருந்து போவார். சங்கத்தின் கூட்டுக் காரிய தரிசி என்னும் ஹோதாவில் அவர் அங்கே வந்து போவது அவருடைய கடமையாயிற்று. பேர்வழி, பார்வைக்கும் குணத்திலும் சற்று அப்பாவி மனுஷன். ஆகையால் நாடகத்தில் கலந்துகொண்ட நடிகர்கள் அவரைச் சதா கேலிசெய்த வண்ணம் இருப்பார்கள். அவரும் இதைப் பொருட்படுத்தாமல் தம் கருமத்திலேயே கண்ணாக இருப்பார்.

இவர் தொலைதூரத்திலிருந்து (அதாவது நுங்கம்பாக்கத்திலிருந்து) வருபவராதலால் ஒரு ஸைகிளில் வந்து போவார். ஒத்திகை முடிந்து வீடு திரும்புகையில் வெகு நேரம் ஆகிவிடுமாகையால் ஸைகிளுக்குத் தினந்தோறும் ஒரு விளக்கை எடுத்து வருவார். காலேஜை அடைந்ததும், பத்திரத்தை உத்தேசித்து அவ்விளக்கை வண்டியினின்றும் கழற்றித் தம் அருகிலேயே வைத்திருப்பார். நடிகர்களுள் குறும்பரான ஒருவர் இவ்விளக்கை ஒரு நாள் எடுத்து மறைத்து வைத்துவிட்டார். ஒத்திகை முடியும் தறுவாயில் இருக்கையில் விளக்குச் சொந்தக்காரர் தம் விளக்கைக்

காணுமல் தவித்தார். அங்குள்ள ஒவ்வொருவரையும் அதைப்பற்றிப் புலன் விசாரித்தார். கடைசியாகக் கூரையை நோக்கியவாறு நின்றுகொண்டிருந்த ஒரு மாணவரை அணுகி, "நரசிம்மா, (அதுதான் அந்தக் குறும்பனின் பெயர்) என் விளக்கைக் கொடுத்துவிடப்பா. நீதான் அதை ஒளித்து வைத்திருக்கிறுய். வீட்டுக்குப் போக நேரமாகிறது" என்று இவர் கெஞ்சிக் கேட்டார். "இரப்பா, உனக்காக அதைத்தான் நானும் தேடிப்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று சொல்லி, மேலும் கூரையையே பார்த்துக்கொண்டிருந்தான் அக்குறும்பன். கள்ளங்கபடு இல்லாத மனத்தையுடைய இவர், கூரையில் தம் விளக்கு எப்படி இருக்கும் என்பதைக்கூடச் சிந்திக்காமல் அவரை அப்படியே நம்பினுர். நாங்கள் எல்லோரும் இதைக் கண்டு 'கொல்' என்று சிரித்தோம். சிறிது நேரத்துக்கெல்லாம் விளக்கு வெளிவந்தது. சிரிப்பில் எங்களுடன் இவரும் கலந்துகொண்டார்.

அப்போது அவ்வளவு சாதுவாயிருந்த இப்பேர்வழிதான் பின்பு சுதந்தர இந்தியாவின் சென்னைச் சட்டசபையில் முதல் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட இருந்த ஐ. சிவஷண்முகம்பிள்ளை என்பவர். மாணவராயிருக்கையிலேயே தம் தூய குணத்தால் பிற மாணவர்களால் இவர் நன்கு மதிக்கப்பட்டார்.

அக்காலத்தில் அச்சங்கத்தின் காரியதரிசியாயிருத்தல் ஒரு சிரமமான காரியம். சங்கத்தின் செலவுக்கு அதன் தலைவரான தமிழ்ப்பண்டிதரிடமிருந்து பணம் பெறுதல் பகீரதன் கங்கை கொணர்ந்த மாதிரி இருக்கும். செலவுக்குக் கொடுக்கும் பணத்தின் தொகையை நிர்ணயிக்க ஓரே பேரம் பேசுவார் பண்டிதர். கத்திரிக்காய் வாங்குகையில் கூடைக்காரியிடம் பெண்கள் விலை பேசுவதையும் தோற்கடிக்கும் இது! கொடுக்கும் பணத்தையும் சிறுகச் சிறுக அணு பைசாவாகவே கொடுப்பார். சங்கத்தின் சார்பில் ஏதாவது கூட்டம் ஏற்பாடானுல், சொற்பொழிவு நடத்த இசையும் பிரமுகருக்கு அவமானம் உண்டாகாமல் இருக்கும்படி கூட்டத்துக்குப் போதிய ஆள் சேர்க்க வேண்டும். அதற்காகக் காரியதரிசியே போய்த் தெருவில் நின்று

இரண்டு கடற்கரைக்குக் காற்று வாங்கப் போகிறவர் களையெல்லாம் உள்ளே வரும்படி வருந்தி அழைக்க வேண்டும். ஆங்கில மொழியில் இருந்த மோகத்தால் பெரியோர்க்கள், மாணவர்கள் எல்லோரும் தமிழை அவமதித்த காலம் அது. இவ்வளவு இடையூறுகளுக்கிடையே சங்கத்தைத் திருப்திகரமாக அவ்வருஷம் நடத்திய பெருமை இவருக்குக் கிட்டியது.

இத்தகைய சல்லிய சாரத்தியம் செய்த அப்பண்டித ரிடம் இவருக்கு மிகவும் பக்தியும் மதிப்பும் உண்டு; அதுவும், பழுத்த வைதிகரும் பிற்போக்கான சமூகக் கொள்கைகளும் உள்ள அப்பண்டிதரிடத்தில்! சமீபத்தில் அவரைப் பாராட்டி என்னிடத்தில் இவர், “புத்தகம் ஒன்றை எதிரில் வைத்துக்கொண்டு அடிக்கடி அதைப் பார்த்துப் படிக்காமல், தாமாகவே சரளமாக, மனப் பாடமாகப் பாடங்களைச் சொல்லிக்கொடுப்பாரே அவர்” என்று சொல்லி மகிழ்ந்தார்.

இவர் பிறந்தது 1901-ஆம் வருஷம் பிப்ரவரி மாதத்தில். “பிறந்த தேதியைக் குறிப்பிடுங்களேன்” என்று நான் இவ ரைக் கேட்டுக்கொண்டபோது, “வேண்டவே வேண்டா மப்பா; அப்புறம் பிறந்த தினம் கொண்டாட என் பிராணனை வாங்கிவிடுவார்கள்” என்று விளம்பரத்தை வெறுக்கும் இவர் அதைச் சொல்ல மறுத்தார்! இவர் பிறந்தது சென்னையில்தான். அதிலும் இவர் தற்போது வாழ்ந்துவரும் நுங்கம்பாக்கம் என்னும் பகுதியிலே தான். இவர் தந்தையாரின் பெயர் தீ. ஜகந்நாதம் பிள்ளை என்பது. இவர் அன்னையாரின் பெயர் ஜயலக்ஷ்மி அம்மாள் என்பது. இவ்விருவருக்கும் இவர் இளைய புதல்வராகத் தோன்றினார்.

இவருடைய தந்தையார் சொற்ப பூஸ்திதிக் காரர். என்னிடம் இவர் இதைத் தெரிவிக்கையில், நான் குறுக்கிட்டு, “ஏன் ‘சொற்ப’ என்னும் சொல்லை அவ்வளவு அழுத்திச் சொல்லுகிறீர்கள்?” என்று நான் கேட்டேன். “ஆமாம், இரண்டொரு வீடுகளுக்கே சொந்தக்காரரான ஒருவரை வேறு எப்படிச் சொல்வது? நாங்கள் எல்லாம் ஏழைகள் தான் அப்பா” என்று சொன்னார். தற்புகழ்ச்சி

செய்துகொள்ளும் வழக்கம் மலிந்து கிடக்கும் இக்கா
தில் இயற்கைக்கு எவ்வளவு மாறுபட்டதாயிருக்கி
இவருடைய மனப்பான்மை என்று எண்ணி நான் விய
தேன்!

பரம்பரை பரம்பரையாக இவருடைய முன்னோர்கள் சென்னையைச் சேர்ந்தவர்களே. இவர் தற்போது இருந்து வரும் வீடு இவருடைய பாட்டனார் காலத்தில் கட்டப் பட்டதாம்.

இவருடைய பெற்றோர்கள் விசேஷ கடவுள் பக்தி வாய்ந்தவர்கள். இவருடைய தந்தையார் இவர் இருந்து வரும் பிராந்தியத்திலுள்ள முக்கிய கிராமதேவதையான ஓர் அம்மன் கோவிலுக்குத் தர்மகர்த்தாவாக இருந்தா ராம்!; அவ்வம்மனிடம் விசேஷ பக்தி உள்ளவராம்.

இவர் ஆரம்பத்தில் வெஸ்லி காலேஜ் ஹைஸ்கூலில் படித்தார். பின்னர் கிறிஸ்தவ காலேஜ் ஹைஸ் கூலில் கல்வி பயின்றார். இவருடைய கலாசாலைப் படிப்பு, சென்னை ராஜதானிக் கலாசாலையிலும், லயோலா கலாசாலையிலும் நடந்தேறியது. இவர் ராஜதானிக் கலாசாலையில் 'இன்டர்மீடியட்' வகுப்பில் படிக்கையில் தான் இவருடன் இரண்டு ஆண்டுகள் சேர்ந்து படித்து நெருங்கிப் பழக எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது.

இவருக்குத் தமிழில் அப்போதே உள்ள ஆர்வந் தான் இவரை ராஜதானிக் கலாசாலையில் தமிழ் மாணவர் சங்கத்தின் இரு உபகாரியதரிசிகளுள் ஒருவராக ஆக் கியது.

லயோலா கலாசாலையில் படித்து இவர் பி. ஏ. பட்டம் பெற்ற பின்பு, பிரத்தியேகமாய்ப் படித்து எம். ஏ. பரீக்ஷையில் தேறி அந்தப் பட்டமும் பெற்றார்.

இவர் மாணவராக இருக்கையில், ஹாக்கி என்று சொல்லப்படும் ஒருவிதப் பந்தாட்டத்தில் தேர்ச்சி பெற்று, கலாசாலைகளுக்குள் நடந்த போட்டிப் பந்தயம் ஒன்றில் கலந்துகொண்டார். ஆனால், அப்போது எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவரின் துஷ்டத்தனத்தால் இவருக்குக் காலில் பலத்த அடி ஒன்று பட்டு அதனால்

இவர் அநேகமாக உணர்வையே இழந்துவிட்டார். அது முதல் அவ்விளையாட்டை அடியோடு விட்டுவிட்டதுடன், பிறகு வேறு எந்த விளையாட்டிலும் இவர் தம் கவனத்தைச் செலுத்தவில்லை.

எம். ஏ. பட்டம் பெற்றவுடன் இவர் நேராகச் சமூகத் தொண்டில் ஈடுபட்டார். இது சற்று வியப்பளிக்கக்கூடிய செயலே. ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த இவருக்குப் பெருத்த உத்தியோகம் எது வேண்டினும் அப்போது கிட்டியிருக்கும். உண்மையில், அத்தகைய பெருவாரியான சம்பளங்கள் உள்ள பதவிகள் பல இவரைத் தேடி வந்தனவாம். சென்னையில் பொப்பிலி ராஜா ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் முதல் மந்திரியாக இருக்கையில் அவரே நேராக இவருக்குப் பல உயர்தரப் பதவிகள் அளிக்க முன்வந்தாராம். ஆனால் இவர் ஒரே பிடிவாதமாக அவைகளையெல்லாம் ஏற்க மறுத்து, தாம் பிறந்த சமூகமாகிய ஹரிஜனப் பிரிவின் முன்னேற்றத்துக்காக உழைப்பதிலேயே தம் ஆயுள் பூராவையும் கழித்துவிடுவதென்று தீவிரமாக எண்ணங் கொண்டுவிட்டார். அதிலும், தென்னிந்தியா முழுவதிலும் ஹரிஜனங்களுக்குள் இவர்தாம் முன்னதாக எம். ஏ. படித்தவர். பிற்போக்கான ஜஸ்டிஸ் கட்சியின் ஆதிக்கம் பலத்திருந்த அக்காலத்தில் இவர்மட்டும் அந்தக் கட்சியில் சேரச் சம்மதித்திருந்தால், இவருக்குப் பெரும் பதவிகள் பல எளிதில் கிடைத்திருக்கும். ஆனால் இவர் அவை ஒன்றுக்கும் அசைந்துகொடுக்காமல், ஒரு கட்சியிலும் சேராது தம் சமூகத்தின் முன்னேற்றத்துக்குப் பாடுபடுவது என்ற ஒரே லட்சியத்துடன் தம் வாழ்க்கையை அர்ப்பணம் செய்வதெனக் கங்கணங் கட்டிக்கொண்டது மெச்சத்தக்கதே.

படிப்பை முடித்துக்கொண்டு பொதுஜன சேவையில் இறங்குகையில் முதல் முதலாக இவருக்குக் கிடைத்த பொறுப்புள்ள பதவி சென்னை நகர பரிபாலன சபையில் அங்கத்தினர் ஆனதே. ஆரம்பத்தில் இவர் அப்பதவிக்கு அதிகாரிகளால் நியமனந்தான் செய்யப்பட்டார். என்றாலும் கூடிய சீக்கிரத்தில் அப்பதவிக்கு

இவர் ஒரு தொகுதியாரால் தேர்ந்தே எடுக்கப்பட்டு விட்டார். வாக்காளர்களின் மதிப்பு இவருக்கு அப்போதே ஏற்படத் தொடங்கிவிட்டது. 1934-ஆம் ஆண்டில் நிகழ்ந்த இம் முதல் தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து இவர் அச்சபையின் அங்கத்தினராக இருந்து வந்தார். அப்போதெல்லாம் இவர் ஒரு கட்சியின் சார்பிலும் நிற்காமல், தனிப்பட்ட அங்கத்தினராகவே நின்று வெற்றிபெற்ருர். ஒரு சமயம் தேச மக்களின் மதிப்பைப் பெரிதும் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சியின் அபேக்ஷகர் ஒருவரைத் தேர்தலில் எதிர்த்து நின்று, தோற்கடித்து இவர் வெற்றி பெற்ருர். இதை நோக்குங்கால், வாக்காளர்களிடம் இவருக்கு எவ்வளவு செல்வாக்கு இருந்துவந்தது என்பது நன்கு புலப்படும். அக்காலத்தில் தேர்தலில் ஒருவர் வெற்றிபெற வேண்டுமானுல், ஒன்று அந்நிய அரசாங்கத்துடன் ஒத்துழைத்து அதிகாரம் செலுத்தி வந்த ஜஸ்டிஸ் கட்சியில் சேரவேண்டும்; இல்லேயேல் அந்தச் சர்க்காரை எதிர்த்துப் போரிட்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்திருக்க வேண்டும். இந்த இரு கட்சிகளிலும் சேராமல் ஒதுங்கி நின்று, தன்னந்தனியே தேர்தல்களில் போட்டியிட எண்ணுவதே ஒரு துணிகரமான செயல். அதைச் சாதிப்பதற்கு அத்தொகுதியில் உள்ள வாக்காளரின் நன்மதிப்பும் செல்வாக்கும் அவசியம் இருக்க வேண்டும். ஆதியிலிருந்தே இவருக்கு அவ்விரண்டும் இருந்தன என்பதற்கு இவருடைய வெற்றியே ஒரு சிறந்த உதாரணம்.

நகர பரிபாலன சபையில் இவர் செய்த தொண்டுக்குப் பலனுக இவர் 1937-38-இல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பதவியில் இவர் நகருக்கு ஆற்றிய தொண்டுகள் பல. அவ்வாண்டில் இவர் செய்த சேவையை மெச்சி இவர் இருந்து வரும் தெருவுக்கே, "மேயர் ஜ. சிவஷண்முகம் பிள்ளே தெரு" என்னும் பெயர் இடப்பட்டிருக்கிறது. அதற்கு முன் இந்தத் தெருவுக்கு, 'குட்டி ஆதி திராவிடத் தெரு' என்ற பெயர் வாய்த்திருந்தது.

1935-ஆம் ஆண்டில் சென்னைச் சட்டசபையில் அங்கத்தினராக இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இது முதல் நகர பரிபாலன சபையுடன் நிற்காமல் இவருடைய உழைப்பு சட்டசபையிலும் தொடங்கிற்று. 1935-இலிருந்து 1938 வரையிலும் இவர் 'செனெட்' என்னும் சென்னைச் சர்வகலாசாலைப் பரிபாலன ஸ்தாபனத்துக்கும் நியமிக்கப்பட்டார். அதே வருஷங்களில் அண்ணுமலைச் சர்வகலாசாலை ஸ்தாபனத்திலும் இவருக்கு அங்கத்தினர் பதவி கிடைத்தது.

கடைசியாக நாட்டில் சென்னைச் சட்டசபைத் தேர்தல் நடந்தபோது அதுகாறும் ஒதுங்கியிருந்த இவர் காங்கிரஸ் மகாசபையில் ஒரு நான்கு அணு அங்கத்தினராகச் சேர்ந்து அந்தப் பெருங் கட்சியின் சார்பில் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அச்சபையின் சபாநாயகராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்போது சென்னைச் சட்டசபையில் சுதந்தர இந்தியாவின் முதல் சபாநாயகராகச் சிறப்புடன் விளங்குகிறுர்.

சமூகத் தொண்டில் ஈடுபட்டதால் இவருக்கு மக்களுடன் பழகுவதிலும் அவர்களுடைய சுக துக்க உணர்ச்சிகளை நன்கு அறிவதிலும் பரந்த அநுபவம் ஏற்பட்டுவிட்டது. இந்த அநுபவத்தைப் பயன்படுத்திக்கொண்ட விசாரணைக் கமிட்டிகளும் கமிஷன்களும் பல. அவைகளுள் முக்கியமானவைகளாக அடியில் கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

அரசியல் சம்பந்தமாக இங்கே அனுப்பப்பட்ட 'சைமன் கமிஷன்' ஹரிஜனங்களுக்குத் தேவையான உரிமைகளை எடுத்துரைத்து அவர்கள் சார்பாக வாதிப்பதற்கு இவருக்குச் சந்தர்ப்பம் கொடுத்தது. தொழிலாளிகள் சம்பந்தமாக விசாரணை செய்ய வந்த 'விட்லி கமிஷன்' முன்பும் இவர் வாக்குமூலம் கொடுத்து விசாரிக்கப்பட்டார். வாக்காளர் தொகுதிகளை நிர்ணயிப்பதற்காக இங்கே அனுப்பப்பட்ட 'லோதியன் கமிஷனும்' இவருடைய அநுபவத்தைப் பயன்படுத்திக் கொண்டது.

தேசத்தைத் துண்டு போடாமலே (அதாவது பாகிஸ்தான், இந்தியா என இரு பிரிவுகளாகப் பிளக்காமல்) சுதந்தர நாடு ஆக்குவதற்காக ஒரு திட்டம் வகுப்பதற்காக அமைக்கப்பட்ட 'சப்ரூ கமிஷனி'லும் இவர் ஓர் அங்கத்தினராகச் சேவை செய்தார். ஸர் டி. விஜயராகவாசாரியாரின் தலைமையில் விசாரணை நடத்திய 'கூட்டுறவுச் சங்கக் கமிஷனிலும்' இவர் ஓர் அங்கத்தினராக இருந்தார்.

இவர் நடுத்தர உயரமுள்ளவர். நிறம் கருமைதான். தோற்றத்திலேயே சாதுவான ஒரு நல்ல மனிதர் என்பது விளங்கும். இதைத்தான் சமீபத்தில் நம் கவர்னர் ஜெனரல் ராஜாஜியும் ஒரு சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டினர். சென்னைச் சட்டசபையில் அவர் மகாத்மா காந்தியின் படத்தைத் திறந்துவைக்கையில், முதல் முதலில் அச்சபையின் சபாநாயகரைக் குறித்து, "உங்கள் சபாநாயகர் ரொம்பவும் நல்ல மனிதர்" என்று சொல்லிவிட்டே பின்பு மேற்கொண்ட காரியங்களை ஆரம்பித்தார்.

பல பொதுக்கூட்டங்களுக்கு இவரைச் சதா மக்கள் அழைத்தவண்ணமாகவே இருக்கின்றனர். இவரும் ஒன்றையும் மறுக்காமல் அவைகளில் கலந்துகொண்டு நடத்திவருகிறுர். எனவே தம்மைப் பேட்டி காண வருவோர்களைப் பார்த்துப் பேசுவது என்பதுதான் இவர் தினந்தோறும் செய்யும் முதல் காரியம். "இவர்கள் முகத்தில்தான் நான் காலையில் எழுந்தவுடன் விழிக்கிறேன்" என்று இதைப்பற்றிச் சமீபத்தில் இவர் என்னிடம் சொன்னுர்.

எனவே, காலையில் 8, 8½ மணி வரையில் தம்மைக் காண வருபவர்களைக் கண்டு அவர்களைத் தக்கபடி திருப்தி செய்து அனுப்புவது இவர் வேலை; பின்பு தெய்வ ஆராதனை. மீண்டும் வருவோரைக் கண்டு அளவளாவுதல்; அதற்கப்புறம் நாட்டின் தினசரிப் பத்திரிகைகளைச் சற்றுப் புரட்டிப் பார்ப்பது; பின்னர் ஆபீஸ் வேலை. இதுதான் இவருடைய வாழ்க்கைத் தினசரியில் ஏடு.

"அதென்ன ஆபீஸ் வேலை? அதுவும் வீட்டில் செய்யும்படி அவ்வளவு அவசர வேலை?" என்று நான் சற்று வியப்புடன் அவரைக் கேட்டதற்கு அவர், "சரிதான், போங்கள். இவர்கள் சட்ட சபையில் சரமாரியாகக் கேட்கும் கேள்விகள் இருக்கின்றனவே. அவைகளை முன் கூட்டியே ஆராய்தல், அவைகளில் சிலவற்றுக்குக் கவர்னரின் அநுமதியைப் பெறுதல், அதற்காகச் செய்ய வேண்டியவற்றைத் தயார் செய்தல், அரசாங்க இலாகாக்களின் தகவல்களையும் விடைகளையும் பரிசோதனை செய்தல், இவைபோன்ற வேலை எனக்குச் சதா இருந்துகொண்டே இருக்கும். சிக்கல்களுள்ள கேள்விகளைச் சரிவர ஆராய்ந்து முடிவு கட்டச் சில சமயங்களில் மாதக் கணக்குக்கூட ஆகும்" என்று சொன்னார்.

சபாநாயகரான இவர் பக்ஷபாதமின்றி எல்லாக் கட்சியினரையும் சமமாகவே பாவித்து, நடுநிலைமை வகிக்கிறார் என்பதை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒப்புக்கொண்டு பல முறை வெளிப்படையாக அதைச் சட்ட சபையிலேயே தெரிவித்தும் இருக்கின்றனர். அந்தப் பதவியில் இவர் அடிக்கடி தீர்ப்புகள் அளிக்கவேண்டி வரும். அந்தத் தீர்ப்புகள் எல்லோருக்கும் திருப்தியளிக்கும் வண்ணம் இருக்கின்றன. இவ்விஷயத்தில் இவர், "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து, ஒருபால் கோடாமை சான்றோர்க் கணி" என்னும் குறள் போதனைப்படி நடந்து வருகிறார். இந்தத் தீர்மானங்களை இவர் காலம் கடத்தாமல் உடனுக்குடன் கொடுப்பதும், கொஞ்சமும் சந்தேகத்துக்கு இடங்கொடுக்காமல், ஆணித்தரமாக வெட்டொன்று துண்டிரண்டு என்று சொல்லிவிடுவதும் பிறரால் பெரிதும் பாராட்டப்படுகின்றன.

தேசத்தில் சட்டம் ஒன்றை நிறைவேற்றிவிடலாம். ஆனால் அதை அமலுக்குக் கொண்டுவருவதுதான் சிரமம். இது கடன் வாங்கித் திருப்பிக் கொடுக்கத் தவறிய ஒருவன்பேரில் டிகிரி வாங்குவது போன்றது. டிகிரியை எளிதில் பெற்றுவிடலாம். ஆனால் அதை நிறைவேற்றிப் பணத்தை வசூல் செய்வதில்தான் சிரமம் எல்லாம். அம்மாதிரியே இந்த மாகாணத்தில்

கோயில்களுக்குள் ஹரிஜனங்களை விடவேண்டுமென்னும் சட்டம் நிறைவேறியது. அந்தச் சட்டப்படி ஒவ்வொரு கோயிலிலும் அவர்களை உள்ளே செல்ல வைப்பதுதான் கடினமான செயலாக இருந்தது. இதைச் செய்து முடித்த பெருமை இவரையே சாரும். தென்னாட்டிலுள்ள முக்கியமான கோயில் ஒவ்வொன்றினுள்ளும் ஒதுக்கப்பட்ட இப்பிரிவினரை முதல் முறையாக உள்ளே அழைத்துச் சென்றவர் இவரே.

இவர் வீட்டிலிருந்து வேலை செய்யும் அறையில் சுவரில் மாட்டித் தொங்கவிட்டிருக்கும் வரவேற்பு, பாராட்டு முதலிய இதழ்களில் அவைகளை இவருக்கு வழங்கிய மக்கள் பல அடைமொழிகளால் இவரைப் புகழ்ந்திருக்கின்றனர். அவைகளுள், 'அடக்கமே உருவெடுத்த உத்தமரே' என்பது என் மனத்தை மிகவும் கவர்ந்தது. இவருடைய உண்மையான தன்மையை எடுத்துரைப்பது இந்த அடைமொழிதான். இவர் மாணவராக இருக்கையிலேயே படாடோபம் இல்லாத்தன்மையை நாங்கள் இவரிடம் கண்டோம். உடனிருந்து படித்த எங்களுள் பெரும்பாலோருக்கு இவர் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர் என்பதே அப்போது தெரியாது.

மகாத்மா காந்தியிடமும் ராஜாஜியிடமும் ஜவாஹர்லாலிடமும் இவருக்கு அதிக ஈடுபாடு எனவே அந்தத் தலைவர்களின் உருவப்படங்கள் இவருடைய அறைச் சுவர்களை அலங்கரிக்கின்றன. இவைகளுடன் சுபாஷ் பாபுவின் படம் ஒன்றையும் இவருடைய அறையில் நான் கண்ணுற்றேன். மதப்பற்றுள்ள இவருடைய மனப்பான்மையைத் தெரிவிக்க அங்கே வடலூர் அருட்பெருஞ்சோதி ராமலிங்க சுவாமிகளின் உருவப்படம் ஒன்றுக்கும் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இவர் பொழுதுபோக்குக்காகச் செய்யும் செயல்கூட ஹரிஜன சேவையேதான். சில சமயங்களில் இவர் வெளியே உலாவப் போவார். ஓய்வு நேரத்தைக் கழிக்க வேறு ஒரு பழக்கத்தையும் இவர் வைத்துக்கொள்ளவில்லை.

ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட சபை நடவடிக்கைகள் என்னும் விஷயத்தைப்பற்றி இவர் பல கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அத்துறையில் பழுத்த அநுபவம் உள்ள இவருடைய கருத்துக்கள் படிப்போருக்குப் பயனளிப்பவை என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பணமும், பதவிகளும், செல்வாக்கும் பெருத்தால் மக்கள் மனம் மாறுபடுவர் என்பார்கள். ஆனால் நம் சபாநாயகர் இவ்விதிக்கு விலக்காக நிற்கிறார். அந்த நாட்களில் ஒரு பிரபல ஆங்கிலோ இந்தியத் தலைவரைப்பற்றி நான் கேள்வியுற்ற விஷயம் ஒன்று இங்கே குறிப்பிடத் தக்கது. வெளிப்படையாக அப் பிரிவினரின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட இவர், தம் சொந்த வாழ்க்கையில் இவர்களை அருகில் அண்டவிடாமல் ஐரோப்பியருடன் கலந்துகொண்டு இவர்களைப் பிறப்பினால் இழிவானவர்கள் என்று கருதினாராம். ஆனால், நம் சபாநாயகர் இவ்வளவு செல்வாக்கு அடைந்த பின்பும், தம்முடைய பூர்விகமான வீட்டிலேயே இருந்து வந்து, எந்த எளிய மக்களுள் இவர் தோன்றினாரோ, எந்த எளியோரின் முன்னேற்றத்துக்காகத் தம் வாழ்நாட்கள் முழுவதையும் செலவிடுகிறாரோ, அந்த மக்களிடையே இருந்து வாழ்ந்து, அவர்களுடைய சுக துக்கங்களில் கலந்துகொண்டு தம் வாழ்க்கையை நடத்தி வருகிறார். இவருடைய பரிசுத்தமான, தன்னலமற்ற, குணத்துக்கு அத்தாட்சி வேறு வேண்டுமா?

முற்றும்

TAMIL NAD ... LIBRARY 101580

# புதிய வெளியீடுகள்

**வீட்டு வைத்தியர்** ... ரூ. 6/-

டாக்டர் தி. சே. சௌ. ராஜன்

ஒவ்வொருவர் கையிலும் அவசியம் இருக்கவேண்டிய புத்தகம். தாய்மை, குழந்தை வளர்ப்பு, ஆரோக்கியம் முதலிய பல விஷயங்களைப்பற்றி டாக்டர் ராஜன் விரிவாக எழுதியிருக்கிறார். 400 பக்கங்களுக்குமேல் கொண்டது.

**மானபங்கம்** ... ரூ. 2/8

த. நா. குமாரசுவாமி

த. நா. ஸேனபதி (டாகுர் சிறுகதைகள்)

இது ரவீந்திரர் எழுதிய சில சிறுகதைகளின் தொகுதி. பல வகையான சுவைகள் கொண்ட கதைகள். மனித இயல்பின் பலவகைக் கோணங்களையும் ஆசிரியர் எவ்வளவு திறமையாகச் சித்திரிக்கிறார் என்பதைப் படித்து அறியவேண்டியது அவசியம்.

**வைராக்கியம்** ... ரூ. 2/4

வசந்தன்

(நாவல்)

துப்பாக்கி முனையில் அண்ணனும் தங்கையும் சந்தித்துக் கொள்ளுகிறார்கள். அதுவரையிலும் யாரென்று தெரியாமல் இருந்த தந்தை திடீரென்று இருவருக்கும் இடையே தோன்றுகிறார். ரசமான முடிவு.

---

**கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை - 4.**